செப்டம்பர், 1999
விலை ரூ. 10.

www.padippakam.com

# கவிதாசரண்

இவ்விதழில் வந்துள்ள

## தன்மையம்

அடுத்த இதழில்
நிறைவுறும்.

அடுத்த இதழ்
அக்டோபர், 1999 இல்
வெளிவரும்

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# அடங்கல்

—கவிதாசரண்

அரிதாய் ஒரு கணம்: காற்றின் தடம் போல வந்தது; அடையாளம் பதிக்காமல் போனது. இனி அது வராது என்றான பின் தனித்திருந்தேங்கும் மனப்புலனில் நினைவதிர்வாய் மீட்டுருவாகிறது; நெக்குவிட்டுத் தளும்புகிறது. வாழ்க்கையின் அர்த்தமென்பதே மனப்புலனின நிழல்வெளியில் வளர்ந்தடரும் முளைப்பாலிகைதாமா?....

அது நிழல் சாய்வதற்கான நேரம். பல்கலைக் கழக ஒளிபரப்பைப் பார்க்கும் போதே வழக்கமாய்ப் பகலுணவு கொண்டாயிற்று. அடுத்து வரும் செய்தி வாசிப்பையும் கேட்டு முடித்தபோது, வீட்டு முன் வாசலில் வெளியார் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்த துணைவி உள் வந்து, "உங்களைப் பார்க்க நம்ம சொந்தக்காரங்க யாரோ வந்திருக்காங்க. உங்க மாமா பொண்ணாம்," என்றாள்.

"யாரு? உனக்குத் தெரியலையா?"

"எனக்கு உங்களை மட்டுந்தானே தெரியும்?"

"சரி, வரச் சொல்லு."

வந்தவள் கைகூப்பி வணங்கினாள். ஏற்கும் சலனத்தோடு ஏறிட்ட பார்வையில் ஒன்றும் பிடிபடவில்லை என்றாலும் ஒரு மின்தொடுகை போல் பிலுபிலுவென்று மயிர்க்கால்களில் சிலிர்ப்பு ஓடியது.

"வாங்க," என்று சொல்லிக் கைபற்றி உள்ளே அழைத்து வந்து பாய் போட்டு அமர்த்தினாள் துணைவி. அமர்ந்த இடம் ஒரு கூடுதல் ஈர்ப்புக்குள்ளானது.

"என்னைத் தெரியலிங்களா? நெய்வேலியிலிருந்து வர்றேன்."

க்றீச்சென்ற திருகல். எங்கோ ஒரு மதகு உடைந்தது. புகை மண்டலமாய்

படிப்பகம்

www.padippakam.com



நீரின் பீறல். பார்வைக்குள் அந்த முகம் உள்ளுறை பிம்ப மாய் வந்து பதிந்துகொண்டது.

“தெரியுதும்மா. நல்லாருக்கியா?” என்று கேட்டு, துணை வியைப் பார்த்து, “உனக்குத் தெரியுதா? செல்லம்மா,” என் றதும் புரிந்து கொண்டவளாய் அவள் கையைப் பற்றிக் கொண்டு அருகில் அமர்ந்தாள்.

‘கடைசியில் இந்த முகத்தைக் கொண்டு வந்து, காட்டத் தோணிச்சே’ என்று சொல்லத் தோன்றியது. சொல்ல வில்லை. ‘என் பந்தம், என் பற்றுக்கோடு’ என்று கூவத் தோன்றியது. ஆனால் எப்போதும் போலப் புரண்டுகொடுக் காத கல்லாகக் காட்சிப்படுவதே இயல்பாக வந்தது.

“எழுந்து வாங்க. முதல்ல சாப்பிடுங்க,” என்றாள் துணைவி.

“இல்ல. வேண்டாம். சாப்பிட்டுட்டுதான் வந்தேன்,” என் றாள் அவள்.

“கொஞ்சம் பழங்களாவது கொடேன்,” என்றதும் எழுந்து சென்று, ஒரு மாம்பழத்தை எடுத்து, மளமளவென்று துண்டு களாக்கித் தட்டில் நிறைத்து அவள் முன் வைத்தாள். நீர் கொண்டு தந்தாள். நகர்த்தும் மின்விசிறியை அவளருகில் வைத்து சீராக ஓடவிட்டாள்.

“எடுத்துக்கம்மா.”

அவள் பேசாமல் இருந்தாள்.

“நீங்க பேசிக்கிட்டிருங்க. நான் இந்தப் பசங்களைக் கவனிச்சிட்டு வர்றேன்,” என்று இருவருக்கும் பொதுவாகச் சொல்லிவிட்டு வெளியேறினாள் துணைவி.

“நல்லாருக்கீங்களா?” என்றாள். ‘இல்லை’ என்று அவள் நம்புவதாகப் பட்டது. அதை மறுதலிப்பதால் என்ன ஆகிவிடப்போகிறது என்று சலித்த மனம் கூடவே ஒரு சிலிர்ப்போடு கணக்குப் போட்டது. எவ்வளவு காலம்! ஆயின இவளைப் பார்த்து முப்பத்து மூன்று ஆண்டுகள்! மாமா காலமான போது அங்கே போனதுண்டு. ஆனால் பார்க்க வில்லை.

படிப்பகம்

www.padippakam.com



பிறந்து மண்ணில் விழுந்த நாளிலிருந்து 'இவனுக்கு இவள்' என்று சொல்லிச் சொல்லி வளர்க்கப்பட்டவளை இனியும் காக்க வைத்திருக்க முடியாது என்ற நிலை வந்தபோது, பெண் கேட்டு வந்தவர்களோடு பேசச் சம்மதித்தார் மாமா.

"ஆனா ஒரு வார்த்தை. என் பொண்ணு கழுத்துல தாலி ஏறப்போற நேரத்திலகூட என் அக்கா மகன் வந்துட்டா, அவர்தான் மாப்பிள்ளை. இதுக்குச் சம்மதம்னா பேசுங்க."

பேசினார்கள். நிச்சயித்தார்கள். பெண்ணை யார் கேட்டார்கள்? எந்த வில்லங்கமும் இல்லாமல் நல்லபடியாய் திருமணம் முடிந்தது. மாப்பிள்ளயாக மாட்டாமல் போன பிறகு படிப்புக்கு அவரிடம் பட்ட கடனைக் காடுகரைகளை விற்று அடைக்கும்படியாயிற்று. போக்குவரத்து அதற்கு முன்னரே அடைபட்டுப் போயிற்று.

●

"சின்னப் புள்ளையை நான் பார்க்கக் கொடுத்து வைக்கல," என்றாள். இத்தனை சிறிய வாக்கியத்துக்குள் அடங்கி விடக்கூடியதா அந்த இழப்பு!

"அவனுக்கு அப்பா முக்கியமாப் போச்சு. உங்கிட்ட வராமப் போயிட்டான்."

இதற்குமேல் அதை மலினப்படுத்தவோ பொதுமைப்படுத்தவோ மனம் ஒருப்படவில்லை. கல் தன் இயல்பில் பொருந்திக்கொள்ளப் பிரயாசைப்பட்டது. சுட்ட மட்கலம் போன்று நொறுங்கிப் போவதிலிருந்து பிடிவாதமாகத் தன்னை மீட்டுக்கொண்டது. பிறர் முன் வைராக்கியத்துடன் தன்னைத் தற்காத்துக்கொள்வதே கல்லின் இருத்தல் விதியாகிவிட்டது.

"உனக்கு எத்தனை குழந்தைங்கம்மா?"

"அஞ்சு. ரெண்டு பையனுங்க. மூனு பொண்ணுங்க. சின்னவளுக்குக் கல்யாணம் பேசியாறது."

"உன் வீட்டுக்காரர் நலமா இருக்காரா?"

"உங்களை ஒருதடவை அவங்க பார்க்க வந்தாங்களே?"

படிப்பகம்

www.padippakam.com



"ஆமாம். உன் தம்பிக்கு வட்டாரச் சலுகையைப் பயன் படுத்தி போலீஸ் வேலை வாங்கிக் கொடுக்க வந்தவர், மந்தி ரியைப் பார்க்க என்னையும் கூட்டிப்போனார். நான் சும்மா துணைக்குத்தான்."

"அந்தப் போலீஸ்காரனோட மகனுக்குத்தான் சின்ன வளைக் கொடுக்கிறாங்க."

"உன் வீட்டுக்காரர் இன்னமும் தாடிக்காரர்தானா?"

"உம்."

"ரொம்பவும் உத்தமமானவர்."

"உங்களை அவுங்களும் இப்படித்தான் சொல்வாங்க."

"சரி, முதல்ல அந்தப் பழத்துண்டுகளைச் சாப்பிடு. அப்புறம் பேசலாம்."

●

ஒருமுறை இங்கு வந்திருந்த அக்காள் வீட்டுக்காரர் சொன்னார்: "அந்த நெய்வேலிப் பொண்ணு நடத்தை சரி யில்லப்பா."

கையால் அறைந்து கல் அதிர்வதில்லை என்பதாக அது ஒரு விஷயமாகவே உறைக்காமல் போனது ஏன் என்று தெரி யவில்லை.

தனக்குத் தெரிந்ததை பிறர்க்குச் சொல்வதில் ஒரு தாக முள்ளவர். என்ன காரணத்துக்காகவோ தப்பிப் பிழைத்தி ருக்கும் உறவு. விட்டுத் தொலைத்த உலகம் பற்றிய விசாரிப் புகள் இந்தச் சாளரம் வழியே வந்தால்தான் உண்டு. சொன்னால் கேட்டுக் கொள்வதுதான்.

"என்னவாம்?"

"வேலையில்லாத ஒரு கொழுந்தன் வீட்டோடு வந்திருக் கான். அவன்கூட என்னமோ கசமுசா போல்ருக்கு. சின் னப் பொண்ணு பாத்துட்டு அப்பாகிட்ட அழுததாம். அவ ருக்குத் தலைக்குனிவு. அதோட பொண்ணை சமாதானம் பண்ணியிருக்கார். நல்ல மாதிரியான ஆள். எல்லாத்தையும் சரிக்கட்டிக்கிட்டுப் போறார்."

படிப்பகம்

www.padippakam.com



இந்த மனையின் குடும்பம் சிதறு தேங்காய் மாதிரி உடைந்து நொறுங்கிப் போனதை அறிய நேர்ந்தபோது, ‘நல்லவேளை, நான் அவர்கிட்ட மாட்டிக்கல,’’ என்றாளாம்.

‘‘எது நல்லவேளை? எங்க பெரியப்பா உங்கிட்ட மாட்டிக்கிட்டு அவமானப்படாம இருந்தாரே. அதைச் சொல்றியா?’’ என்று சின்னப் பொண்ணு கேட்டதாம்.

தாடிக்காரர் அந்தக் குழந்தையை அப்பால் இழுத்துக் கொண்டு சென்று, ‘‘இந்த மாதிரி பெரிய பேச்செல்லாம் பேசக் கூடாது,’’ என்றார்.

அந்தப் பெண் தலையிலடித்துக் கொண்டு, ‘‘ஐயோ, ஐயோ. ஏப்பா இப்படி இருக்கீங்க? உங்களுக்குக் கோபமே வராதா?’’ என்று கேட்டது.

‘‘கொடுவாள எடுத்து ஒரே போடா போட்டுடலாம். எவனுக்கும் அப்படித்தான் செய்யத் தோணும். அது ஒன்னும் பிரமாதம் இல்லடா.’’

‘‘பின்னே செஞ்சிடுங்களேன்.’’

ஆனா, அவ மாதிரி நமக்கொரு அம்மா கிடைப்பாளா சொல்லு.’’

‘‘அப்பா!’’

‘‘ஆமாண்டா. அவ நமக்கு என்ன கொற வச்சா சொல்லு? அவ கொறையை யாரு கேட்டா? அவ வயசுக்கு சர்க்கரை வியாதிக்காரி திருட்டுத்தனமா இனிப்புக்கு ஏங்கினா மாதிரி.’’

‘‘சீ...’’

‘‘தாய் வயித்துல வந்து பொறந்த எல்லாச் சென்மமும் மலசலம் கழிக்கிற அழுக்குச் சென்மந்தான். ஒவ்வொருத்தர் நடத்தைக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கும். அவளுக்குங் கூட சுத்தி வளச்சு சொல்லிக்கிற மாதிரி ஏதாவது கோவம் இருக்கலாம்.’’

‘‘உங்க மேலயா? அப்படி என்னப்பா இருக்கும்?’’

‘‘உங்க தாத்தா எங்க கல்யாணத்துக்குப் போட்ட நிபந்தனையைக் கேட்டு, ‘இந்தா, நானே போயி அண்ணனைத்

படிப்பகம்

www.padippakam.com



தேடி கூட்டி வர்றேன்'னு சொல்லி கிளம்பாமெ, 'அவர் வந்தா நான் எழுந்துக்கிறேன்'னு சொல்லி மணவறையில உட்கார்ந் துக்கிட்டேன் இல்லியா? அதுவா இருக்கும்.''

''அதுதான் நீங்க செஞ்ச ஒரே தப்பா இருக்கும், இல்லி யாப்பா?

''யாரு கண்டா? 'சரி'யாக்கூட இருக்கலாமில்லியா?''

''யாருக்கு?''

''உனக்கு. இல்லன்னா எனக்கு இப்படியொரு பொண்ணு கிடைச்சிருக்க முடியுமா?''

''என்னைய விடுங்க. வேற யாருக்கு?''

''ஏன்? உங்க பெரியப்பாவுக்கு.''

''அந்தக் கூடுந்தான் சிதைஞ்சு போயிடுச்சேப்பா.''

''இருக்கலாம்மா. ஆனா அவரு சிதையில. சிதைய மாட் டாரு நாமெல்லாம் உரிச்சு வச்ச வாழைப்பழம் போல. மண்ணுல விழுந்தா தின்ன ஒருப்படாது. ஆனா, உங்க பெரியப்பா உருக்கி வார்த்த தங்கப் பாளம் மாதிரி. தூசு படும். துடைக்கத் துடைக்கப் பளபளக்கும்.''

''ஆனா தின்னு பசியாற முடியாது, இல்லையா?

''வயித்துப் பசிக்கும் மேல வளர்ந்தவன்தான்டா மனுஷன். அவனோட வளர்ச்சிக்கு உகந்தவர்தான் பெரியப்பா.''

''இந்த அம்மாவைப் பெரியப்பாவோட சொத்தாதான் காப்பாத்துறீங்களா?''

''நான் எங்கேம்மா காப்பாத்துறேன். நம்ம எல்லாரை யும் அவதானே காப்பாத்துறா. உன் பெரியப்பாவுக்கு புத்தி மட்டுந்தான் சொத்துபத்து. மத்ததெல்லாம் மேனியழுக்கு மாதிரி?''

•

பழத் துண்டுகளைத் தின்று முடித்து, கையலம்பிக் கொண்டு வந்து அமர்ந்தாள். ஒன்று தெரிய வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



விடையை அனுமானிக்க முடிந்தாலும் அதற்கான கேள்வி பாக்கியிருந்தது.

“எப்படிம்மா இந்த இடத்தைக் கண்டுபிடிச்சு வந்தே?”

சட்டென்று குரலைத் தாழ்த்தி, “பெரிய புள்ள கூட வந்தான்,” என்றாள். அது ஒரு ரகசியம் போலவே சொல்லப் பட்டாலும் ஒரு மெய்கீர்த்தி போலப் பிசிறற்று ஒலித்தது.

மீண்டும் கல் தன் இருப்பில் உறைந்தது.

●

இந்த வீட்டைக் கட்ட, அக்காள் வீட்டுக்காரர் ஒரு சங்கிலியைக் கொடுத்து அடகு வைத்துக்கொள்ளச் சொன்னார். அதை மீட்டு, அவரிடம் கொடுப்பதற்காகத் திருச்சிக்கு சென்ற போது அவராகவே கேட்டார்:

“பெரியவன் இப்ப எங்க இருக்கான்னு தெரியுமாப்பா?”

“தெரியாது.”

“தேடலியா?”

“நானா தொலைச்சாதான் தேடலாம். தானா தொலைஞ்சதைத் தேடறது எனக்குத் தேவையாப் படல. நான் பாட்டுக்குப் போய்க்கிட்டு இருக்கேனே.”

அவர் கொஞ்சம் நிதானித்து, “இப்ப அவன் நெய்வேலில தாம்பா இருக்கான். தாடிக்காரர்தான் தற்காலிகமா ஒரு வேலை பார்த்து வச்சிருக்காராம். நிரந்தர வேலைக்கு ஏற்பாடு பண்ணிக்கிட்டிருக்காராம்.”

“அங்க எப்படி?”

“அவன் அம்மாதான் கூட்டிப்போய் விட்டிருக்காப்ல. அவுங்கள்லாம் ரொம்ப நாளா தாயா புள்ளயாத்தான் இருக்காங்க.”

மனதில் நீரலை ஓய்ந்து நிம்மதி படர்ந்தது. அப்படியும் அந்தக் கடைசி ஏக்கம் வெடித்துச் சிதறியது.

படிப்பகம்

www.padippakam.com



"எனக்குத்தான் அலுத்துச் சலிச்சுப் போகலாம்னு நினைக்கிற இடமெல்லாம் அடைபட்டுப் போகுது."

"அங்க எதுக்குப் போகணும்?"

"அவளையும் அவரையும் எப்பவாவது பார்க்க நினைச்ச துண்டு."

"அவருக்குக்கூட உன்னைப் பார்க்கணும்னு ஏக்கம். பயப்படுறாரு."

"எதுக்கு?"

"இதுபத்தியெல்லாம் கேட்டுட்டா என்ன சொல்றதுன்னு தான்."

"எனக்கு எதுக்காவது பதில் தெரியணும்னாதானே கேள்வி இருக்கும்? எங்கிட்ட இதுமாதிரி ஒரு கேள்வியும் இல்ல."

●

"நீங்கதான் எல்லாத்தையும் உதறித் தள்ளிட்டீங்க," என்றாள்.

பதில் தேவையில்லைதான். ஆனால் சொல்லாமல் விட்டால் மிகவும் அந்நியமாய் இருக்கும்போல் பட்டது.

"அப்படியெல்லாம் இல்ல. எனக்குத்தான் ஒரோர் சமயத்துல எல்லாரும் என்னை உதறிட்டாங்களோன்னு ஊமைக் காயமா நோகும்."

அவள் மெல்ல நகைத்தாள். கசப்பு சுரந்தது.

"உங்களை முன்ன பின்ன பார்த்தறியாத ஒரு தலை முறையே முளைச்சிருச்சு. அவுங்கள்லாம் உங்களை ஏதோ புராண காலத்து ரிஷி மாதிரி மனசுல வச்சுக் கொண்டாடு றாங்க. உசுரோடவே இப்படியொரு பெருமை கிடைச் சிருக்கே. அவுங்களா உங்களை உதறிட்டவுங்க?"

"இதுவும் ஒருவகையில அப்படித்தான். இனிமே அவுங்க ளூடே நடக்க முடியாது, இல்லியா?"

படிப்பகம்

www.padippakam.com



அவளுக்குக் கண் கலங்கியது. வெளியே பாடம் நடத்திக் கொண்டிருக்கும் மனைவியைச் சுட்டிகாட்டி, "நல்லா கவனிச்சுக்கிறாங்களா?" என்று கேட்டாள்.

"உம்."

அது போதாது என்று பட்டதால் மேலும் சொல்லத் தோன்றியது.

"தங்கம், வைரம் மாதிரி, புத்தியும் சொத்துதான்னு நினைக்கிற பிறவிம்மா."

பொலபொலவெனக் கண்துளிகள் சிதறின.

"என்னோட பந்தத்தை, என்னோட பற்றுக்கோட்டை எங்கே பார்க்காமலே கண்ணை மூடிடுவேனோன்னு பயந்து கிடந்தேன். இப்போ பார்த்துட்டேன்," என்று பொங்கி அடங்கினாள்.

அதைக்கேட்டு கல்லைச் சம்மட்டியால் தாக்கின அதிர்ச்சி. எதிரொலியாய் விம்மி வந்த அந்தச் சொற்கள்! ஒருமையுறும் ஊடுதழல்! சன்னதம் என்பது இன்னமும் சாத்தியம்தான் எனப் பட்டது.

"ஒன்னே ஒன்னு தெரிஞ்சா என் சீவன் தணிஞ்சிடும்."

"சொல்லு."

"எனக்கு ஏன் அவ்வளவு பெரிய தண்டனை?"

பேச்சற்றுச் சில கணங்கள் ஊர்ந்தன.

"இல்லம்மா. அது விடுதலை."

கல்லுக்குள் இன்னும் கொஞ்சம் சொற்கள் சுரந்தன.

"என்னோட அம்மா– அதுதான் உன் அத்தை– அரிசி புடைச்சிக்கிட்டு இருந்தாங்க. நான் அப்போ பள்ளிப் படிப்பு கடைசியாண்டு படிக்கிறேன். பள்ளியில கட்ட நாலணா தேவைப்பட்டது. கேட்டேன். அவுங்ககிட்ட இல்ல. நான் பிடிவாதமா இருந்தேன். வந்த கோபத்தில அரிசியைக் கொட்டிட்டு அந்த முறத்தால என் தலையில ஓங்கி அடிச்சாங்க.

படிப்பகம்

www.padippakam.com



முறம் பிஞ்சுப் போச்சு. என் உடம்பு கல்லு மாதிரி உறைஞ்சிடுச்சு. நிமிர்ந்து நேருக்கு நேர் பார்த்தேன். அவுங்க நூலா துவண்டுட்டாங்க. அதுதான் அவுங்க கடைசியா என்னைத் தண்டிச்சது. 'கடைசி'ன்னு எனக்கு அப்பவே தெரிஞ்சது. அந்தச் சொல் அப்படியே முகமா மாறுமான்னு அதிர்ச்சியா இருந்தது. ஆனா அவுங்க அப்படித்தான் கழிவிரக்கம் கொள்ளும்படி என் கண்ணுல நின்னாங்க. இப்ப, கொஞ்ச நேரத்துக்கு முன்னே நீ உள்ள வந்து 'என்னைத் தெரியிலிங்களா?'ன்னு கேட்டியே– அந்தக் கணத்துல அச்சு அசலா என் அம்மாவோட அந்த முகத்தைத்தாம்மா உங்கிட்ட கண்டேன்.

அவள் ஒருகணம் திடுக்கிட்டுத் தடுமாறினாள். பிறகு கேட்டாள்: " 'கடைசி'ங்கிற சொல்லாவா?"

"இல்ல. அம்மாவா. ஏழாவது தடவையா. கடைசியா."

"என்ன கணக்கு இதெல்... "

மெத்தெனக் கவிந்த பார்வையில் எரிதழலை இழுத்துவிட்டதும் பொங்கும் பால் அடங்கினாற்போலாயிற்று.

சில இக்கட்டான தருணங்களில் எவ்வளவு பூடகமான மறைகளும் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சொல்துணையின்றியே பளிச்சென்று அர்த்தமாகிவிடும். அவளுக்கும் அது சாத்தியமாயிற்று. அதிர்வலைகள் சூழ்ந்திருக்க வெகுநேரம் தலைகுனிந்து அமர்ந்திருந்தாள். மூக்கை உறிஞ்சி நீரைக் கட்டுப்படுத்தினாள். சிறிது நேரத்தில் கெட்டிப்பட்டாள்.

இப்போது கல், பனிப்பாளம் போலப் புகைந்தது. உள்ளுக்குள் உருகிக் கசிந்தது.

"ஏதாவது பேசேன்."

"சின்னவ கல்யாணத்துக்குப் பத்திரிகை அனுப்பினா வருவீங்களா?"

"பார்க்கிறேன்."

அதற்குமேல் அவளுக்குப் பேச ஒன்றுமில்லாமல் போனது. உடனே புறப்பட்டுவிட்டாள். போகட்டும். வழியறிந்து போய்

படிப்பகம்

www.padippakam.com



விடுவாள். கண் மறைவில் காத்திருப்பவன் அழைத்துப் போய் விடுவான். போகட்டும்.

கல் தன் இயல்பைக் காத்துக்கொண்டது.

சிறிது நேரத்தில் துணைவி உள்ளே வந்தாள்.

“என்ன நீங்க. இருந்து போகச் சொல்லக் கூடாது?” என்றாள்.

“இருக்க மாட்டாள். போகட்டும்.”

“சரி. அதுக்கெதுக்கு கண் கலங்கணும்? கட்டுப்படுத் துங்க. எங்கிட்ட கண்ணாலேயே போய்வர்றேன்னாங்க. நாலு எட்டு தள்ளி நின்னு வீட்டை முழுசாப் பார்த்தாங்க. கீழு தட்டைக் கடிச்சிக்கிட்டாங்க. திரும்பிக் கண்ணைத் துடைச் சிக்கிட்டு போய்ட்டாங்க.”

“உம்.”

“தான் இருந்து ஆளவேண்டிய வீடுன்னு நினைச்சிருப் பாங்க.”

“விடு. அவ எல்லாத்தையும் ஆள்றவதான்.”

அவள் வந்து போன நாள் அடுத்த ஆண்டு நாட்காட்டி யிலும் வந்துபோனது. அதன் பிறகு ஒருநாள் அந்தத் திரு மண அழைப்பிதழ் வந்தது. பிள்ளை வீட்டார் அழைப்பு. அதில் இடது பக்கம் ‘அவ்வண்ணமே கோரும்’ என்பதற்குக் கீழ் தாடிக்காரரர் பெயர் இருந்தது. அதற்குக் கீழே ‘அமரர் செல்லம்மாள்’ என்று அச்சாகியிருந்தது. ●

படிப்பகம்

# நெஞ்சு பொறுக்குதிலையே!

**25–4–99ஆம் நாள் தமிழுணர்வாளர்கள் நூறு பேர் சாகும்வரை உண்ணா நோன்பு தொடங்கியதும், பின்னர் இரண்டாம் நாள் கைவிட்டுக் கலைந்ததும் 'தமிழர்களுக்கு' மறந்தே போயிருக்கும். தமிழ் மறதியின் நீட்சி அப்படி. இக்கட்டுரை 21–4–99ஆம் நாள் எழுதியது. பா.ஜ.க.வையும் கலைஞரையும் தன்னிரு கண்களாகப் பாவிக்கும் ஒரு நாளேடு இதை வெளியிடுவதைத் தவிர்த்துவிட்டது. இயல்புதான். இதில் தொகுக்கப்படும் நடப்புகளும் அரசியலும் இதழியல் இட்டு நிரப்பலோ இருபதாம் நூற்றாண்டுத் தீர்வோ அல்ல என்பதால் இங்கே பதிவு செய்யப்படுகிறது.**

தன் தம்பிகளாலும் தளபதிகளாலும் 'தமிழினத் தலைவர்' என்று 'இனமான' உணர்வோடு முரசொலிக்கப் புகழப் படுபவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள். அந்தத் தமிழ் வித்தகரின் ஆட்சியில் வரும் ஏப்ரல் 25 ஆம் நாள் தமிழ் உணர்வாளர்கள் நூறுபேர் 'தமிழ் மண்ணில் தமிழ் வாழ்வு வேண்டும்' எனக் கோரி உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்க முன் வந்துள்ளனர். அந்தப் போராளிகளின் தமிழ்ப் பற்று இதன் மூலம் உறுதிப்படுகிறது என்றாலும், அதனிலும் கூடுதலாகவே 'தமிழினத் தலைவர்' மீது அவர்களுக்குள்ள நம்பிக்கையும் 'நம்மைக் கைவிடமாட்டார்; எப்படியும் காப்பாற்றிவிடுவார்' என்னும் உறுதிப்பாடும் நம்பற்கரிய விதத்தில் வெளிப்படுவதாகவே தோன்றுகிறது. இல்லையெனில் இப்படியொரு போராட்ட வடிவத்தை முன்னெடுப்பது பற்றி ஒன்றுக்குப் பத்துமுறை யோசித்திருப்பார்கள்.

இந்த வரலாற்று முரண் நகையில் நம் கவனம் குவியும் புள்ளியாக ஒன்றுள்ளது. அதாவது களமிறங்கும் அப்போராளிகளில் மிகப் பெரும்பான்மையினர் அறுபது வயதைக் கடந்த முதிர்ந்த

www.padippakam.com



பெருமக்கள். மூப்பு அவர்களுக்கு வழங்கியுள்ள தகுதிகளைக் காட்டிலும் நமக்கு வழங்கும் அதிர்ச்சி மதிப்பீடுகள் அதிகமாயிருக்கிறது.

அவர்கள் ஆங்கிலேயர் ஆட்சியிலும், அடுத்துவந்த காங்கிரசார் ஆட்சியிலும் பள்ளிக்கல்வியை முற்றமுழுக்கத் தமிழில் படித்துத் தேறியவர்கள்; தங்களின் இளமைப் பருவத்தில் தமிழைச் சிதைத்துக் கொண்டிருந்த மணிப்பிரவாளத்துக்கெதிராக 'தமிழ் வாழ்க' என்று முழக்கமிட்டு, அரசியல் களம் புகுந்தவர்களோடு உள்ளத்தால் ஐக்கியப்பட்டு, அவர்களைக் கோட்டைக்குக் கொண்டு செலுத்தியதில் துணை நின்றவர்கள்; கோட்டை வசப்பட்டதுமே, தெருக்கூத்தின் ஆரம்பத்தில் கட்டியங்காரன் புகுந்து, பார்வையாளர்களின் கவனத்தைத் திருப்புவதற்கென்று பெருங்குரலில் பாடும் பாட்டுக்கு அதன் சத்தமே அர்த்தமாவது போல 'தமிழ் வாழ்க'வும் வெறும் அரசியல் சத்தமாக அர்த்தப்பட்டுப்போனதை இன்னும் நம்பமுடியாமல் திகைத்து நிற்பவர்கள்; 1956 இல் காங்கிரசார் கொண்டு வந்த தமிழ் ஆட்சிமொழிச் சட்டம்கூட கலைஞர் கட்சியாட்சியில் தொலைத்துத் தலை முழுகப்பட்ட நிலையில் 'தமிழின் ஏற்றம்' பற்றிய தங்களின் எல்லாக் கனவுகளும் காற்றில் கிழித்தெறிந்த காகிதத்துகள்களாகப் பறப்பதைப் பார்த்து திகைத்துக் கொண்டிருப்பவர்கள்; இத்தனைக்குப் பின்னும், 'கலைஞர் காலத்தில்கூடத் தமிழ் அரியணை ஏறவில்லையெனில் வேறு யார் காலத்தில்தான் ஏற்றம் பெறப் போகிறது' என்று இன்னமும் இளைப்பு நோயாளியைப்போல் மூச்சுத் திணறலோடு முணகிக் கொண்டிருப்பவர்கள். இறுதியாக 'கலைஞரை எழுப்பி விடலாம்; இயங்கவைத்து விடலாம்' என்னும் நைப்பாசையில் தங்கள் உயிரையே கள வேள்வியின் பணயப் பொருளாக்கியுள்ளவர்கள்.

இவ்வுலகில் வரிவடிவம் பெற்ற பல மொழிகளில் ஒரு சிலவற்றைப் பேசுவோர் இரண்டொரு லட்சம் பேர்களே. வெறும் தொன்னூராயிரம் பேர் மட்டுமே பேசும் மொழிகூட ஒன்றுண்டு. இதுபோன்ற சின்னஞ்சிறு மொழிக் குழுவினர்கூட தத்தம் மொழிகளில்தான் கற்கின்றனர்; நிற்கின்றனர். தமிழகத்தில் போல, 'தமிழில் படித்தால் புவ்வா கிடைக்காது' என்று பூச்சாண்டி காட்டி மிரட்டுகிற— மொழியை வெறும் கருத்துப் பரிமாற்றக் கருவியாக மட்டுமே சுருக்கிப் பார்க்கிற–

படிப்பகம்

www.padippakam.com



காலுக்குப் பொருந்தாத செருப்பைக் கழற்றி யெறிந்திடல்போல் தாய்மொழியையும் கழற்றியெறிந்துவிடலாம் என்று ஆசீர்வதிக்கும் வேத விசுவாசித்தனம் அங்கெல்லாம் இல்லை.

இப்படிப்பட்டதொரு விசித்திரமான சூழலில்தான் மூத்த பெருமக்கள் தமிழைத் தமிழன் மொழியாக்கக் கோரி களம் இறங்கியுள்ளார்கள். அவர்களின் போராட்டம் தமிழின் தலைமைக்கெயன்றி பேருக்கோ, புகழுக்கோ, புழுத்தழுகும் அரசியல் நுழைவுக்கோ அல்ல என்பதைத் தமிழர்களே வரையறை செய்துவிட இயலும்.

களத்தில் நிற்கும் இந்தத் தமிழ்ப் பெரும் பேராளர்கள் தமிழை என்ன விதமாகப் பேண முயல்கிறார்கள் என்பதில் நமக்குக் கடுமையான கருத்து வேறுபாடுகள் உண்டு. இந்தத் தமிழறிஞர்கள் 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்னும் பேருண்மை மொழிக்கும் சேர்த்துத்தான் என்பதைக் கவனத்தில் கொள்ளாதவர்கள்; இன்னமும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியத்தனமான தமிழையே மேவிப்பரப்பும் மொழிப் பூசாரிகளாய் இருப்பதொன்றே சுகம் எனத் துயில்பவர்கள். வடமொழிக் கலப்பை உள்வாங்கிக் கொண்டபின் தமிழுக்கு எழுதப்பட்ட இலக்கண நூலே தொல்காப்பியம். அதற்குப் பின்னர் வடமொழிக் கலப்பை 'தற்சமம்—தற்பவம்' கொண்டே கையாள முடியாமல் போய், அதன் ஒலிக்குறிப்பை அப்படியே ஏற்பதற்காகத் தமிழில் பயன்படுத்தவென்றே கிரந்த எழுத்துகள் (ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ) உருவாக்கப்பட்டன என்பதையும் அவை தமிழுக்குரியவைதான் என்பதையுமே ஏற்க மறுக்கிறவர்கள். வடமொழிக் கலப்பினை ஏற்றுத் தமிழுக்கு ஓர் இலக்கண நூல் எழுதப்பட்டதெனில், அதன் பின்னர் நேர்ந்த அந்நியப் படையெடுப்புகளாலும் ஊடுருவலாலும் நேர்ந்த- பாலி, பிராகிருதம், கன்னடம், தெலுங்கு, அரபி, உருது, போர்த்துகீஸ், ஸ்பானிஷ், டேனிஷ், பிரஞ்சு, ஆங்கிலம் போலும் பல்வேறு மொழிக் கலப்பையும் பண்பாட்டுக் கலப்பையும், நிலைமொழியின் அமைதி கெடாமல், புதுவரவின் தேவையறிந்து, ஏற்கும் வழியறிந்து, அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் சித்தர் மரபு, பக்தி மரபு, பெருந்தெய்வ வழிபாட்டு மரபு போன்ற சமூகந்தழுவிய மரபு மாற்றங்களுக்கேற்பவும் இலக்கண விதி

படிப்பகம்

www.padippakam.com



கள் வகுக்கப்பட்டிருக்க வேண்டும். மொழியறிஞர்கள் செய்யத் தவறிய இத்தனை சீர்மாற்றங்களையும் தமிழைத் தங்கள் நாவில் வளர்த்துவரும் பொதுமக்கள் வியப்புக்குரிய வகையில் வளர்சிதைமாற்றம் செய்து புழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இவை யாதொன்றையும் கவனம் கொள்ளாமல், 85 சதவீத மக்களின் மண்சார்ந்த பன்மைத்துவ மொழி வழக்குகளை ஒவ்வாமை கொண்டு ஒதுக்குகிறவர்கள் இப் பேராசிரியர்கள்.

இவர்கள் எந்த மக்களின் மொழியைக் கொச்சை என்று ஒதுக்குகிறார்களோ, அப்போதே அந்த மக்களையும் சேர்த்தே ஒதுக்குகிற ஆதிக்க மொழியாளர்களாய் எஞ்சி விடுகிறார்கள். மொழிப்புழக்கத்தில் இவர்கள் சொல் மட்டுமே செல்லுபடியாகுவதாயிருந்தால், இலத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம் போலவே தமிழும் மாற்றம் ஏற்காத, மானிடர் புழங்காத, ஏட்டில் புதைகின்ற காப்பிய மொழியாகி விரைத்துப் போயிருக்கும். நல்லவேளை மக்கள் தங்கள் நாவில் எழுதி வாழவைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த உலகில் இனத் தூய்மை காப்பது எப்படி நாசிசமாகுமோ, அப்படியே மொழித்தூய்மை காப்பதும் பாசிசமாகும் என்பதை இவர்கள் இன்னமும் மறந்திருப்பவர்கள். சிற்றிதழ் சார்ந்த படைப்பாளிகளும் சிந்தனையாளர்களும் தாங்கள் மொழித்துறை அறிஞர்கள் அல்லாதபோதும், தங்கள் வெளிப்பாடுகளால் இலக்கிய— சமூகத் தளங்களில் மொழியை அண்ணாந்து பார்க்குமளவுக்கு வளர்த்திருக்கிறார்கள் என்பதை இவர்கள் அங்கீகரிக்க மறுப்பவர்கள். கணினி யுகத்துக்கேற்றபடி தமிழில் குறைந்தபட்ச எழுத்துச் சீர்திருத்தம் பண்ணுவதைக்கூட இவர்களில் சிலர் கண்ணை மூடிக்கொண்டு எதிர்க்கிறார்கள். பாடம் செய்து புதைக்கப்பட்ட பிணத்தைக் காப்பதுபோல் மொழியைக் காக்க வேண்டும் என்பது இவர்கள் கொள்கையாய் இராது என்றாலும், நடைமுறையில் அவர்களின் செயல்பாடு அத்தன்மையது தான் என்பதை அறியத் தவறிவிடுகிறார்கள்.

தமிழ்ப் பேராளர்களோடு நமக்குள்ள கருத்துவேறுபாடுகளாக இவை போன்ற இன்னும் பல புள்ளிகளைக் கூர்மையான விவாதங்களுக்காகத் தொகுக்க முடியும் என்றாலும், இவையெல்லாம் அவர்களின் தமிழ்ப் பற்றையோ, தமிழைக் காப்பதில் அவர்களுக்குள்ள நேர்மையையோ நம்பகத் தன்மை

படிப்பகம்

www.padippakam.com



யையோ கேள்விக்குட்படுத்துபவையல்ல என்பதையும் நாம் மறவாமல் குறிப்பிட்டாக வேண்டும். அதன் காரணமாகவே அவர்களின் உயிர்ப் பாதுகாப்பு பற்றிய கவலை நம்மை அலைக்கழிக்கிறது.

இன்று களத்தில் நிற்கும் அனைவரும் தங்கள் வயதின் காரணமாக சீரான உணவுப் பழக்கத்தைப் பேண வேண்டிய வர்கள். மாறாக, அவர்கள் முழுதாக மூன்று நாட்கள்- 72 மணி நேரம் உண்ணாதிருந்தாலே அவர்களது உள்ளுறுப்பு கள் அனைத்தும் தாறுமாறாக இயங்கவோ அல்லது இயங்க மறுக்கவோ கூடும். அவர்கள் வழக்கமான அரசியல் உண்ணா நோன்பிகள் அல்லர். ஆகவே நோன்பின் நீட்சியாக நினைத் துக்கூடப் பார்த்திராத புதுப்புதுத் தொந்தரவுகள் முளைத்து அவர்களின் அன்றாட நடமாட்டத்தையே கடுமையாகப் பாதிக் கக் கூடும். ‘ராமா, கிருஷ்ணா’ என்றிருப்பதற்குப் பதிலாக, ‘தமிழே, அமிழ்தே’ என்று உருகி வழிந்த பாவத்துக்காகத் தங்கள் மீதி நாட்களை நோய்களுக்குத் தத்தம் செய்து நொந்து போக நேரலாம்.

‘தமிழினத் தலைவர்’ கலைஞரின் தமிழ்ப்பற்று ஊன் அறி யும்; உயிர் அறியும்; உலகளாவிச் சிதறிக் கிடக்கும் தமிழி னம் அறியும். அவர் மொழியாளுமைக்குக் கிடைத்த பரிசாக ‘இராசராசன்’ விருது கையகப்பட்டது. அவர் எழுதிய விலை மதிப்புமிக்க ‘சங்கத் தமிழ்’, ‘குறளோவியம்’ போன்ற கனத்த நூல்கள் பொது நூலகத்தின் எல்லாக் கிளை நூலகங்களிலும் அவரது தமிழறிவைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

தமிழுக்கு அவர் அளிக்கும் தன்னேரில்லாச் சிறப்பு பற் றிப் பேசும்போதே அவரின் வேறு சில சிறப்புகளும் நம் நினை வுக்கு வருகின்றன. அதாவது தமிழோடும், அறிவோடும் நெருக்கமுள்ள அறிஞர்களுக்குச் சிலைகள் நிறுவுவது, நினை விடங்கள் அமைப்பது, மணிமண்டபங்கள் எழுப்புவது ஆகிய வற்றிலும் கலைஞரின் நிபுனத்துவம் உலகறிந்த ஒன்று. ஆனால் இப்போது அதுவே நம்மை மிரட்டுவதாயுள்ளது.

கலைஞர் இதுவரை இந்தப் போராட்டம் பற்றிக் கண்டு கொள்ளவில்லை. அரசியல் வேலைகள் அவருக்கு ஆயிரம் இருக்கும். இடையில் அதிரடியாக, ஜெயலலிதாவை அரசியல்

படிப்பகம்

www.padippakam.com



அரங்கிலிருந்து வீழ்த்திவிடும் வியூகத்துடன் மத்தியில் பா.ஜ.க. கூட்டணி அரசின் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு ஆதரவு தெரிவித்ததும், வாக்கெடுப்பு நடைபெறும் முன்பாகவே வெற்றி பெறப் போகும் பா.ஜ.க. அரசில் முரசொலி மாறனுக்கு (கொசுறாக விடுதலை விரும்பிக்கும்) அமைச்சர் பதவி பெற்றுத் தர ஆயத்தம் செய்ததும், நடுவில் ஏதோ கோளாறு ஏற்பட்டு ஒற்றை வாக்கு வித்தியாசத்தில் எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதில், இந்த மொழிப் போராட்டம் பற்றி நல்ல விதமாகச் சிந்திக்க கலைஞருக்குப் போதிய அவகாசம் கிடைத்திருக்கிறது.

இந்நிலையில் கலைஞரிடம் நம் வேண்டுதல் இதுதான்: தமிழுக்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பது உங்களுக்கே வெளிச்சம். அதை நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். கடந்த ஐம்பதாண்டு அரசியல் வாழ்வில், தமிழைச் சொல்லியும் தமிழில் சொல்லியும்தான் நீங்கள் தன்னேரில்லாத வகையில் புடைத்திருக்கிறீர்களே தவிர, தமிழ் உங்களைச் சொல்லி தன்னைத் தன் மக்களிடமே தக்க வைத்துக்கொண்டதாகவும், தகவமைத்துக் கொண்டதாகவும் பெருமைப்பட்டுக் கொள்வதென்பது இனிமேல் நடந்தால் உண்டு. இதைப் பற்றி எங்களைவிட உங்களுக்கே அதிகம் தெளிவிருக்கும் என்பதால் இத்துடன் விட்டுவிடலாம். உங்கள் அரசில் உங்கள் தலைமையின்றி மொழிப்போர் துவக்கி, உயிரை விடவும் துணிந்த இந்தப் போராளிகள் தங்கள் கிழட்டுப் பிடிவாதத்தால் 'தமிழ், தமிழ்' என்று புலம்பியதைத் தவிர வேறொரு பாவமும் அறியாதவர்கள். அவர்கள் எப்போதும் போல உங்களை நம்பி ஏமாந்து போகத் தயாராயிருப்பவர்கள். ஆகவே அவர்களை கருணையோடு மன்னியுங்கள். ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லியாவது அவர்களை உயிரோடு மீட்டுத் தாருங்கள். அவர்களுக்கு நினைவிடமோ, மணிமண்டபமோ இப்போதைக்கு வேண்டாம் என்று கருணையோடு விட்டுவையுங்கள். வேண்டிக் கேட்கிறோம்.

இதற்கெல்லாம், மேலாக அதிரடியாக நீங்கள் அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றிவிட்டால், நாங்கள்தான் என்ன செய்துவிட முடியும், உங்களை வணங்குவதைத் தவிர.

●

படிப்பகம்

www.padippakam.com





என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்
ஏட்டுக்கு வாழ்ந்திருப்பேன்
இன்னுயிரைத் தோற்றிடினே
என்குருதியில் பூத்திருப்பேன்

# தன்மையம்

கலைஞருக்கு நம்மைப் போன்ற சராசரித் தமிழனின் வணக்கமெல்லாம் ஒரு பொருட்டேயல்ல என்பதோடு, தமிழ்பற்றி இனிமேல் அவரை வணங்குவதற்கான வாய்ப்பு இந்தப் பிறவியில் இருக்காது என்பதும் அவரது வரலாற்றில் தடித்த எழுத்துகளாகவே துருத்திக்கொண்டிருக்கும்.

தமிழுணர்வாளர்களின் பட்டினிப் போராட்டம் அதன் நோக்கத்தில் பெரிதாய் ஒன்றும் சாதித்துவிடவில்லை என்றாலும், நமக்கு அது வேறொரு வகையில் உதவியிருக்கிறது. கலைஞரைப் பற்றிய நீண்ட நெடுங் கண்மூடித்தனமான பி(ரே)ரமைகளில், மல்லாந்துபோன ஆமையாய் இயக்கமற்றுக் கிடந்த தமிழ்ப் புத்தியை அது புரட்டிப் போட்டு நேர் செய்திருக்கிறது. அவரையும் அவரது அரசியலையும் ஊடுருவிப் பிணைத்திருக்கும் அந்தரங்க இழையின் தன்மையப் போக்கை எந்தவித மனமயக்கமுமின்றிப் புரிந்து கொள்ள உதிவியிருக்கிறது. இந்தப் புரிதலானது பொதுப் புத்தியுள்ள ஒவ்வொரு தமிழ்நெஞ்சிலும் வெகுநாளாய் நெட்டுயிர்த்துக்கொண்டிருப்பதுதான்.

இந்த நாட்டில் ஒரு பிரச்சினையை ஒன்றுமில்லாமல் ஆக்குவதற்கு நம்பகமான வழியாகப் பயன்படுவது, அதுபற்றி ஆய்வுக்குழு அமைத்து அறிக்கை கோருவதுதான். அது இங்கேயும் நிகழ்ந்திருக்கிறது. நிகழ்வின் நீட்சியாகப் போராட்டம் விலக்கிக்கொள்ளப்பட்டது.

இதில் கவனத்துக்குரிய அம்சமானது, தமிழைப் பயிற்று மொழியாக்குவதில் நேரக்கூடிய அனைத்துவகை வில்லங்கங்க

படிப்பகம்

www.padippakam.com



ளையும் முதல்வரே வெகு நுணுக்கமாகத் திரட்டிக் கொடுத்ததைச் சொல்லலாம். குழுவுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளின் அந்த நுணுக்கம், 'தமிழ்ப் பகைவர்களை'த் தட்டியெழுப்பி, துப்பு கொடுத்து, களத்தில் இறக்கி, வெல்லற்கரிய பிம்பத்தோடு மல்லாடத் தூண்டிவிடும் உத்திபோலப் பலரையும் குழப்பிவிட்டது கொஞ்சம் வருத்தமான விஷயம்தான். உண்மையில் கலைஞரின் இந்தக் கூர்த்த மதி வெளிப்பாடு, மொழிச்சிக்கலை முற்றாகத் தீர்ப்பதில் அவருக்குள்ள கரிசனம் மிகுந்த அக்கறையாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்தவகைப் பொருத்தப்பாட்டிலும்கூட தவிர்க்க முடியாத கேள்வி ஒன்று விடைத்துக் கொண்டு வெளிப்படுகிறது. அதாவது, விரல் நுனியில் இவ்வளவு விவரங்களைத் தொகுத்து வைத்துக் கொண்டு, பயிற்றுமொழிச் சிக்கல் ஒன்றும் இலேசுப்பட்டதல்ல என்று காட்டத் தெரிந்த கலைஞர், கடந்த 42 ஆண்டுகளாகப் பாராளுமன்ற ஜனநாயகச் செயல்பாடுகளில் பங்குபற்றி, எதிர்க்கட்சியாகவும் ஆளும் கட்சியாகவும் வளர்ந்து, தமிழ் நாட்டுக்குத் 'தொண்டாற்றிய' வகையில், புதிய பரிமாணத்தில் பயிற்றுமொழிப் பிரச்சினையை வளர்த்தெடுத்ததல்லாமல், தமிழின் முந்தைய இடத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்காவது உருப்படியாக என்ன செய்திருக்கிறார்? அல்லது செய்யத் துணை புரிந்திருக்கிறார்?

அடிப்படையான இந்தக் கேள்வி மீது நாம் குறைந்தது மூன்று காரணங்களைத் தொகுக்க முடியும். அக்காரணங்களே தமிழ் படும் ஒடுங்கலுக்கும் பிடுங்கலுக்கும் மூலவேர் – சல்லிவேர்களை முன்வைக்கும்.

முதற்காரணம்: கழக ஆட்சிக்கு முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சியிலும் அதற்கும் முந்தைய ஆங்கில ஆட்சியிலும் தமிழ் நிலம் சார்ந்த பள்ளிகளின் பொதுக்கல்வி தமிழையே பயிற்றுமொழியாகக் கொண்டிருந்தது. அடிக்கடி இடம் மாறும் மைய அரசுப் பணியாளர்களுடைய குழந்தைகளின் கல்வி நலனுக்காக குறிப்பிட்ட சில பள்ளிகளில், அறுபதுகளின் தொடக்கத்தில் வகுப்புக்கு ஒரே ஒரு ஆங்கிலப் பயிற்றுமொழிப் பிரிவை மட்டுமே காங்கிரஸ் ஆட்சி தன் அந்திமக் காலத்தில் தொடங்கியிருந்தது. எழுபதுகளின் தொடக்கம்வரை அந்தப் பிரிவுகள் நட்டத்தில் நடத்தும்படியான நிலையிலேயே தொடர்ந்

படிப்பகம்

www.padippakam.com



தன. ஆகவே, தமிழின் தேய்மானமும் பின்னடைவும் அந்தக் காலகட்டத்தில் புத்தூக்கம் பெறவில்லை.

இரண்டாம் காரணம்: இந்தியாவிலேயே, மொழியையும் மொழி சார்ந்த இனத்தையும் மூலதனமாகக் காட்டி ஆட்சியைக் கைப்பற்றிய அதிசயம் தமிழ்நாட்டில்தான் நடந்தது. நடத்திக்காட்டியது தி.மு.க. அதற்கு அறிவு ரீதியாகத் தமிழகத்தைப் பக்குவப் படுத்தியிருந்தவர் பெரியார். அவரோடு சேர்ந்து, அவரது சீடர்களாய் இருந்து வளர்ந்து, பிரிந்து வந்த தி.மு.க. பட்டாளம் அப்போது நிகழ்த்திக் காட்டிய அரசியல் சாகசங்கள் ஓர் அற்புதத் தொகுப்பு. அந்தச் செயல்பாடுகளில் மட்டும் உண்மையும் நேர்மையும் ஒருமையும் உறுதிப்பாடும் இருந்திருக்கும் பட்சத்தில் ஒன்று, தமிழகம் இந்தியாவின் தவிர்க்க முடியாத – ஐம்புலன்களும் ஒருங்கிணைந்து அறிவுப் புலனையும் உள்ளடக்கிய சிரமாயிருந்திருக்கும்; அல்லது தனி நாடாய்ப் பிரிந்திருக்கும். மலினப் படுவதையும் நியாயப் படுத்தத் தெரிந்தவர்கள் தமிழக் மக்களுக்கு ஓர் அதிசயம் போல எழுதிக் காட்டிக் கலைத்துப் போட்ட கனவு அது. பார்ப்பன – பனியா ஆதிக்கத்தில் உள்ள காங்கிரஸ் கட்சியாலும் ஆட்சியாலும் ‘தெற்கு தேய்கிறது, தென்மொழி மாய்கிறது’ என்பதாக, தமிழ் மக்களிடையே பெரியார் வளர்த்து வைத்திருந்த நியாயமான மனோபாவத்தை மூலபலமாகக் கொண்டு, தமிழகத்தின் தன்மானத்தையும், வையகத்தைக் கட்டியாண்ட தொல்புகழையும் மீட்டுத் தருவதாக வாக்களித்து ஆட்சிக் கட்டிலைப் பிடித்தவர்கள் தி.மு.க. வினர். (அதையே சொல்லித் தொடர்ந்தவர்கள்தாம் அ.தி.மு.க வினரும்.) ஆகவே, கழகங்களுக்குத் தங்கள் வாக்கைக் காக்கும் இனக் கடமை உண்டு. இனக்கடமை மட்டுமல்லாமல் அது வரலாற்றுக் கடமையும்கூட.

தமிழ் வரலாற்றைத் தெரிந்தே மறைக்கிற ஆரியச் சார்புடைய இந்திய வரலாற்றாய்வாளர்களும், தெரியாமலேயே விடுகிற மேலை நாட்டாய்வாளர்களும் இந்திய மொழிகள் அனைத்தும் சமஸ்கிருத வழி வந்தவையே என்று நிறுவ முனைகின்றனர். தமிழிலிருந்து கிளைத்த பிற திராவிட மொழிகள்கூட சமஸ்கிருதச் சார்புடையனவாகக் காட்டிக் கொள்வதையே பெருமையாகக் கருதும் ஒரு நெருக்கடியான சூழலில்,

படிப்பகம்

www.padippakam.com



இந்த மண்ணின் ஆதி மொழி தமிழ் என்பதையும், அதற்கு இணையாகவும் பின்னர் இன மேலாண்மைச் சின்னமாகவும் இம் மண்ணை ஆக்கிரமித்துக்கொண்ட மொழியே சமஸ்கிருதம் என்பதையும், தமிழின் பட்டறிவையும், பயன் கலைகளையும் உள்வாங்கிக்கொள்வதிலும், தமிழில் சமூகம் சார்ந்த வகைப்பாடுகளையும் சமயம் சார்ந்த வழிபாடுகளையும் புரையோடச் செய்வதிலும் வெற்றிபெற்றதன் காரணமாகவே வேறுபட்ட தளங்களையுடைய இரு மொழிகளும் இந்தியாவின் இரு பெரும் மொழிகளாக இணைந்து வாழ்வது சாத்தியமாயிற்று என்பதையும் நிறுவுவது தமிழர்களின் கடமையாகிறது.

தமிழ்ஒலியை வல்லினம், மெல்லினம், இடையினம் என்று வகைப்படுத்தியிருப்பினும், அதிசயம் போல அது ஒரு வல்லினமற்ற மொழி என்றுகூடச் சொல்லிவிடலாம். மொழி முதலிலும், ஒற்றெடுத்து வரும்போதும் மட்டுமே வல்லெழுத்துகள் சிறிது வல்லோசையைப் பிறப்பிக்கின்றனவேயன்றி, மற்றெப்போதும் அவை மெல்லினமாய், இடையினமாய், மெல்லிடையினமாய்த்தான் இயல்பெடுக்கின்றன. ஒரு தென்மொழி நில நடுக்கோட்டை ஒட்டிப் பிறந்து, பின்னர் தென்புலமாய்ச் சுருங்கிய மண்ணில் எளிமையும் இயன்மையும் பொருந்தி, எல்லா எழுத்துகளையும் கண்டத்துக்கு மேலேயே பிறப்பித்து, ஓர் அதிசயமே மொழியானாற் போல் உருவானதில் மானுடத் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய பேருண்மைகள் காலப் போக்கில் தென்படலாம். அப்படிப்பட்ட மொழியை செம்மொழியாக்கி ஆய்வுக்குட்படுத்தச் செய்வது மானுடவியலுக்கு நாம் செய்யும் உதவி. அந்த மொழி இன்னும் நம் மூச்சாய் இழைகிறது என்னும்போது அதைக் காத்து வளர்த்தெடுப்பது நமக்கு நாமே செய்துகொள்ளும் உதவி.

எல்லா மொழிகளும் அதனதன் தனித்துவத்தால் முழுமையானவைதாம். ஆனால் ஒன்றோடொன்றான உறவாடலில் போதாமை உள்ளவையே. அந்தப் போதாமை மொழியின் குறையோ குற்றமோ அல்ல. வேண்டியவாறு நிறைவு செய்துகொள்ளக்கூடிய வெறும் போதாமை மட்டுமே. தமிழுக்கும் அப்படிப்பட்ட போதாமைகள் உண்டு. போதாமைகளைக் கண்டுகொள்ள மறுப்பதும், பெண்ணடிமைத்தனம் பேணும் சிறைகாக்கும் கற்பொழுக்கத்தை பேச்சு மொழிக்குப் பூட்டி

படிப்பகம்

www.padippakam.com



மகிழ்வதும் நம்மைப் பேதையர்களாய்ச் சுருக்கிவிடும். ஆகவே உலகளாவியதான புதிய ஒலிக்குறிப்புகளும் சொல்தொகுப்பு களும் தமிழுக்குத் தேவைப்படுகின்றன. அந்தத் தேவையை நிறைவு செய்வதும் நேர்த்தி செய்வதும் நம் கடமை. அரசு முன்கை எடுத்து, முடுக்கிவிட்டு, துணை நின்று, தூண்டிச் செயல்படுத்த வேண்டிய கடமை இது. செய்தனவா கழகங் கள்? குறைந்தபட்சம் இக்கடமையைக் கண்டுகொள்ளவாவது செய்தனவா? கலைஞர் கண்டுகொண்டாரா?

இக்கேள்விகளெல்லாம் கலைஞரின் தமிழ் வித்தகத்தைக் கேள்விக்குள்ளாக்கிவிட முடியாதுதான், அந்த வித்தகம் அவர் தேடிக் கொண்ட சொத்து தனிமனிதச் செழுமை. நம் கேள்விகள் தனிமனிதருக்கல்ல. ஆட்சித் தலைவருக்கு· ஆளாதபோதும் கோரிக்கை வைத்து வெற்றியீட்டும் கட்சித் தலைவருக்கு.

தமிழால் கலைஞர் ஆளுமை பெறுவது வேறு. தமிழானது கலைஞரால் ஆளுகை பெறுவதென்பது வேறு. அவ்வகையில், ஆட்சியதிகாரம் பெற்ற அரசியல் தலைவராக தமிழுக்கும், தன்போன்ற அரசிய நிராகரிப்பில் தாழ்ந்துகிடந்த தமிழருக் கும் செய்து கொண்டதை ஒற்றை வரி உச்சமாகச் சொல்வ தானால், அது அமைச்சருக்கு முன்னால் போடும் 'மாண்பு மிகு'வும், மாநகரத் தந்தைக்கு முன்னால் போடும் 'வணக் கத்துக்குரிய'வும்தான்.

இவ்வாக்கியத்தினூடே இடைச்செறுகலாக நீங்கள் ஆயி யிரம் வாக்கியங்களை சான்றாதார வியாக்கியானமாகச் சேர்த் தாலும், முடிவில் இதுதான் முற்றுவாக்கியமாக இருக்கும். இதைப் பொய் என்று மெய்ப்பித்துவிட முடியுமெனில் அது கலைஞருக்கு நாம் செய்யும் மகத்தான கௌரவமாயிருக்கும்.

ஆசைதான். ஆனால் வெற்றுவெளியில் எதைப் பார்த்து வியப்பது?

கலைஞரின் ஆதரவு இப்போது கணினித் தமிழுக்குக் கிடைத்திருப்பது பாலைப் பயணத்தில் பிளந்த வாய் விழுந்த மழைத்துளியாகத்தான் இனிக்கிறது. கணினியின் மகத்தான

— இதன் தொடர்ச்சி 77ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



இந்திரா பார்த்தசாரதியின் இராமாநுஜர் நாடகம் பற்றி டாக்டர் வீ.அரசுவின் 'எதிர்வினை' காலக்குறி, அக். 98 இதழில் வந்தது. அதற்கொரு ஞானாதிக்கபீடத் திருவாய்மொழியாக இ.பா.வின் 'விருதுகளும்– விவாதங்களும்– விளிம்புகளும்' கணையாழி, பிப்.99 இதழில் வந்தது. ஒரே துறையைச்சார்ந்த இவ்விரு பேராசிரியர்களும் தமிழ் எழுத்துலகில் வேர்பிடித்துள்ள எதிர் துருவச்சிந்தனைப்போக்குகளின் இணையமறுக்கும் அப்பட்டமான முகங்களாய் வெளிப்படுகின்றனர்— வாசித்தலிலும் புரிதலிலும் புனிதப் பாசாங்குகளைத் துடைத்தெறியும் புதிய விழிப்பை வீ.அ.வும், அந்தப் புதுப் போக்கை 'விளிம்புகளின்' வக்கரிப்பெனக் கையுதறித் தப்பித்துச் செல்லும் பழைய மிதப்பை இ.பா.வுமாக வெளிப்படுத்துகின்றனர்.

## புதிய விழிப்பும் பழைய மிதப்பும்

வீ.அ.வின் எதிர்வினையை வெளியிட்ட வகையில், 'விமர்சனம் இதழ்க் கட்டுமானத்தில் ஓர் அங்கம்' என்பதற்கு மேல் வேறெந்த நோக்கமும் 'காலக்குறி'க்கு இருக்க வாய்ப்பில்லை. ஆனால் 'கணையாழி'க்கு இ.பா.வைப் புழுதிபடாமல் பொன்முகிற் பிரபையோடு உயர்த்திப் பிடிப்பது நோக்கமாயிருக்கும். அல்லாமற்போனால் அவரின் 'அறிவுரை'க்கு மறுமொழியாக வீ.அ. எழுதியனுப்பிய 'புதிய யூதர் இ.பா.'வை வெளியிட்டிருக்கும். ஆனால் அது தவிர்த்துவிட்டது.

வீ.அ.வைத் தொடர்பு கொண்டு ''இ.பா.வுக்குச் சொல்ல உங்களிடம் விடையில்லையா?'' என்று கேட்டபோது, ''கணையாழிக்கு ஏற்கனவே அனுப்பியாயிற்று. அதன் நகல் இது,'' என்று நமக்கு அனுப்பிக் கொடுத்தார்.

கணையாழி இனி வெளியிடாது என்பதால் இந்த விமர்சன விவாதத்தை ஒருமிக்கப் படித்தறியும் பொருட்டு முழுமையாகத் தொகுத்தளிக்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

# இராமாநுஜர் நாடகம் பற்றிய எதிர்வினை

## —வீ. அரசு

பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதி அவர்களால் மிக அண்மையில் எழுதப்பட்ட நாடகம் இராமாநுஜர். இந்த நாடகத்தில் இராமாநுசரைப் பெரும் சீர்திருத்தவாதியாகக் காட்ட நாடக ஆசிரியர் முயன்றிருக்கிறார். உண்மையில் இராமாநுசர் பற்றிய செய்திகள் நாடக ஆசிரியர் வெளிப்படுத்தியவை போல் உள்ளனவா? என்றால் அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. இன்றைய சூழலில், இ. பா. இராமாநுசரைக் காப்பாற்ற முயன்றிருக்கிறார். ஏனெனில் இராமாநுசர் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகளைக்கூட யாரும் தேடிப் படிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையில்.

இராமாநுசருக்கு முந்தைய ஆச்சாரியராக ஆளவந்தார் இருந்தார். அவர் இறக்கும் போது மூன்று ஆசைகள் நிறைவேறாமல் போய்விட்டதாகவும், அதை நிறைவேற்ற இராமாநுசர் சபதம் ஏற்பதாகவும் இ. பா. நாடகத்தை எழுதியுள்ளார். இ. பா. கூறும் நிறைவேறாத மூன்று ஆசைகள்: சாதியற்ற சமுதாயம்—சாதியற்றவர்க்கும் நற்கதி, குறுகிக் கிடக்கும் வைணவ தர்மம் எல்லை விரிய வேண்டும், பிரம்ஹ சூத்திரத்திற்கு உரை எழுதுதல். உண்மையில் ஆளவந்தாருக்கு இ. பா. கூறும் ஆசைகள்தான் நிறைவேறவில்லையா? என்றால் அது வேறு செய்தியாக இருக்கிறது. இ. பா. மூன்றாவதாகக் கூறும் ஆசை ஆளவந்தாருக்கு இருந்தது. மற்ற இரு ஆசைகள்: "வியாசர், அவர் தந்தை பராசரர் ஆகியோர் பெயர்கள் எந்நாளும் நாட்டில் துலங்க வேண்டும், நம்மாழ்வருக்கு ஏற்றமும் பெருமையும் ஏற்படும் வகையில் பக்தி செய்யவேண்டும்" என்று எழுதுகிறார் ம. இராதாகிருஷ்ணப் பிள்ளை. (பிற்கால வைணவம்: 1963: 46)

ஆளவந்தார் சாதியற்ற சமுதாயம் அமைக்க விரும்புவதாகவும், வைணவ தர்ம எல்லையை விரிவுபடுத்த வேண்டும் என்று நினைத்ததாகவும் இ. பா. எழுதுகிறார்; ஒருவேளை இவருடைய ஆசையை ஆளவந்தார் மீது ஏற்றிப் பார்க்கிறார் போலும். நாடகம் எழுதும் போது வரலாற்று நிகழ்வுகளைத் தங்கள் விருப்பத்திற்குக் கட்டமைத்துக்கொள்ளலாம் போல் இருக்கிறது. இராமாநுசரை சீர்திருத்தவாதியாகக் காட்டுவதற்கு அவருக்கு முந்திய ஆச்சாரியரையும் காட்டவேண்டும் என்று நினைத்தார் போலும். சமயவாதிகளைக் காப்பாற்றுவது இன்றைய தேவையாக இருப்பதால், இப்படியான கட்டமைப்புகள் பற்றி நாம் ஆச்சரியம் கொள்வதற்கு ஒன்றுமில்லை. இ. பா. நாடகம் எழுதுவதற்கு அடிப்

படிப்பகம்

www.padippakam.com



படையாகக் கொண்ட இந்த மூன்று ஆசைகளில் ஒன்றைத் தவிர, இரண்டு இவருடைய ஆசையாக இருப்பதால், அதனை இராமாநுசர் தலையில் ஏற்றிப்பார்க்கும் வேலையை நாடகத்தில் செய்திருக்கி றார். ஒரு புதிய இராமாநுசரைக் காட்டுகிறார். படைப்பாளிக்கு இவ்வகையான உரிமை இருக்கக் கூடாதா? என்று கேட்கலாம். அது சரிதான். ஆனால் இ. பா. கை வைக்கும் சாதி மற்றும் மதம் தொடர்பான விஷயங்களை ஆதிக்க சாதிக்காரர்கள் அவர்களது அதிகாரத்தை, ஆணவத்தை பாதுகாப்பதற்காகவே வியாக்கியானம் செய்வார்கள் செய்கிறார்கள் என்பது வரலாறு. ஒடுக்கப்பட்ட மக்களை கோயிலில் அனுமதிப்பதாக 'நாடகம்' நடத்துவது, அவர்களுக்குப் புதுப் பெயர் சூட்டுவது போன்ற பல நிகழ்வுகள் அம்மக்களின் எழுச்சியை மட்டுப்படுத்தி அவர்களின் நிலைமைகளில் எவ்வித மாற்றமும் இன்றி அப்படியே வாழ்வதற்கான திட்டமிட்ட செயல்பாடுகள்தாம் என்பதை அம்பேத்கர் முதல் பல அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இந்த வரலாற்றை இ. பா. மிகச் சாதுரியமாக மறந்துபோகிறார். அதனால் இராமாநுசருக்குள் புகுந்து கொள்கிறார். இந்த நாடகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் பற்றிய செய்திகள், முஸ்லீம்கள் பற்றிய செய்திகள் அனைத்தும் இராமாநுசர் பற்றிய சாதனைகளை மிகைப்படுத்தியதாகவே உள்ளன. இவ்வகை மிகைப்பாடுகள் இன்று தேவையா? எதற்காக இவ்வகைக் கட்டமைப்பு என்ற கேள்விகள் எழாமல் இல்லை.

இராமாநுசர் நாடகத்தில் 'உறங்காவில்லி' என்ற பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. அவர் கறுப்பு நிறத்தவராகக் காட்டப்படுகி றார். அவர் கறுப்பு நிறம் நாடக நிகழ்வில பதிவு செய்யப்பட்டு, அதுபற்றிய வசனங்களும் அமைக்கப்பட்டுள்ளன. உறங்காவில்லி என்பவர் வேட்டுவக்குலத்தவர் என்றும், உறையூரில் அரசாங்க அலுவல் புரிந்தவர் என்றும், அவர் தன் மனைவியிடம் மிகுந்த பிரியம் உடையவர் என்றும் செய்திகள் உள்ளன. ஆனால் இந்த உறங்காவில்லி கருப்புத் தோல் உடையவராகவும் அவரை இராமாநுசர் ஏற்றுக் கொள்வதாகவும் அந்தக் கறுப்புத் தோல் தன் மனைவியின் அழகை ஆராதிப்பதாகவும் இ.பா. காட்டுகிறார். 'நந்தன் கதை' நாடகத்தில் 'நந்தன்' தேவதாசியின் அழகை ஆராதிப்பதாகவும் இ.பா. எழுதியுள்ளார். இது ஆதிக்க சாதியினர் கட்டமைத்துள்ள 'அழகு' என்ற கருத்தாக்கத்திற்கு செயல்படுகிறார்கள் என்று காட்டும் முயற்சி. அதாவது ஒடுக்கப்பட்ட மக்களை ஆதிக்க சாதி மனநிலையினராகக் காட்ட முயலும் முயற்சியாகும். நந்தன் கதையில் முழுக்க நந்தனை அவ்வகையில் இ.பா. புனைந்திருக்கிறார். (இந்த நாடகத்தைத் தமது நிகழ்த்துதல் மூலம் இ.பா. காட்டும் பார்ப்பனர்–பறையர் முரணைப் பறை–பரத நாட்டியம் மூலம் காட்டியுள்ளார் அதன் உண்மை வடிவத்தில் இரா.இராசு. அது வேறு கதை.)

படிப்பகம்

www.padippakam.com



முகம்மதிய மன்னன் சுல்தானிடம் அவர் கொள்ளை அடித்து எடுத்துச் சென்ற திருமால் சிலை ஒன்று இருப்பதாக இராமாநுசர் அறிந்தார். அதனை மீட்டு வந்து, திருநாராயணபுரத்தில் வைத்து கோயில் ஏற்படுத்த வேண்டும் என்றும் விரும்பினார். டில்லி சுல்தானிடம் சிலையைக் கேட்டபோது, அது தனது மகளின் விளையாட்டுப் பொம்மையாக இருப்பதை தெரிவித்தார். இராமாநுசர் அழைத்தவுடன் அந்த சிலை, அவரோடு வந்துவிட்டதாம். சிலையோடு வரும்போது சுல்தானின் படையாட்கள் விரட்டிவந்தனர். அப்போது இராமாநுசர் பஞ்சமர் குடிசைகளில் புகுந்து ஒளிந்து கொண்டார். பின்னர் சிலையை எடுத்து வந்து பிரதிட்டை செய்தார் என்று கதையுள்ளது. பஞ்சமர்கள் உதவியதால் அவர்களும் அக்கோவிலில் விழா நாட்களில் மூன்று நாட்கள் மட்டும் நுழைய அனுமதி வழங்கப்பட்டது என்றும் கதை உள்ளது. இக்கதையை இ.பா. தமது நாடகத்தில் வைணவ–முஸ்லிம் ஒருமைப்பாடாகப் படைத்திருக்கிறார். சீரங்கத்தில் இருக்கும் 'துலுக்க நாச்சியார்' கதையோடு வேறு இணைத்திருக்கிறார். மதுரையில் சிவன் முஸ்லிம் வீட்டிற்குச் சென்ற கதை உண்டு. இவ்வகைப் புனைவுகள் அன்றைய சமூக முரண் பற்றிப் புரிந்துகொள்ள உதவும். இதனை இந்து–முஸ்லிம் ஒருமைப்பாடாக இன்று கட்டமைக்கும் போது அதற்கு வேறு பரிமாணம் இருப்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்து மதம் எல்லாவற்றையும் ஏற்கும் 'புனித மதமாக' காட்டப்படும் பொய்மை குறித்துக் கவலைப்பட வேண்டியுள்ளது.

இ. பா. வால் இவ்வகையில் புனையப்பட்ட இராமாநுசர் கதை அண்மையில் நடைபெற்ற 40 நாட்கள் நாடகப் பட்டறை மூலம் அரங்கேற்றப்பட்டது. இந்த நாடக ஆக்கத்தில் பார்வையாளர்களை உட்காரவைத்த நிகழ்வு அதில் இடையிடையே பாடிய இராசேசுவரி அவர்களின் குரல் இனிமையும், திரு இராசு அவர்களால் அமைக்கப்பட்டிருந்த இதமான ஒலியமைப்பும். நாட்டுக் குரலில் வரும் போது உருவான 'கள்ளக் குரல்' ஒலியை நாம் மன்னிக்கலாம். இசை அறிந்தவர்கள் மன்னிக்க மாட்டார்கள். வைணவ சம்பிரதாய நிகழ்வாக(!) அமைந்த இந்த நாடகத்தில் அமைக்கப்பட்டிருந்த காட்சி நிகழ்வுகள் இ.பா. பிரதியில் இருப்பதை அப்படியே காட்ட முயன்றிருக்கிறார்கள். இ.பா. எழுதியுள்ள பேய் ஓட்டும் காட்சி ஒன்றை விட்டுவிட்டார்கள். அதையும் காட்டியிருக்கலாம்; 'தியேட்ரிக்கலாக' இருந்திருக்கும். அரையர் பரதநாட்டியம் ஆடும் காட்சி சுவையானது. அச்சுப் பிரதிக்கும் காட்சிப் பிரதிக்கும் பார்வையினால் எந்த வேறுபாட்டையும் காண முடியவில்லை. இ.பா. அச்சுப் பிரதியைப் படித்தால் போதும், நாடகம் பார்க்க வேண்டியதில்லை என்று சொல்லலாம். ஒரேஒரு காட்சி மட்டும் 'ஒளியால்'

படிப்பகம்

www.padippakam.com



காட்சிப்படுத்தியிருந்தார்கள். கூரேசர், பெரியநம்பி ஆகியோர் தமது கண்களைத் தாமே பிடுங்கிக்கொள்ளும்போது, பார்வையாளர்களை நோக்கி இரு விளக்குஒளி மிகப்பிரகாசமாக வருகிறது. இக்காட்சி அமைப்பு 'நாடகக் காட்சி' அமைப்பாக இருந்தது. இதனை இராமாநுசர் நாடக நிகழ்வின் மறக்க முடியாத அனுபவமாகக் கொள்ள முடியும். பிற காட்சி அமைப்புகள், 'பிர்லா மந்திர்' போன்ற கோயில் அமைப்பு போன்றவை வைணவ பெருமக்களுக்கு உவப்பாக இருந்திருக்க வாய்ப்புண்டு. நாடகப் பார்வையாளர்களுக்கு பெரும் அலுப்பாகவே இருந்தது.

தமிழகத்தில் தொடர்ந்து நடந்த நாடகப் பட்டறைகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் ஒரு அனுபவமாகவே இருந்திருக்கிறது. தமிழக அரங்க வளர்ச்சிப் படிநிலைகளில் அவற்றிற்கான பங்களிப்பை எவரும் மறுப்பதற்கில்லை. ஆனால் இந்தப் பட்டறை, வைணவ அனுபவமாகவே இருந்திருக்க வேண்டும். ஏனெனில் பட்டறையில் பங்கேற்ற மாணவர்கள் எவருக்கும் அரங்கம் பற்றிய புதிய அனுபவத்தைத் தருவதாக, இவர்கள் நடத்திய நாடகம் இருந்திருக்க வாய்ப்பில்லை. இதனை நாடக நிகழ்வில் காண முடிந்தது. முன்னரே நாடகங்களில் பயிற்சி பெற்றவர்கள் தவிர புதியதாகப் பட்டறையில் பங்கேற்றோர் உடல்மொழி அருவருப்பாக இருந்தது. இந்த 40 நாட்களில் அதற்கான அனுபவ பகிர்தல் அவர்களுக்கு வழங்கப்படவில்லையோ என்று சந்தேகப்பட வேண்டியுள்ளது. நாடகப் பட்டறையில் இவ்வகையான பிரதிகளை எடுத்து நிகழ்த்துவது பல பரிமாணங்களை உள்ளடக்கும் அரங்கப் புரிதலைத் தடை செய்யும் நிகழ்வாகும். இவ்வகையான கொடுமையைச் செய்தவர்களை தமிழ் அரங்க வரலாறு மன்னிக்காது.

ஒட்டுமொத்த நிலையில், ஆச்சார்யர்கள் வரலாற்றில் இராமாநுசர் செய்த சீர்திருத்தங்கள் அன்றைய சூழலில் வியந்து போற்றியிருக்க வேண்டிய செயலாக இருக்கலாம். இன்றைய சூழலில் அது சாதாரண தகவல் மட்டுமே. இராமாநுசரை, இந்துமத ஏகாதிபத்தியம் உருவாகிக்கொண்டிருக்கும் இன்றைய இந்தியச் சூழலில் புதுப்பிக்கக் காணும் கனவுகள் நிறைய சந்தேகங்களை எழுப்புகிறது. இந்திரா பார்த்தசாரதி அவர்களை வெறும் பார்த்தசாரதியாகவே பார்க்க வேண்டியுள்ளது. 'குருதிப்புனல்' வழி சமூக நிகழ்வைப் 'பாலியல் குரூரம்' என்று சுருக்கிப் பார்த்த இவர் இன்றைக்கு இராமாநுசரைப் 'புனிதராக', 'சீர்திருத்தவாதியாக'க் காட்டத் துடிப்பது ஏன்? இவரின் மறைக்கப்பட்டிருக்கும் மத அடையாளங்கள் 'குரூரமாக' இராமாநுசரில் காணும் பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. அதற்காக அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் தேசிய நாடகப் பள்ளி, தென்னிந்தியப் பண்பாட்டு மையம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்திய பட்டறையில் வைணவப் பிரச்சாரம் செய்ய அனுமதித்தது யார்? அரசு நிறுவனங்களில் இவ்வகைப் பிரச்சாரம் மூலம் சிலர் முகங்கள் தெரியலாம். கே.எஸ். இராசேந்திரன் என்று அறியப்பட்ட நபர் ஸ்ரீநிவாச இராசேந்திரன் என்று அறிய முடிந்தது. (அழைப்பிதழ்களில் அவர் இவ்விதமே அச்சிட்டுள்ளார்.) இதற்குப் பொதுமக்களின் பணத்தை வீணடிக்க இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

இறுதியாக, நாடகப்பட்டறை என்ற பெயரில் அரங்கத்தின் அடிப்படைகள் எதுவும் தெரியாத திரைப்பட மற்றும் வெகுசன ஊடகப் பிரபலங்கள் சிலரை அழைத்து, நாடகம் பற்றிப் பேசச் சொல்லியும், வைணவப் பிரச்சாரத்தை நாடகமாக நடத்தியும் பொதுப்பணத்தை விரயம் செய்தவர்களைத் தமிழ்ச் சூழல் மன்னிக்காது.

**நன்றி: காலக்குறி, அக். 98**

## விருதுகளும்- விவாதங்களும்- விளிம்புகளும்

**—இந்திரா பார்த்தசாரதி**

கிரிஷ் கர்னாட்டுக்கு இந்த ஆண்டு ஞான பீடப் பரிசு கிடைத்திருக்கிறது. பாராட்டுகள்.

கிரிஷ்கர்னாடே இது பற்றித் தன் ஆச்சர்யத்தைத் தெரிவித்திருக்கிறார். இது அவருடைய இலக்கிய நேர்மை உணர்வைக் காட்டுகிறது. இதற்கும் அவருக்குப் பாராட்டுகள்

ஞானபீடப் பரிசுக்குழு இதுவரை இந்த மாதிரி பல ஆச்சர்யங்களைத் தந்திருக்கிறது. இவற்றை ஏற்றுக்கொள்ள இலக்கிய உலகம் பழகிக்கொள்ள வேண்டும்.

தமிழுக்கு அகிலனுக்குப் பிறகு ஏன் இந்தப் பரிசு கிடைக்கவில்லை என்பது அடிக்கடி எழுப்பப்படும் கேள்வி.

அகிலனுக்குக் கிடைத்தபோது நாம் அதை ஏற்றுக் கொண்டோமா? ஆயிரக் கணக்கான எதிர்ப்புக் கடிதங்களை ஞானபீடப் பரிசுக் குழுத் தலைவர் உமா சங்கர் ஜோஷிக்கு எழுதி எதிர்ப்புக்

படிப்பகம்

www.padippakam.com



கடிதம் எழுதுவதைப் பொறுத்தவரையில் ஒரு 'ரெகார்ட்' ஏற்படுத்தியுள்ளதைத்தவிர வேறென்ன சாதனை செய்தோம்? மற்றையமொழிகளில் பரிசு பெற்றவர்களில் பலரைக் காட்டிலும் அகிலன் சிறந்த எழுத்தாளர் என்பதில் சந்தேகமில்லை. தமிழைப் புறக்கணிப்பது என்பது ஞானபீடத்துக்கு சௌகர்யமாகிவிட்ட ஒரு விஷயம்.

நம்முடைய சில இலக்கியவாதிகளின் பெயர்கள் அகில இந்திய ரீதியாக அறிமுகமாகியிருந்தாலும், அவர்களுடைய நல்ல படைப்புகளைப் பற்றி யாருக்கு என்ன தெரியும்? நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஹிந்தியில் நல்ல முறையில் மொழியாக்கம் செய்யப்படும் நூல்கள்தாம் அகில இந்திய அங்கீகாரம் பெறுகின்றன. அரசாங்க நிறுவனங்களாகிய சாஹித்ய அகாதெமியும் தேசீய புத்தக நிறுவனமும் வெளியிடும் ஒரு சில தமிழ் இலக்கியப் படைப்புகளின் ஹிந்தி மொழி பெயர்ப்பு நூல்களின் தரத்தை அரசாங்க கிடங்குகளில் உள்ள கரையான்கள் தீர்மானிக்கின்றனவே யன்றி, இலக்கிய ரசிகர்களை அந்நூல்கள் சென்றடைவதில்லை.

இந்த வகையில் கேரள்க்காரர்களும், கன்னடக்காரர்களும் கெட்டிக்காரர்கள். ஒன்று, அவர்கள் ஹிந்தியை அவர்களது பிராந்தியங்களிலிருந்து நாடு கடத்தவில்லை. இதனால் அவர்கள் இலக்கியப் படைப்புகளுக்கும் மொழிபெயர்ப்பாளர்கள் கிடைப்பது சுலபமாக இருக்கிறது.

இரண்டு, அவர்கள் அரசாங்க நிறுவனங்களைக் காட்டிலும் தனியார் பதிப்பீட்டு நிறுவனங்களை நம்புகிறார்கள். வெளியிடப்படும் நூல்கள் ரசிகர்களைச் சென்றடைகின்றன. இன்னொரு விஷயம் வங்காள மொழி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒரியா ஆகிய மொழிகளில் வேறு துறைகளில் தங்களுடைய சிறப்பை அகில இந்திய ரீதியாக ஸ்தாபித்துக் கொண்டவர்கள், அவர்கள் மொழிகளில் உள்ள சிறந்த இலக்கிய நூல்களைப் பற்றியும் படைப்பாசிரியர்களைப் பற்றிப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். தகழியை அகில இந்திய ரீதியாக அறிமுகப்படுத்தியவர் கலைத்துறை விற்பன்னர் வி.கே. நாராயணமேனன். அவர்தாம், முதல் ஞானபீட விருது, குரூப்புக்குக் கிடைப்பதற்குக் காரணமாக இருந்தார். ஏன், நோபல் பரிசுப் பெற்ற அமார்த்தியசென் அண்மையில் சுனில்கங்கோபாத்யாவைப் பற்றிப் பாராட்டிப் பேசியிருக்கிறார். (அடுத்த வருஷ ஞானபீடப் பரிசு சுனிலுக்குத்தான்.) தமிழில் இத்தகைய கலாசார சூழ்நிலை இருக்கிறதா? பிற துறை விற்பன்னர்கள் தமிழ் இலக்கியப் படைப்புகளைப் படிக்கின்றார்களா? தமிழ் மொழியைப் பற்றி அவர்களுக்கு அக்கறை உண்டா என்பதே அடிப்படையான கேள்வி.

படிப்பகம்

www.padippakam.com



படைப்பைக் காட்டிலும் படைப்பாசிரியனைப் பற்றியும் அவன் ஒரு நூலை எழுதுவதற்கான அந்தரங்க நோக்கம் ஏதாவது இருக்கக் கூடுமோ என்பது பற்றி ஆராய்ச்சி செய்வதிலேயே நம் விமர்சகர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். டாக்டர் அரசு, ராமாநுஜர் நாடகத்தை ஆய்வு செய்து, எழுதப்படுவதற்கு காரணம், ஆக்கியோனும் அந்நாடகக் கதாசிரியனும் ஒரே சாதி என்ற அரிய பெரிய உண்மையைக் கண்டுபிடித்து எழுதியிருக்கிறார். நான் ஏதோ ஒரு ஜாதியில் பிறந்திருந்தாலும் அந்த ஜாதியைப் பற்றிய பிரக்ஞை எனக்குக் கிடையாதென்று அரசுவுக்கு நிரூபித்துக்காட்ட வேண்டும் அவசியம் எனக்கில்லை. ஐன்ஸ்டீன் கூறுவாராம்: 'நான் யூதன் இல்லை' என்று நான் நினைத்தாலும் நாஜிகள் அதை நான் மறந்துவிடக்கூடாது என்கிறார்கள்.

'ராமாநுஜர்' நாடகத்தின் முன்னுரையில் ராமாநுஜரைப் பற்றி வழங்குகின்ற செவிவழிச் செய்திகளை நான் ஏன் மாற்றி எழுதியிருக்கிறேன் என்று விளக்கியுள்ளேன். எனக்கு புக்கனன் பதிவேடுகள்தான் வரலாற்று ஆதாரம். நாடக ஆசிரியன் வழங்குகின்ற கட்டுக் கதைகளைக் காலத்துக்கு ஏற்றாற்போல் கதாபாத்திரத்தின் பல பரிமாணங்களைச் சுட்டிக்காட்டுவதற்காக அர்த்தப் படுத்திக்கொள்ள உரிமை ஆசிரியனுக்கு உண்டு என்பது ஓர் இலக்கிய, நாடக நியாயம்.

பெர்னாட்ஷாவின் 'செயின்ட் ஜோன்' படித்தவர்களுக்கு இது புரியும். ப்ரெக்டின் நாடகங்களைச் சரிவர அறிந்து கொண்டவர்களுக்கு இது புரியும். டாக்டர் அரசு, நாடகப் பிரதிகளை படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். "நந்தன் கதையில்" பறையும், பரதமும் இயக்குநர் ராஜூ மேடைக்காகப் புகுத்திய புதிய பரிமாணங்கள் என்கிறார் இந்தப் பேராசிரியர்.

பறைக்கும் பரதத்துக்கும் உள்ள போட்டி என்பதுதான் நாடகப் பிரதியின் அடிநாதம். அதை மிக அழகாக ராஜூ அரங்கத்தில் காட்டியிருக்கிறார். நாடகப் பிரதியைப் படிக்காமல், நாடகத்தைப் பார்த்துவிட்டு நாடகப் பிரதியைப் பற்றி விமர்சனம் செய்வது நியாயமா என்று பேராசிரியர் அவர்களே தம்மைத்தாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி.

நன்றி: கணையாழி, பிப். 99

படிப்பகம்

www.padippakam.com

## 'புதிய யூதர்' இ. பா.

### —வீ அரசு

ஐன்ஸ்டீன் என்று தன்னைக் கருதும் பேரா. பார்த்தசாரதி (இ. பா.) இராமாநுசர் நாடகப் பிரதி பற்றி 'காலக்குறி' சிற்றிதழில் நான் எழுதியது தொடர்பாக மேலோட்டமான ஒரு எதிர்வினையைத் தமது கணையாழி, பிப்ரவரி- 99 இதழில் புரிந்துள்ளார். அவரது எதிர்வினையில் ஆதாரமற்ற அவதூறுகளை என் மீது கோபத்தோடு பொழிந்திருக்கிறார்.

அவரது சாதி பற்றி, எனது விமரிசனத்தில் எங்கும் குறிப்பிடவில்லை; மாறாக வைணவர்கள் சேர்ந்து வைணவப் பிரச்சாரம் செய்திருக்கிறார்கள் என்று எழுதியுள்ளேன். பார்த்தசாரதி என்ற பெயர் வைணவப் பெயர் என்று நான் புரிந்து கொண்டேன். ஆனால் அதைச் சாதிப் பெயர் என்று புரிந்துகொள்ள வேண்டும் என்று பேராசிரியர் அறிவுறுத்துகிறார். வைணவம் என்பதைச் சாதியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற பேராசிரியர் ஐன்ஸ்டீன் (இ.பா.) கண்டுபிடிப்பு குறித்து என்ன சொல்லுவது?

தனது பிரதியாக்கத்திற்கு 'புக்கனன் பதிவேடுகள்' ஆதாரம் என்று கூறுகிறார். அந்த ஆதாரத்தையே விரிவாக எழுதி எனது வாதத்தை மறுத்திருக்கலாம்; ஆனால், அவரே "கட்டுக் கதைகளைக் காலத்திற்கு ஏற்றாற் போல் கதாபாத்திரங்களின் பல பரிமாணங்களைச் சுட்டிக்காட்டுவதற்காக அர்த்தப்படுத்திக்கொள்ள உரிமை ஆசிரியனுக்கு உண்டு என்பது ஓர் இலக்கிய, நாடக நியாயம்" என்றும் எழுதுகிறார். இந்த விஷயம் எனக்குத் தெரியாமல் போய்விட்டதாகவும் நாடகப் பிரதிகளைப் படித்துப் புரிந்து கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை கூறியுள்ளார். தமிழ்ப் பேராசிரியரின் இந்த அறிவுரைக்கு எனது மனப் பூர்வமான நன்றி.

'காலக்குறி'யில் இராமாநுசர் நாடகப் பிரதி பற்றிய விவாதத்தில் நான் எழுப்பியுள்ள விவாதமே, மேலே பேராசிரியர் சொல்லியுள்ள சிக்கல்தான். அதுபற்றி அறியாமையில் நான் இருப்பதாக, நாலுவரி மேலோட்டமான விவாதத்தைக் கணையாழியில் எழுதியுள்ளார். தனக்கு அச்சு ஊடகம் உள்ளது, எப்படி வேண்டுமானாலும் எழுதலாம் என்ற 'தன்முனைப்பை' பேராசிரியர் கொண்டிருப்பது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அச்சு ஊடகச் செயல்பாட்டின் அரசியலே அதுதானே?

சரி...

படிப்பகம்

www.padippakam.com



இராமாநுசர் பிரதி. பார்த்தசாரதி அவர்களால், சாதி ஒழிப்புக்கு எதிராக, இன்றைய தலித்திய மற்றும் மதப் பாசிச சக்திகளின் கருத்தாக்கங்கள் மிகுந்துள்ள சூழலில் முன்வைக்கப்படுவதை, நான் உள்நோக்கமுடையதாக வாசித்தேன். அதற்கான காலச்சூழலை கட்டுரையில் விவரித்துள்ளேன். அது பற்றி எதுவும் பேசாமல், நான் எந்த அடிப்படையும் அறியாதவன் என்கிற பாணியில் எழுதியுள்ளார். பேராசிரியரின் இந்த அணுகுமுறை அநாகரிகமாக உள்ளது. எந்தப் பொது அரங்கத்திலும் இதுபற்றி விவாதிக்க நான் தயாராக இருக்கிறேன்.

'நந்தன் கதை' நாடகம் பற்றிய புதிய விளக்கம் ஒன்றையும் எழுதியுள்ளார். நாடகப் பிரதியைப் படிக்கவில்லை என்று குற்றம் சாட்டுகிறார். அவர்முன் உட்கார்ந்து, "அய்யா! நான் உமது பிரதியைப் படிக்கிறேன்" என்று சர்டிபிகேட் வாங்க வேண்டும் போல் இருக்கிறது.

'நந்தன் கதை', பார்த்தசாரதி அவர்களின் அச்சுப் பிரதியில் அவர் கூறியது போல் பறை என்று நேரடியாக வரவில்லை. கொம்பு, பறை போன்ற கருவிகள் பின்னணியில் இசைக்க வேண்டும் என்று எழுதியுள்ளார். பறை—பரதம் என்ற முரண்; அது தொடர்பான நிகழ்த்தல் நோக்கி, அவரது பிரதியில் அமையவில்லை. மாறாக பறை, பரதம் பின்னணியில் வருவதாகவே உள்ளது. அவை இரண்டும் நிகழும் போது அவற்றில் எது தமக்குரியது என்ற சார்பு இல்லாமல் இரண்டு குறித்தும் நடுநிலையோடு எழுதியுள்ளார். (மீண்டும் அவர் 'நந்தன் கதை'யை இப்போது படிப்பது நல்லது.) ஆனால் திரு இராசு இயக்கிய 'நந்தன் கதை'யில் பறையும் பரதமும் மோதுகின்றன. பறை ஒடுக்கப்பட்டவர்களின் வடிவம் என்ற தெளிவான முரணாக நாடகத்தில் நிகழ்த்தப்படுகிறது. பறை வரும்போது எதிரில் உள்ள பார்வையாளர்களும் நாடகத்தில் வரும் பார்வையாளர் பாத்திரங்களும் அந்த ஒலி லயத்தில் எழுந்து உத்வேகம் கொள்வதும், பரதம் வரும்போது அந்நியப்படுதலுமான தன்மை திரு இராசு அவர்களின் நிகழ்த்துப் பிரதியில் உள்ளது. இதற்கான எவ்விதமான பிரதிச் சான்றும் இ. பா. அவர்களின் அச்சுப் பிரதியில் இல்லை. (தேவையெனில் இது தொடர்பாகத் தனியான விவாதம் நடத்தலாம்.) இதைக் குறிப்பிட்டு எழுதியவுடன், அப்படி தனது பிரதியில் இருப்பதாகச் சொல்ல வேண்டிய நிர்பந்தம் பேராசிரியருக்கு ஏற்பட்டிருப்பதாகவே கருதுகிறேன். இந்த விவாதம் நாடகம் பார்த்தவர்கள், இ. பா. அவர்களின் அனைத்து நாடகப் பிரதிகளின் 'அரசியல்' புரிந்தவர்கள் ஆகியவர்களால் பட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



வெறும் அச்சு ஊடகப் பதிவில் புரிந்துகொள்ள இயலாது. தேவையெனில் இ.பா.வைப்போல் தமது வசதிக்கு ஏற்ப எழுதிக்கொள்ள இயலும்.

நிகழ்த்துப் பிரதி, ஆசிரியரின் அச்சுப் பிரதி இவற்றுக்கான முரண்கள் குறித்து எழுதியுள்ளேன். இந்த விஷயமெல்லாம் என்னைப் போன்றவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான். பேராசிரியருக்கு மீண்டும் நன்றி.

## இ.பா.வின் விவாத அவதூறுகள்

இதழ்க் குறிப்பு:

"டாக்டர் அரசு நாடகப் பிரதிகளைப் படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று அறிவுரை கூறும் இ.பா., அரசுவின் நாலைந்து பக்க விமர்சனத்தைக்கூட குறைந்தபட்சம் ஒருமுறையேனும் மனமொன்றிப் படித்து உள்வாங்கிக் கொள்ளாத அபத்தத்தைச் செய்திருக்கிறார். காரணம், 'விமர்சனத்திற்கப்பாற்பட்ட' தன்னைப் போன்றவர்களை இந்த விளிம்புகள் விமர்சிக்கிறார்கள் என்ற ஆத்ரம் அல்லாமற்போனால் அவர் தன் கட்டுரைத் தலைப்பில் சொல்லும் 'விளிம்புகளுக்கு' என்ன பொருள்? எழுத்துலகப் பிரம்மாக்களாக ஒளிவட்டம் போட்டுக் கொண்டலையும் இ.பா. போன்றவர்களின் அருவருப்பான வெளிப்பாடு இது. விமர்சனம் என்றால் அப்படியொரு குமட்டல். அண்மையில் அசோகமித்திரன் கூட சுந்தராராமசாமியை விமர்சித்தவர்களை ஒரு பிடி பிடித்திருந்தார். காலச்சுவடு நூல் வெளியீட்டு விழாவுக்குக் கடல் மாதிரி கூட்டம் கூடியதும், நூல்கள் விற்றுத் தீர்ந்ததும், சுந்தரராமசாமியை விமர்சனத்திற்கப்பாற்பட்டவராக்குவதாக அசோகமித்திரன் கணக்கு. அரசியல் பெருச்சாளிகள் ஊழல் குற்றவாளிகளாக நீதிமன்றங்களால் சுட்டிக்காட்டப்படும்போது "(தேர்தலில் வெற்றி பெற்று) மக்கள் மன்றத்தில் எங்களை நிரபராதிகள் என்று நிருபிப்போம்" என்கிறார்கள். இப்படிச் சொன்ன முதல் ஜாம்பவான் மராட்டிய சாம்ராட் சாட்சாத் சரத்பவார்தான். ஏற்றுக் கொள்ளலாமா?

மக்கள் என்ன ஐயா மக்கள்? அவர்கள் கலைஞரைப் புனிதராக்குவார்கள். ஜெயலலிதாவை அரியணை ஏற்றுவார்கள். பிள்ளையாருக்கு முலைப்பால் வேண்டுமெனில் அதையும் கறந்து கொடுப்

படிப்பகம்

www.padippakam.com



பார்கள். பாமரர்கள் அப்படித்தான் என்று எளிமைப் படுத்தி விடாதீர்கள். பிள்ளையார் பால் குடித்த சந்தோஷத்துக்கு வக்கா லத்து வாங்கிய இந்திராபார்த்தசாரதிகளும், சந்திராசாமிகளும், சேஷன்களும், சங்கப் பரிவாரங்களும் பாமரர்களா என்ன?

பிள்ளையார் பால்குடித்த விவகாரம் பற்றி, "அறிவார்ந்த விளக்கங்களால் நம்பிக்கையாளர்களின் சந்தோஷங்கள் ஏன் குலைக்க வேண்டும்?" என்பது இ.பா.வின் கேள்வி. அப்படிக் குலைத்த அறிவியலாளர்களை 'பிறக்கும் போதே பெரியவர்களா னவர்கள்' என்றும், முற்போக்காளர்களை 'கடவுளும் மதமும் அவர்களுக்கு இழிந்த சொற்கள். மனித வாழ்க்கையை சகிக்க முடியாததாக்க வல்லவர்கள்' என்றும் சாடுகிறார் தனது Man, Milk and Madonna என்னும் நடைச்சித்திரத்தில் (Aside, November1, 1995. இவருக்குக் கட்டுரைத் தலைப்புகளை மோனைச் சொல்லடுக்குகளாய்க் கொடுப்பது பிடிக்கும் போலும். தமிழ் படித்ததற்கு இதைக்கூடச் செய்யாவிட்டால் எப்படி?)

பிள்ளையார் பால் குடிப்பதை நம்புவதில் மக்களுக்கேற்படும் சந்தோஷம் என்பது ஏதோ கிளுகிளுப்பையை வைத்து விளை யாடி மகிழ்ந்து மறந்து போகும் விவரமறியாச் சிறுபிள்ளை விளையாட்டா என்ன? மதத்தின் பெயராலும் கடவுளின் பெயரா லும் நம்பிக்கையாளர்களை இந்த விஷவிருட்ஷ வித்தூன்றிகள் எப்படி நரகத்தில் ஆழ்த்தி வைத்துள்ளார்கள் என்பது தெரி யாதா என்ன? தெரிந்துதானே இராமாநுஜர் அழைத்ததும் திரு மால் சிலை சுல்தான் மகளிடமிருந்து குடுகுடுவென்று அவர் பின் னாலேயே ஓடிவந்துவிட்டது என்று நம்பிக்கையோடு நாடகம் பண்ண முடிகிறது. "இது என்ன சாமிங்க. சுல்தான் மகள்னா என்ன? ஆசை ஆசையாய் வைத்து விளையாடும் சின்னக் குழந் தையிடந்தானே அது ஒட்டிக்கொண்டிருக்க வேணும். அதை விட் டுட்டு இராமாநுஜர் பின்னாலே ஓடிச்சுன்னா, அது குழந்தையை நேசிக்கத் தெரியாத கூறுகெட்ட சாமின்னா," என்று திருமதி கவி தாசரண் சொல்லி அங்கலாய்த்தார் 'இந்த சாமிகளுக்குத் துலுக் கக் குழந்தையைக் கண்டால் பிடிக்காது. துலுக்க நாச்சியாரைத் தான் பிடிக்கும்' என்பது அந்த அம்மாளின் யோசனைக்கு இன் னும் எட்டவில்லையாக்கும். இதற்கும் மேலாக, இ.பா. என்னும் படைப்பாளி "பொதுவுடைமைத் தத்துவம் செத்துப்போச்சு" என சர்வசாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போகக் கூடிய எண்ணப் போக்குள்ளவரும்கூட. (அதே கட்டுரை.) இதில் வெற்றுத்தலை 'சோ'வுக்கும் இவருக்கும் ஒரு வேறுபாடும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



ஏசு கிறிஸ்துவுக்குப் பிறகு, மனித குலத்தின் எட்டுத் திசைகளையும் வாழ்வியலின் அடியாழம் வரை பாதித்தவன் மரணமிலாப் பிறவியனான கார்ல் மார்க்ஸ் மட்டும்தான் என்பதையும், இன்று தீவிரவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதம், வட்டாரவாதம் என என்ன பெயரிட்டு வெறுத்தாலும் விலக்கிவிட முடியாதபடி மொழி, இன, கலாச்சாரப் போர்களாக உலகம் முழுமையும் கொந்தளிப்ப தன் மூல வேர்கள்கூட வர்க்க சித்தாந்தத்தின் நுண் விளக்கக் கூறுகளிலிருந்துதான் சலித்தெடுக்கப்பட்டன என்பதையும் மறந்துவிடுவது இவர்களுக்கு எளிதாய் இருக்கிறது. (மார்க்சியப் பரிமாணங்களாகும் இவ்வகையான தேடலையும் வளர்த்தெடுத்தலையும் கம்யூனிசக் கிழங்கள் சாத்தியமற்றவையாக்கிவிட்டதையும் நினைவுகூர வேண்டும். பன்மைகளின் மரியாதைக்குரிய அங்கீகாரமே ஒருமையுருத்தும் பொதுமை இழை என்பது ஒற்றைத்துவ அதிகாரக் கட்டமைவுக்கு உவப்பாயில்லை என்பதான கோளாறு இது.) இப்படிப் பட்ட ஒருத்தர் எழுத்துக்கு 'அந்தரங்க நோக்கம் ஏதேனும் இருக்கக்கூடுமோ' என்று டாக்டர் அரசு ஆய்ந்தால் அதிலென்ன தப்பு? துப்பு கெட்ட துப்பறியும் கதை எழுதுகிற ஆள்கூட (இந்திராசௌந்தர்ராஜன்) தன் கதையில் இடஒதுக்கீட்டைக் கேள்விக்குள்ளாக்கும் போது, இந்திராபார்த்தசாரதி மட்டும் மனித சார்புகளுக்கப்பாற்பட்ட தெய்விகப் படைப்பைப் பொழுதுபோக்காகப் படைக்கிறவர் என்று நம்ப வேண்டுமா என்ன?

இராமாநுஜர் நாடகம் மூலம் வைணவர்கள் சேர்ந்து கொண்டு வைணவப் பிரச்சாரம் செய்கிறார்கள் என்று சொன்ன அரசுவை, "ஆக்கியோனும் அந்நாடக கதாசிரியனும் (அதாவது இ. பா. வும் இராமநுஜரும் என்பதாகத் தெரிகிறது) ஒரே சாதி என்ற அரிய பெரிய உண்மையைக் கண்டுபிடித்து எழுதியிருக்கிறார்" என்று மகா எகத்தாளத்தோடு எள்ளுகிறார் இ. பா. மனச்சமநிலை கெடும்போது ஒருவனுக்குத் தன்மீதே துப்பிக்கொள்ளத் தோன்றுமோ என்னவோ. இது அதுபோன்றதுதான்; அழிச்சாட்டியமான பொய். இந்தியாவின் பெரும்பான்மை மக்களில் ஒருவாராகப் பிறந்துவிட்டு மதத்துக்கும் சாதிக்கும்கூட வேறுபாடு தெரியாதவராக இருப்பாரா அரசு?

அவர் மதத்தைத்தான் சொல்கிறார் என்பதற்குக் கூடுதலான சான்றாக 'கே. எஸ். இராசேந்திரன் என்று அறியப்பட்ட நபர்' பற்றிய செய்தியையும் தருகிறார். கல்கி தன் பிள்ளைக்கு ஏதோ நன்றிக்கடனாக இராசேந்திரன் என்று பெயர் வைத்திருந்தாலும், பொதுவாகப் பார்ப்பனர்கள் அந்தப் பெயரைப் பயன்படுத்துவதில்லை. அவ்வளவு ஏன், புகழ் பெற்ற சைவ சமயக் குரவரும்

படிப்பகம்

www.padippakam.com



உமையிடம் முலைப்பால் பருகியவருமான ஞானசம்பந்தன் பெயர்கூட அவர்களுக்கு நிரந்தரத் தீட்டுதான். இந்நிலையில் கே.எஸ்.இராசேந்திரனைப் பார்ப்பனராகக் கருத வேண்டிய சம்சயம் அரசுவுக்கு நேர்ந்திருக்கத் தேவையில்லை. சந்தர்ப்பம் சூழும் போது 'நாங்களும் தமிழர்கள்தாம்' என்று பார்ப்பனர்கள் சொல்லிக் கொள்வதுண்டுதான் எனினும் இராஜராஜ- இராஜேந்திர சோழர்களின் பரம்பரையினர் என்று தங்களை ஒருநாளும் சொல்லிக்கொள்வதில்லை. மாறாக, பிறன்மனை இச்சிக்கும், பெண்டாட்டியை விருந்தினர்களுக்குப் படைக்கும், சகோதரிகளைப் புணரும், கொழுத்த இளங்கன்றுகளைக் கொன்று சமைத்துண்ணும் அறிவார்ந்த ரிஷிமார்கள் வழிவந்தவர்கள் என்று பீற்றிக் கொள்வதில் அவர்களுக்கு எப்போதும் பெருமை. ஆகவே, கே.எஸ். இராசேந்திரன் தன்னை ஸ்ரீநிவாச இராசேந்திரன் என்று வெளிப்படுத்திக் கொண்டபோதுகூட இராமாநுஜர் நாடகம் தொடர்பாகத் தன்னையும் ஒரு வைணவராகக் காட்டிக் கொண்டதாகத்தான் அரசுவின் கண்டனம் எழுகிறது.

'எதிர்வினை' போக்கு இவ்வாறிருக்க, இ. பா. ஒரு பொய்யை ஆதாரமாக நிறுவி, "நான் ஏதோ ஒரு ஜாதியில் பிறந்திருந்தாலும் அந்த ஜாதியைப் பற்றிய பிரக்ஞை எனக்குக் கிடையாதென்று அரசுவுக்கு நிரூபித்துக் காட்டவேண்டும் அவசியம் எனக்கில்லை" என்று தரையைக் காலால் உதைத்துப் பிரகடனப்படுத்துகிறார். அண்மையில், பெரியாரியம் பேணுவதாகச் சொல்லிக் கொள்ளும் ஒரு பேராசிரியர்கூட, தலித்துகளிடம் தனக்குள்ள ஈடுபாட்டை அடிக்கடி தன் நெஞ்சைப் பிளந்து காட்டிக்கொண்டிருக்க முடியாது என்று பிரகடனப்படுத்தியிருந்தார். இது நாசிகள் உற்பத்தி செய்யும் பாசிசம் அல்லாமல் வேறென்ன? விளிம்புகள்- தலித்துகள் இதை எதிர்பார்க்கிற முட்டாள்தனத்தைச் செய்கிறவர்கள் என்று நம்பும் அராஜகவாதிகள் இவர்கள். அமுதத்தையே இவர்கள் விழுங்கினாலும் மலமாய்க் கழிக்கிறவர்கள்தானே. விளிம்புகள்- தலித்துகள் அப்படியல்ல. கழிவை எருவாய் உறிஞ்சி, நீங்கள் புசிக்கக் கனிகளைத் தருகிறவர்கள். இனிமேலாவது அவர்கள் அந்த முட்டாள்தனத்திலிருந்து விடுபட்டால் உருப்படுவார்கள்.

'காலக்குறி'யில் அரசுவின் எதிர்வினையோடு 'நூறா'வின் எதிர்வினையும் வந்திருந்தது. 'இந்துமதம் எல்லாவற்றையும் ஏற்கும் புனிதமாய்க் காட்டும் பொய்மை குறித்து' அரசு கவலைப் பட்டதோடு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 40 மாணவர்களுக்கு 40 நாட்களுக்கு வழங்கிய உணவையும் உறைவிடத்தையும் ஏற்றுக் கொண்டு, பயிற்சிக்கும் நாடகத் தயாரிப்புக்குமாகத் தேசிய

படிப்பகம்

www.padippakam.com



நாடகப் பள்ளியும் தென்னகப் பண்பாட்டு மையமும் சேர்ந்து வழங்கிய ஐந்தரை லட்ச ரூபாயைத் தின்று ஏப்பம்விட்டு, நாடக ஆக்கத்துக்குத் தேவையான கலையம்சம் துளியும் இல்லாத– பல பரிமாணங்களை உள்ளடக்கும் அரங்கப் புரிதலற்ற,– ஒற்றைப் பரிமாணத்தில் தட்டையாக அமையப்பெற்ற– நிகழ்த்துக் கலையின் புதிய அழகையும் அர்த்தத்தையும் தொலைத்த– வைணவப் பிரச்சாரம் நடத்தும் மூன்றாம்தர நாடகமான இராமாநுஜரை அரங்கேற்றியது பொதுப் பணத்தை வீணடித்த மன்னிக்க முடியாத செயல் என்று குற்றம் சாட்டுகின்றன அந்த எதிர்வினைகள். விருதுகள் பற்றி, தமிழுக்கு ஞானபீடப் பரிசு கிடைக்காததுபற்றி, பிற மொழிகளில் அது கிடைப்பதற்கான பல்துறை அறிஞர்களின் ஒருங்கிணைப்பு பற்றி, இந்தி மொழிபெயர்ப்பின் அவசியம்பற்றியெல்லாம் வெகுவாகக் கவலைப்படும் இ.பா. அவர்கள் இக் குற்றச்சாட்டு பற்றியும் ஒரு வார்த்தையேனும் கவலைப்பட்டிருக்கலாம். ‘நந்தன் கதை’யை இராசு அவர்கள் நன்றாகப் பண்ணியிருந்ததாகப் பாராட்டத் தெரிந்தவருக்கு, ‘இராமநுஜர்’ நாடகம் கந்தரகூளமாகிவிட்ட உண்மை உறைக்காமல் போயிருக்க முடியாது. ஒருவேளை, ‘இராமாநுஜர்’ வேறொருவர் எழுதிய நாடகமாயிருந்தால், விளிம்புநிலைப் பார்வையை இவரே விரும்பி ஏற்றுக்கொண்டு ‘இதற்குப் பதிலாக எஸ்.வி சேகரின் துணுக்குத் தோரண நாடகமொன்றை அரங்கேற்றியிருக்கலாம்’ என்று நச்செனச் சொல்லியிருப்பாரோ என்னவோ. இலக்கியப் பிதாமகர்களாக தில்லி வரை அறியப்படும் மூத்த இலக்கியவாதிகள் ஆக்கிரமித்துள்ள தமிழகச் சூழல் இவ்வாறாகத்தான் உள்ளது. ●

---

## வ.ரா.வுக்கு வந்த கல்கியின் கடிதங்கள்

Telephone: 3311

Telegrams: "VIKATAN", Madras

Anandha Vikatan Office
2/140, Broadway, Madras
Dated: 23-6-1933

அநேக நமஸ்காரம்.

பூனாவுக்குச் சென்றிருந்து நேற்று மாலை திரும்பினேன். இன்று தங்கள் கடிதம் பார்த்தேன். அதை இன்னும் நாலைந்து தடவை படிப்பதாக உத்தேசம். இம்மாதிரி criticism எழுதி உதவி செய்பவர்கள் இல்லா

படிப்பகம்

www.padippakam.com



தது என்னுடைய மனக்குறைகளில் ஒன்று. அதனால் என்னுடைய அபிவிருத்தியே தடைப்படுகிறது என்று எண்ணி வருகிறேன்.

தங்கள் கட்டுரையை இன்னும் படிக்கவில்லை. "விகட"னில் முதன்முதல் வரும் தங்கள் கட்டுரை முதல்தரமானதாக இருக்க வேண்டுமென்பது என் எண்ணம். அதற்குக் குறைந்ததாய்த் தோன்றினால் தாங்கள் சொல்லியிருக்கிறபடி செய்வேன். மேலும் தங்கள் கட்டுரைகளை எதிர்பார்க்கிறேன். பொதுவாக, தங்களுடைய எழுத்தில் கருத்து வன்மை அதிகம் இருக்குமாதலால், கட்டுரை நீளமாயுமிருந்தால் வாசகர்கள் நிச்சயம் களைத்துப் போவார்கள். மூன்று பக்கத்துக்குள் இருந்தால் தகுதியாயிருக்கும்.

இதழ்தோறும் அல்லது மாதம் ஒருமுறை அரசியல் குறிப்புகள் எழுதியனுப்பலாம்.

பிற பின்.

தங்கள்
ரா.கிருஷ்ணமூர்த்தி

• • •

Telegrams: "VIKATAN", Madras
Telephone: 3311
Anandha Vikatan Office
2/140, Broadway, Madras
Dated 25-8-1933

Dear friend,

Herewith I am returning your manuscripts with great regret. We have decided that it will not be proper for us to trouble you for articles hereafter as you are connected prominently with two other Tamil journals.

Yours sincerely,
R.Krishnamurthy

குறிப்பு: கல்கி குறிப்பிடும் இரு தமிழிதழ்கள் 'காந்தி', 'மணிக்கொடி'யாக இருக்கக் கூடும். எழுதக் கேட்டு, பின்னர் போடாமல் திருப்பி அனுப்புவதென்பது வணிக நோக்குச் செயல்பாட்டைக் குறிக்கும் எனினும் நேர்மையான விமர்சகனை வேற்றுப்படுத்தும் உந்துதலாகவும் இருக்கலாம். வாசகர்கள் களைத்தும் போகலாம்!

படிப்பகம்

www.padippakam.com



● தொடர்ந்து தங்கள் இதழ்களை வாசித்து வருவதால் தங்களைப் பற்றிய மதிப்பீடு உங்கள் மீதான மதிப்பை உயர்த்துகிறது. தாங்கள் மனதிலுள்ளவற்றை, சிந்திப்பவற்றை வெளிப்படையாகப் பேசுவதும், எழுதுவதும் பலரை அம்பலப்படுத்திவிடுகிறது- சமீபத்தில் நந்தனை.

**கடிதங்கள்**

தேர் இழுக்க உரிமை கோரும் விஷயம், ச்சீய் குமுதம், கிருஷ்ணசாமியை விமர்சித்தல், ஜான் பாண்டியனைத் தூக்கிப் பிடித்தல், கோவை டீக்கடைகளில் தீண்டாமை போன்றவற்றில் நந்தனின் நிலைப்பாடு சாதீயச் சிந்தனைகளின் வெளிப்பாடாகவே உள்ளது. பார்ப்பானைக் கீழிறக்கிவிட்டுத் தாங்கள் உட்காருவதைத் தவிர வேறென்ன?

மாற்றீடு- உரையாடல் மிகச் சிறப்பாயிருந்தது. பெண்ணியம் பற்றிய விவாதத்தில் orthodox பெண்களின் புரிதல்களும், வெளிப்பாடுகளும் எப்படியிருக்குமென சரியாகவே பதிவு செய்துள்ளீர்கள்.

**கடிதங்கள்**

இறுதியாக, எஸ்.வி.ஆர். - வ.கீதா ஆகியோரின் சமீபத்திய, பெரியார் பற்றிய நூல்கள் பற்றி, ''தங்கள் விமர்சனத் தளத்தை சற்றேறக்குறைய தரிசனத் தளத்திற்கு வெகு நெருக்கமாக நகர்த்திச் சென்றுள்ளனர்''— என்ற தங்களின் மிகச் சரியான ஒற்றை வரி விமர்சனம் ஒரு அதிர்ச்சியைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

**கே.வாசுதேவன், தலித் சேனா, குளித்தலை.**

● சுறுசுறுப்பாக இயங்குகிற ஒரு சிறு நகரம். கிராமத்தின் கருக்கு அழியாமலும், நகரத்தின் சாயம் முழுதும் பூசாமலும் இருக்கிற வட்டத்தின் தலைமை இடம். பேருந்து நிலையத்தின் பக்கவாட்டில் இருக்கிற ஒரு ஒலிப் பேழைக் கடை. அந்தக் கடையில் நடந்த உரையாடல்:

**கடிதங்கள்**

''கிருஷ்ணசாமி பாட்டு கேசட் இருக்கா?''

படிப்பகம்

www.padippakam.com



"புதிய தமிழகம் கிருஷ்ணசாமியா? இல்லே."

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால ஒரு பாட்டு போட்டீங்களே? என்ன அது?"

"அது தேவர் திருமகன் பாட்டு. இடைச்சூரணி முருகேசன் பாடுனது."

"அது மட்டும் போடத் தெரியுதுல்ல. அப்ப எங்க பாட்டை யும் வாங்கி வில்லு."

"இருந்தாத்தானே விக்கிறதுக்கு?"

"விக்கனும்னு நினைச்சா எப்படியாவது வரும். அந்த நினைப்பு இல்லியே? நாங்கள்ளாம் மனுசனாத் தெரியலே. இனிமே அந்தப் பயக பாட்டைப் போடாதே."

"போட்டா...?"

"போட்டா..." தலித் கையை ஓங்குகிறார். கடையில் நிற் கும் பையன் விய்யா விய்யா என்று கத்துகிறான்.

கூட்டம் கூடி, தலித்தை விலக்கிவிடுகிறது.

தேவர்பெருமகன் என்கிறான் கடைப் பையன்: கேசட்டில் அப்படி தலைப்பு இருக்கிறது. சமீப காலமாக மேல் நிலைக்கு வந்துள்ள இந்தச் சொல்லாடலைக் கவனிக்க வேண்டும். இதை எதிர்த்து, முறுக்கி, மேல்வரும் தலித்தின் கலகக் குரலையும் கவ னிக்க வேண்டும்.

அதைத் தொடர்ந்து அங்கே ஒரு கசமுசா ஆகிறது. "எஸ். சிக்களுக்கு இதுக்கு மேலும் இடம் கொடுக்கக்கூடாது. குடுத்தா நம்மல்லாம் பேர் சொல்லிட்டு திரிய வேண்டியதில்லே."

தலித் என்பது நாம் பயன்படுத்துகிறது; அவர்கள் எஸ். சி. என்றுதான் பேசுகிறார்கள்.

எல்லா உயர்சாதிகள் மத்தியிலும், இப்போது ஒரு கருத்து உருவாக்கம் பெற்றிருக்கிறது. 'மறவர்கள் சும்மா செய்யவில்லை. தலித்துகளின் அட்டகாசம் தாங்க முடியாமல்தான் அடித்து நொறுக்குகிறார்கள். இது சரியானதுதான்' என்ற மதிப்பீடு. இனி எஸ்.சி.க்களுக்கு சலுகையே கூடாது என்ற இன்னொரு மதிப்பீடு. எனவே தேவமார்களுடன் ஒன்றிணைய வேண்டும் என்கிறார்கள் சாதிகளின் இடையேயான வேற்றுமைப்பட்ட ஆச்சாரச் சுவர்கள் தடுக்கின்றன. அதே நேரத்தில் எஸ்.சி.க்களுக்கு எதிராக கருத்து ரீதியாகக் கைகோர்த்துக் கொள்கிறார்கள்.

கவிதாசரண் சென்ற இதழில், (அக் - டிச. 98) மாற்றீடு- ஓர் உரையாடலில், 'அராஜகவாதிகளின் அறமதிப்பீடுகள்' என்று குறிப்பிடுகிறீர்களே, அது இதுதான். ஆயிரம் ஆண்டுகள் தீண் டாமையால் அடக்கி வைத்திருந்த, உயர் சாதித் திமிர் இப்படி

படிப்பகம்

www.padippakam.com



யொரு அராஜக மதிப்பீடுகளுக்கு வருகிறதை வெளிப்படையாகக் கண்டேன்.

"ஆர். எஸ். எஸ். அமைப்பும், அதன் தோழமைக் குழுக்களும், ... ... இஸ்லாத்துக்கு எதிரான துவேஷத்தை விதைத்து, இஸ்லாமியர்களை நாடு கடத்தப்பட வேண்டிய அந்நியர்களாகச் சித்தரித்து, அவர்களின் தன்மானத்தின் குரல்வளையைக் கவ்விக் குதறி விட்டு, இன்று கோவை கலவரத்துக்குப் பின் 'இஸ்லாமிய பயங்கரவாதிகளைத் தூக்கிலிடு, இஸ்லாமியத் தீவிரவாதிகளைக் கழுவிலேற்று' என்று எச்சரிக்கை செய்து நியாயம் பேசுகின்றனவே, இதுதான் அராஜகவாதிகளின் அறமதிப்பீடுகள்" என்று நீங்கள் சொல்லியுள்ளது எவ்வளவு சரி!

அது மத வெறியர்களின் அராஜக மதிப்பீடுகள்.

நான் சுட்டுபவை மேல்சாதிக்காரர்களின் அற மதிப்பீடுகள்: உயர்சாதி வெறியர்களின் அற மதிப்பீடுகள்.

தலித்துகளுக்கெதிராக இந்த அராஜவாதிகளின் அறமதிப்பீடுகள்தான் அனைத்து மேல் சாதிக் கொடுமைகளை, மேல் சாதியினரை ஒன்றிணைக்கும் உள் நிலவரமாகும். அப்படியொரு ஆபத்து வருகிறது என்பதை முன் உணர வேண்டும்.

தலித்துகளுக்கு எதிராக மேல் சாதி அமைப்பில் இணைய மறுக்கும் தனுஷ்கோடி ராமசாமியின் 'நூற்றாண்டுகளின் தணல்' நிஜமான குரலாகும். நூற்றாண்டுகளின் தணலை சுத்தமாக ஒன்றுமில்லாமல் அவிக்க, மேல் சாதிச் சங்கங்கள் ஒன்றிணைய வாகு இருக்கிறது. தனுஷ்கோடியின் படைப்புகளில் நாளுக்குநாள் மினுமினுப்பு கூடிவருகிறது: கருத்து, வடிவ ஒழுக்கம் இரண்டிலுமே.

பத்தவச்சிட்டியே பரட்டை, அனு ஆண்ட்டி- இப்படியான வெகுஜன வணிகக் கவர்ச்சியுள்ள உரையாடல்களுக்கு மாற்றாக— அறிவுபூர்வ உரையாடல் வடிவத்தை கைப்படுத்தியிருக்கிறீர்கள். ஒன்றிலிருந்து ஒன்று, அதிலிருந்து மற்றொன்று என அறிவார்ந்த விஷயங்கள் தாவித்தாவி வருகின்றன; மாற்றீடு—ஓர் உரையாடல் சற்றே நீண்டுவிட்டாலும், தன்னை வெளிப்படுத்துவதாக நீங்கள் தொடங்குகிறபோதே, சமூக வெளிப்பாடாகவும் ஆகிவிடுகிறது.

ஜெயமோகன்கள், பக்கவாத்தியக் கச்சேரிகள் பற்றி, நாம் திட்டமிட்டாக வேண்டும் விஷ்ணுபுரம் படைப்புக்குள் எல்லை கட்டிக் கொள்ள வேண்டியதில்லை நமது விமர்சனம். படைப்பின் ஊடாக ஜெயமோகனை வந்தடைய வேண்டும் விமர்சனம். அவரது பல்வேறு அறிக்கைகள் கட்டுரைகளை இணைத்து, மொத்த உருவத்தையும் வெளிப்படுத்துவோமாக.

பா. செயப்பிரகாசம், சென்னை

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பு: நண்பர் அண்மையில் அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்று விட்டார். அதனை ஒரு செய்தியாக எல்லாருக்கும் தெரிவித்திருந்தார். அது ஒரு நல்ல கவிதையாக வெளிப்பட்டிருந்ததால், இக்கடி தங்களுக்கிடையிலேயே நினைவு கூரத் தோன்றியது.

## தொடக்கம்

கிளி என்றால் பேச,
பறவை என்றால் பறக்க,
வெற்றுடம்பின் புழு என்றால்
ஊர்வதும் உண்டாம்;
பேச, பறக்க, ஊர்ந்து செல்லவும்
அனுமதி வேண்டும் அரசு ஊழியனுக்கு.

சிந்தனைச் சுதந்திரம் தொடக்கம்.
இன்று (30-6-99)
நான் ஓய்வு பெறுகிறேன்.

இன்றுதான் நான் பிறந்தேன்;
நேரடியாயும் மறைந்து பிணைத்த
அடிமை விலங்குகள் அற.

இலக்கியப் பெருவெளியில்
கத்தரித்த சிறகுகள் முளைக்கும்
கலைந்த கரு உயிர்க்கும்
இனி உங்களுடன்
என்றென்றும் நான்...

ஒரு எழுத்தாளன்
**பா. செயப்பிரகாசம்**

● அறிவுமதியின் கவிதை பற்றி தாங்கள் தந்துள்ள ஆசிரியர் குறிப்பு மிகவும் திடுக்கிட வைக்கக்கூடிய உண்மை. இது தக்க சமயத்தில் நினைவுபடுத்தப்பட்டது.

வழக்கம் போல அறிவுமதியின் கவிதை 'கவிதை என்கிற அளவில்' நன்கு வெற்றி பெற்றிருக்கிறது. மற்ற எல்லாம் சரிதான். 'சாதிச் சங்கத்திடம் தமிழர்களின் பிணங்களை ஒப்படைக்கி

படிப்பகம்

www.padippakam.com



றோம்' என்ற இடத்தில்தான் இடறுகிறார். தண்ணீர் என்ற திரவப் பொருள் நீர் என்ற திரவ நிலையிலும் ஆவி என்ற வாயு நிலையிலும் அமைதியாகத்தான் இருக்கும். ஆனால் தண்ணீரிலிருந்து ஆவியாகும் கொதிநிலை கட்டத்தில் மிகவும் கொப்பளித்து, சீறிட்டுதான் மாற்றமடையும். அந்த நிலைதான் தற்போது தென்மாவட்டங்களில். இதுவரை அடக்கப்பட்டிருந்த பள்ளர்கள் நீரிலிருந்து ஆவியாக உருமாறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆவியில் தேவர் ஆதிக்க கந்தைத்துணிகள் வெந்தே தீரும். பிரபாகரன் தலைமையில் போரிட்டுதான் ஈழத்தமிழர்கள் எப்படி விடுதலையை மீட்டெடுக்க வேண்டியுள்ளதோ, அதுபோல்தான் இங்கும் கலவரம் செய்து தேவேந்திரர்கள் மீளவேண்டியுள்ளது. இதற்கான சாதி மோதல் தவறென்றால் இதே போன்ற ஈழப்போராட்டமும் தவறுதான். இங்கு எல்லாரும் பாடும் 'பொது சாதிமோதல் பல்லவி'யைத்தான் அறிவுமதியும் பாடியுள்ளாரே தவிர, தன் தனித்தன்மையை அவர் நிருபிக்கவில்லை. இதர பிற்பட்ட வகுப்பு சாதிகளால் வன்னிய சமுதாயம் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதை எதிர்த்து எழும் நியாயமான எதிர்க்குரலையும் இப்படி கொச்சையாகவே அவர் பார்ப்பதாக அண்மையில் தகவல் கிடைத்துள்ளது.

'மாற்றாள்' சிறுகதை மிக அருமை. எல்லா வரிகளும் பாராட்டத்தக்கவையே! 'எங்க மாதிரி ஏழை பாழைங்களோட பேசணும்னா எதுனாச்சும் கொறை சொன்னாத்தான் பேசவருமா சார்.'... 'சீ..சீ... அந்தக் கெட்டப் பழக்கம் ஒங்களுக்கு வேணாம் சார். ஒங்களுக்கு பேள்றதுக்கும் மோள்றதுக்கும் தெரிஞ்சா போதும். ஒடனே ஒரு கொவளை தண்ணி ஊத்த மாட்டீங்களே! கக்கூஸ் கழுவுறவ காணாத நாகரிகமா நீங்க காப்பாத்தறது...' சரியான சாட்டையடி வார்த்தைகள்!

'எந்த வழி நந்தன் வழி' கட்டுரையில் நந்தன் பற்றிய விமர்சனம் சரிதான். ஒரு மதிக்கத் தகுந்த இதழாசிரியான தாங்கள் நமது கருத்துகளுடன் சிறிதளவே வேறுபட்டு நிற்கும் சுபவீ-க்கு எதிராக 'பாமரவாசகன்' என்று தங்களை சொல்லிக்கொள்வது அவரை கிண்டல் செய்வது போல்தான் உள்ளது. இது சொல்லியிருக்கப்படாத ஒன்றுதான். ஆனால் 'அந்தப் பயல்களை குளிச்சிட்டு வரச்சொல்லுங்க. நாங்க டீ தர்றோம்' என்ற டீக்கடைகாரருக்கு எதிராக 'அய்யா டீக்கடைக்காரரே! இந்த அழுக்குப்பேர்வழிகளின் பெண்டாட்டிமார்களை வல்லடியாக அபகரித்துச் சென்று அனுபவிக்கிறீர்களே. அந்தப் பெண்கள் நாறமாட்டார்களா? அவர்களின் மூத்திரத் துடைகள் சந்தனமாய் மணக்குமா?' என்று நந்தன் ஏன் கேட்கவில்லை என்பதும், ஈழப்போரை ஆதரிக்

படிப்பகம்

www.padippakam.com



கும் நந்தன் 'கையில் வெடிகுண்டு கிடைத்துவிட்டது என்பதற்காக கண்டவர்கள் மீதெல்லாம் வீசிவிடுவதுதான் போராட்டமா?' என்று இஸ்லாமியப்போராளிகள் மீது பாய்வதைக்கண்டித்திருப்பதும் மிகச் சரியானவையே. ஆறுமுக நாவலர், பாரதிதாசன், பழ.நெடு மாறன் ஆகியோர் கூறும் சில கருத்துகள் மூலம் அவர்கள் உரு வகிக்கும் தமிழ்த் தேசியம் பார்ப்பனியத்திற்கெதிராக வெள்ளாளக் கருத்தியலை உயர்த்திப்பிடிக்கும் தன்மையது என்பார் அ.மார்க்ஸ். இந்த மாதிரி நந்தன் போக்குகளைப் பார்க்கும்போது நந்தன் உரு வகிக்கும் தமிழ்த் தேசியம் தலித்துகள், முஸ்லீம்கள், வெள்ளாளர்-பார்ப்பனர், மிகவும் பிற்பட்டோர் தவிர்த்த ஏனைய பிரிவினருக் கான தமிழ்த்தேசியமாகவே சுருங்குகிறது. இந்த விஷயம் எல்லா ருக்கும் புரிய ஆரம்பித்துவிட்டது. இதனால் இனி, ஒன்று நந்தன் அடியோடு திருந்தவேண்டும். அல்லது இன்னும் நுட்பமாக முக மூடி போட்டுக் கொண்டு ஏய்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இல் லாவிட்டால் இப்படி பாட்டு வாங்கிக் கட்ட வேண்டிதான் வரும்.

தனுஷ்கோடி ராமசாமியின் 'ஆயிரமாண்டுத்தணல்' சிறு சதையும் அருமை. 'பறையர்களுக்காக 'சப்போர்ட்' பண்ணி பேசும் வட மாவட்டத்து MBCயான எனக்கும் அவரது அனுபவம்தான் அவ் வப்போது கிட்டுகிறது. என்றாலும் நியாயத்தின் பக்கம்தானே நிற்க ஆசையாக இருக்கிறது. என்ன செய்ய?

சாரு நிவேதிதா

ஜெயமோகன் என்ற ஃபாசிஸ்ட் ஓநாயின் தோலை நன்கு உரித் துவிட்டார். ரோஷமுள்ள மனிதனாக இருந்தால் கேரளாப் பக் கம் ஓடிவிடவேண்டும். 'இவரை இனியேனும் ஊதாசீனப்படுத்து வதே இவருக்கு நாம் செய்யக்கூடிய நல்லுதவியாக இருக்கும்' அல்ல! தமிழருக்கு நல்லதாக இருக்கும். இதை நான் முன்பே செய்ய ஆரம்பித்து விட்டேன். கி. ரா., கண்மணி, பழமலய், பிரபஞ்ச னைத் தெரிந்த அளவுக்கு இவரை இன்னும் யாருக்கும் தெரியா ததே ஜெயமோகனை தமிழுலகம் தொடக்கம் முதலே உதாசீனப் படுத்தி வருவதற்கு நல்ல உதாரணம். அவர் 'நூல் கும்பலுக்கு' தான் பேரறிஞர்.

**கோ. ஜெயபாலன்** **கும்பகோணம்**

● எழுத்து என்பதே ஆயுதம்தான். அதைக் கையாளும் முறை யில்தான் வீரர்களாக முடிகிறது

புலைப்பேடி சம்பிரதாயம் கட்டுரை இன்றைய சூழலில் மிகவும் பொருத்தமுடையது.

படிப்பகம்

www.padippakam.com



கவிஞர் அறிவுமதி குறித்த தங்களின் (எந்த வழி நந்தன் வழி) கருத்தில் நான் உடன்படுகிறேன். அதே சமயம் கொழுக்கட்டை சாப்பிட இராமகோபாலன் அழைப்பு விட்டபோது வருகிறேன் என கருணாநிதி பதில் கூற, செல்ல வேண்டாம் என அறிவுமதி நந்தனில் கவிதை எழுதியது அவரைக் குறித்து சந்தேகம் எழுந்தது. கருணாநிதி அரசியல் பிழைப்புவாதி. தலித் மக்களின் எதிரி. தண்டிக்கப்பட வேண்டிய நபர்.

சென்னையில் 1-11-98இல் நடந்த தமிழ்ச்சான்றோர் பேரவையில் தோழர்கள் திருமாவளவன், ஜான்பாண்டியனைப் பேச வைத்தவர்கள் புதுச்சேரி அரியாங்குப்பத்தில் 12-8-98இல் நடைபெற்ற பெரியார் சிலை திறப்பு விழாவில் தலித் தலைவர்கள் பங்கேற்காதவாறு கவனமாகத் தவிர்த்துவிட்டார்கள். இதை நான் கட்டுரையாக்கியுள்ளேன். அரசியலில் எதிரும் புதிருமாக இயங்கியவர்கள் தலித் மக்களின் சமீபத்திய வீச்சான போராட்டங்களை திசை திருப்ப மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் கவலையளிக்கிறது.

க. சுப்பையா — புதுச்சேரி

● இந்த இதழில் உங்களுடைய ‘மாற்றாள்’ என்ற சிறுகதையைப் படித்தேன்: எருமைப் பண்ணைப் பேராசிரியர் அறிவரசு, மாஜி மார்க்ஸியவாதிப் பேராசிரியர், துப்புரவுத் தொழிலாளி ஆதிலட்சுமி ஆகிய கதாபாத்திரங்கள் கச்சிதமாக அமைந்திருக்கின்றன.

“இப்ப நானும் இந்தப் பொண்ணும் ஒரு ஜாதி இல்லையாம்மா?”

“ஒங்களுக்குன்னு ஒரு வேல கெடைக்கும். அப்ப சாதி மாறலாம் சார். கவலைய வுடுங்க” என்றார். பையனுக்கு அது ஆசீர்வாதமாகப்பட்டது.

“திமிருப் பேச்செல்லாம் எங்களுக்குத் தெரியாது. தெரிஞ்சதெல்லாம் இந்தத் தொடப்பக் கட்டதான். தோட்டிச்சின்னா அவ்ளோ எளக்காரம்.”

“மாத்தாள் போட்டுச் சம்பளம் வாங்குற உன்னை வேலையில வச்சிக்கிறதே தப்பு. அதுல வாய்க் கொழுப்பு வேற.”

“அதோ போறாரே, அவருக்கிட்ட சொல்லணும் சார் இதை. நீங்கள்ளாம் ஆம்பளங்க இல்ல? அது என்னா சார், நீங்க என்ன குத்தம் பண்ணாலும் அது நாயமாப் பூடுது. நாங்க என்னதான் நாயத்துக்குக் கட்டுப்பட்டு நடந்தாலும் அது குத்தமாப் பூடுது.

படிப்பகம்

www.padippakam.com



ஒங்களச் சொல்லிக் குத்தமில்ல சார். பேள்றதுக்கு ஒரு சாதி, அதைக் களுவுறதுக்கு ஒரு சாதின்னு பிரிச்சானே ஒரு பேமானி— அவன அடிக்கணும் சார் ஜோட்டாலே, ஆமா.''

ஆதிலட்சுமியை என் மனக்கண் முன்பு கொண்டு வந்து பார்க்கிறேன். கையில் ஒரு செருப்புடன், கண்ணகியின் போஸில் ''எவன்டா அவன்- மனுவாம்- மசுரான்— ஜோட்டால அடிக்கிறேன் வாடா'' என்று கர்ஜனை செய்வது போல் தோன்றுகிறது.

கதையின் ஓட்டம் சீராக இருக்கிறது. உங்களுடைய நையாண்டி நயம் கதையில் ஆங்காங்கே பட்டுச் சரிகையோடு மின்னுகிறது.

கே. பி. துரைசாமி (பெர்னாட்ஷாதாசன்) சென்னை—42

● தனுஷ்கோடி ராமசாமியின் சிறுகதை, 'ஆயிரமாண்டுத்தணல், ஓர் அரிய படைப்பு. இவ்விதழின் சிறப்பு அம்சங்களில் முதலிடம் பெறுகிறது.

'கவிதாசரண்' சிறுகதைத் துறையிலும் ('மாற்றாள்') தமது கைவரிசையைக் காட்டியிருப்பது, மிகவும் வரவேற்கத்தக்கது. அது ஒரு சிறந்த நடைச்சித்திரம்; புதுமைப்பித்தன், விந்தன் மரபை வளர்க்கும் நையாண்டி இலக்கியம் எனலாம்.

பழமலய், கல்யாணராமன் ஆகியோரின் கவிதைகள் நன்று. நாசரின் கவிதைகள் வரவேற்கத்தக்கவை.

'மார்ச்சு8 பெண்கள் நாளாம்' எனும் தலைப்பில் வந்துள்ள ஆசிரியர் குறிப்பு—1, பெண்ணாய் ஒரு புரிதல் எனும் ஒரு குறிப்பு-2 ஆகியவை என் சிந்தனைக்கு மிகவும் வேலை கொடுக்கின்றன.

தி. க. சிவசங்கரன் நெல்லை—6

● மாற்றாள் சிறுகதை ஓர் அற்புத அனுபவம். நல்ல நையாண்டி; உறைக்கும்படியான சூடு. வழக்கமான சிறுகதை வடிவமற்று ஒரு கட்டுரை போன்ற தொடக்கம் சிறுகுறை. இந்த ஆண்டு நான் படித்த (அளவிலான) சிறுகதைகளில் ஒன்று அல்ல... என்னைப் பாதித்த சிறுகதைகளில் ஒன்று மாற்றாள்.

வெற்றிப்பேரொளி திருக்குவளை

படிப்பகம்

www.padippakam.com



● ராஜ்கௌதமனின் 'அறமும் அதிகாரமும்' நூலுக்கு வீ. அரசு எழுதிய மதிப்புரையை (கவிதாசரண், அக்டோபர்–டிசம்பர் 98) படித்தேன். அரிய நூலொன்றுக்கு நல்ல மதிப்புரையாக அமைந்தது மனதுக்கு நிறைவளித்தது.

மதிப்புரை ஏற்படுத்திய மனநிறைவை சஞ்சலப் படுத்துவது போல அமைந்துள்ளன கவிதாசரணின் குறிப்புகள். அவற்றைப் படித்து எரிச்சலடைந்தேன்; அஞ்சினேன். எரிச்சலுக்குக் காரணம் தமிழகத்தின் ஆழமான சிந்தனையாளர்களில் ஒருவராக விளங்கும் கௌதமனின் படைப்புகளில் காணப்படும் பாலியல் தொடர்பான சிக்கலான, செறிவான வாதங்களை கருத்தில் கொள்ளாது, அவரது ஒரே ஒரு வாசகத்தை வைத்துக்கொண்டு, கவிதாசரண் வியாக்கியாணம் வளர்த்துள்ளதுதான். மாதவய்யா பற்றிய மதிப்பீட்டில், புதுமைப்பித்தன் கதைகளை வாசித்துள்ள விதத்தில், பழந்தமிழ் இலக்கியங்களை அவர் விளக்கியுள்ள முறையில், இவை அனைத்திலும், கௌதமனின் அரசியல் தெளிவும், காத்திரமான வாதங்களும், பாலியல் பற்றிய அவருடைய பார்வைக்கு வலு சேர்க்கின்றன. பாலியல் என்பதை தான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள பொருளை துல்லியமாக பகுத்தாய்வு செய்யவல்ல ஒரு அடிப்படையான கருத்தாக்கமாக கௌதமன் கையாண்டுள்ளார். இதையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல், பொருத்தமற்ற விளக்கங்களை கவிதாசரண் வழங்கியுள்ளது விநோதமாகத் தோன்றுகிறது.

நான் அச்சங் கொண்டதற்குக் காரணம், புதுமை, புரட்சி, 'சரியான' அரசியல் பார்வை என்பதன் பெயரால் புதிய அறக் கோட்பாடுகளை குடிமை சமுதாயத்தில் திணிக்கும் பாவனையாக கவிதாசரண் எழுதியுள்ளதுதான். பாலியல் தொடர்பான விஷயங்களைப் பொறுத்தவரை, எல்லாச் சூழ்நிலைகளிலும், எப்போதும் ஒரே மாதிரியாக செயல்படக்கூடிய அரசியல் நோக்கு ஏதுமிருக்க முடியாது. காரணம், பாலியல் அடிப்படையிலான தனிமனித, சமூக உறவுகளை மேலும் சமத்துவமானவையாக, சுதந்திரமானவையாக, நீதியானவையாக மாற்றியமைக்கும் செயல்பாடு என்பது தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒன்று. அச்செயல்பாட்டுக்கு அவ்வப்பொழுது நமது தேவை கருதி, நாம் குறிப்பிட்ட வடிவம் வழங்கலாம், விளக்கமளிக்கலாம். ஆனால் புதிய பாலுறவு பண்பாட்டை அடைய தேவையான இச்செயல்பாட்டை புதிய அரசியல் சூத்திரங்களுக்குக் குறுக்கிவிட முடியாது; குறுக்கிவிடவும் கூடாது. அவ்வாறு நாம் செய்தால், பாலியலின் அரசியலை ஒருவித கெடுபிடியான தார்மீகக் கண்காணிப்புக்கு உட்படுத்துபவராக ஆகிவிடுவோம். இத்தகையதொரு கண்காணிப்பை கவிதாசரண் மேற்கொண்டுள்ளது வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் தருகிறது.

வ. கீதா சென்னை–17

படிப்பகம்

www.padippakam.com



## ஆசிரியர் குறிப்பு:

இதுபோலொரு கடிதம் கவிதாசரணுக்கு அனுப்பப்பட வேண்டுமென ஒரு சிக்குப் பிடித்த வக்கிர மனம், பேசாதவர்களோடெல்லாம் பேசி, கேட்காதவர்களிடமெல்லாம் கேட்டு, நாய் படாத பாடு பட்டதாம். நமக்குத் தாமதமாகத் தெரிய வந்த தகவல்.

என் குறிப்பு கீதாவைப் படுத்தியதுபோலவே, அவரின் இந்தக் கடிதமும் எனக்கு அதிர்ச்சியையும் எரிச்சலையும் ஏற்படுத்தியது. அதிர்ச்சிக்குக் காரணம் கீதாவின் அறிவாளுமைப் பரிமாணங்களைப் புதிய கோணத்தில் பார்க்க நேர்ந்தது. எரிச்சலுக்குக் காரணம் கவிதாசரணுக்குப் பாடம் புகட்டுவதற்காக அவர் தன் புத்திசாலித்தனத்தையெல்லாம் செலவிட்டுப் புதிய சூத்திரங்களைப் புனைந்து சலித்திருப்பது.

'கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு?' என்று சொல்லி, ஒரு சராசரி மனிதனால் நேர்படப் புரிந்து கொள்ளப்படும் ஒரு விஷயம், அதிதீவிர புத்திசாலிகளை என்ன பாடு படுத்தும் என்பதற்கு இக்கடிதம் ஒரு சான்று. கீதாவையும் அவரைச் சேர்ந்த நண்பர்களையும் என் குறிப்பு கண்காணிப்புச் சூத்திரத்தைக் கண்டெடுக்க வைத்திருப்பது அவர்கள் அதிதீவிர புத்திசாலிகள் என்பதற்கான பிரகடனம். வேறென்ன?

எனக்குத் தெரிந்த ஒரு பேராசிரியன். அவன் பேசாத பெண்ணியம், பெரியாரியம் இல்லை. ஏறாத மேடை இல்லை. பங்கு பற்றாத பேரவை இல்லை. ரொம்பப் பேர்போனவன்— 'சினிமாக்காரனாட்டம்.' அவன் தன் பேராசிரியை 'மனைவியை' நாற்சந்தியில் வைத்து, நாலு நண்பர்கள் மத்தியில் ஒரு அற்பக் காரணத்துக்காகவும் மயிரைப் பிடித்திழுத்து கன்னம் பழுக்க அறைவான்; மணக்க மணக்கத் தூசனை பேசுவான். அவன் எனக்குப் பொருட்டல்ல; என் குறிப்பு அவனுக்கல்ல.

தலித்தியப் பார்வையைக் கூர் செய்வதிலும், தலித்தியக் கருத்தியலைக் கட்டமைப்பதிலும் ராஜ்கௌதமன் தவிர்க்க முடியாதவர் என்று மதிப்பிட்டும், மதித்தும்தான் அக்குறிப்பெழுதினேன். எமது உரையாடல் அவர் கருத்தை முதலாக வைத்துத் தொடங்க உதவியதால்தான் அக்குறிப்பை எனது

படிப்பகம்

www.padippakam.com



துணைவியாரின் கடும் எதிர்ப்புக்குப் பிறகும் சேர்த்துக்கொண்டேன். உண்மையில் அக் குறிப்பு ஒரு விமர்சனம் என்பதைவிட ஒரு தீர்மானமான சுட்டலே. அறம் / அதிகாரம் பற்றிய நூலில், அந்த 'ஒரே ஒரு வாசகம்' அறம்/அதிகாரமாகக் கணிக்கப்படக் கூடாதே எனும் அதிர்வலையால் முன்வைக்கப்பட்ட சுட்டல். "தவறுன்னு ஒத்துக்கிற பக்குவம் வந்தவுங்க எல்லாருக்கும் அசட்டையான சந்தர்ப்பங்கள்ல நேர்ந்துவிடுகிற தவறுதான். தலித்திய நோக்கில் எல்லாவற்றையும் நியாயமான மறுவாசிப்புக்கு உட்படுத்தும் ராஜ்கௌதமனுக்கும் இது நேர்கிறது" என்னும் விளக்கத்தோடு பொதுமைப்படுத்தப்பட்ட சுட்டல். (ராஜ்கௌதமன் அச்சுட்டலைப் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொண்டார், அல்லது எடுத்துக் கொண்டார் என்றே தோன்றுகிறது- அவரிடமிருந்து எவ்வித எதிர்வினையும் வரவில்லை என்பதால்.) இப்படியானதொரு நிகழ்வில், "இதையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல் பொருத்தமற்ற விளக்கங்களைக் கவிதாசரண் வழங்கியுள்ளது விநோதமாகத் தோன்றுகிறது," என்று கீதா கூறுவது விநோதமாக மட்டுமல்ல, அபத்தமாகவும் தோன்றுகிறது.

ஒன்றை இவர்கள் புரிந்துகொண்டால் நல்லது: ராஜ்கௌதமனின் செழுமையுறும் தலித்தியப் பார்வையும் கருத்தியலும் இவர்களுக்குச் சுகமான வாசிப்பு அனுபவமும், இவர்களது ஆய்வறிவை வெளிச்சப்படுத்திக் கொள்ளும் திறந்த சாளரமும் மட்டுமே. ஆனால் இன்றைய எனக்கு அஃதென் இருத்தலை மூர்க்கமாய் அர்த்தப்படுத்தும் இயக்கத்தின் ஒன்றிப்பு. இது இவர்களின் ஆய்வறிவுக்கு எட்டாமல் போனதொன்றும் ஆச்சரியமில்லை. காரணம், பேர்போனவர்களின் மேற்கோள்களுக்கு இணைப்புரை வழங்கும் தலையணைப் பணிகளிடையே கவிதாசரண் அவர்களுக்குக் கழித்தல் கணக்கு. எல்லாருக்கும் இருத்தலின் சலனமாகத்தான் சிந்தனை பிறக்கும். சிலருக்குப் பிழைத்தலின் சலனமாகவே நிலைத்துப் போவதுமுண்டு. இதுபற்றி அவசியம் நேரின் பின்னர் பேசலாம்.

தர்க்கத்துக்கல்லாமல் ஒரு பேச்சுக்காகவே இதை யோசிக்கலாம்: என்னிடம் அரசு இல்லை; அதிகாரம் இல்லை; ஒரு பதவிகூட இல்லை. தகிக்கும் வெய்யிலில் வெடித்துச் சிதறும் காட்டுக் கடுகுகளைப் போலான சமூகத்தின் பொதுப்புத்தியை நம்பி இவ்விஷயத்தில் தார்மீகக் கண்காணிப்புப் பார்வையை

படிப்பகம்

www.padippakam.com



முன்வைத்தால், பெண்ணும் தலித்தும் புறத்தே நிறுத்தப்படா மைக்காக இந்தக் குடிமைச் சமுதாயம் புழுத்துவிடுமா என்ன? 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' கால வகையினால் என்பது காலத்தால் உலர்ந்துதிரும் கோட்பாடுகளால் அன்றி உதிரிச் செயல்களால் அல்ல என்பதுதான் இன்றுவரையான சமுதாய வரலாறு. பின்நவீனத்துவக் கோட்பாட்டை நடைமுறை சாத்தியமாக வளர்த்தெடுப்பதென்பது ஒரு பொதுமைக்குள் பன்மைகளை அங்கீகரிப்பதும், சம உரிமைகளினூடாக மதிப்பதுமாகவே இருக்க முடியும். அதுதான் மனித மதிப்புகளோடான குடிமைச் சமுதாயச் சாத்தியப்பாடாகும்.

ஒரு சிந்தனையாளனையும் அவன் சிந்தனையையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமெனில் அவனை விமர்சனங்களுக்கப்பாற்பட்ட புனிதனாக்கிவிட்டால் போதும். கடைசியாகப் பெரியார் வரை அப்படித்தான் நடந்துவருகிறது. இந்தக் 'கடைசி'யில் கீதாவுக்கும் பங்கிருக்கும். ராஜ்கௌதமனையும் அந்த வகையில் சேர்த்து, அறிந்தோ அறியாமலோ தலித்தியர்களையும் தலித்திய வெடிப்புகளையும் நுரையை வழித்தெறிவது போல் வழித்தெறிந்து ஓரங்கட்டிவிடலாம் எனில் அது ஒரு சூழ்ச்சித் திறன் மிக்க மௌன அரசியலின் அங்கமாகவே இருக்கக் கூடும். நான் அந்த அரசியலுக்கு வெளியே எகிறிக் குதித்துவிடுவதே எனக்கான இயக்கம்.

இங்கே, நுண்ணுணர் வாசக தளத்தின் அடியோட்டப் புரிதலாக இன்னொன்றும் கவனப்பட வேண்டும். அடிமண் மேலாகப் புரண்டு வந்து கருத்தியல் மாற்றம் கோரும் புதிய தத்துவச் சூழலில் நல்ல நோட்டுகளைச் செலவிட்டுத்தான் கள்ள நோட்டுகளைச் செலாவணியாக்க முடியும் போல, பரம்பரை உரிமை கோரும் புத்திஜீவிகளில் சிலர் சில மெய்களைத் தூவி மெய்ப்போலிகளை நேர்த்தி செய்து கலந்து விதைப்பதை எவ்வளவு சாதுரியமாய்ச் செய்தாலும் இனங்காண வேண்டும்.

எனக்கு நிகழ்ந்த ஒரு முரண் சுவை அம்சம் இது: பெண்களுக்கு மரியாதை கோரி நான் எழுதிய இரு சந்தர்ப்பங்களில் பெண்நிலைவாதிகளாயும் அறியப்படும் இரு பெண்களே அதை விமர்சித்துள்ளனர். இங்கே கீதா. சில காலத்துக்கு முன் லதா ராமகிருஷ்ணன். அப்போது அவர் எழுதிய கடிதத்தில் எழுப்பியுள்ள கேள்விகளுக்காகவும் அவற்றால் எழும்

படிப்பகம்

www.padippakam.com



எதிர்க் கேள்விகளுக்காகவும் அக்கடிதத்தை எவ்வித விமர்சன மும் இன்றி இங்கே வெளியிடுகிறோம். இரு கடிதங்களிலும் பேசப்படும் நலன்கள்தான் நமக்கு முக்கியம்.

புரிதலுக்காக, அக்கடிதம் எழுதப்பட்ட சூழலைச் சொல்லவேண் டும். ரிஷியின் (லதா ராமகிருஷ்ணன்) சில கவிதைகளை 'முன்றில்' மா. அரங்கநாதன் கொடுத்துக் கவிதாசரணில் வெளியிடுமாறும், சிற்றிதழ்களில் வெளியிடுவதற்காகக் கொடுக் கப்பட்ட கவிதைகள் என்றும், கவிஞரிடம் தான் சொல்லிக் கொள்வதாகவும், வெளியிடுவதற்கு நான் ஒன்றும் கடிதம் எழு திக் கேட்கவேண்டியதில்லை என்றும் சொன்னார். கவிதாசர ணில் ஒரு கவிதை வெளியாயிற்று. அதில் ஒரு அச்சுப் பிழை யும் இடைவெளிப் பிழையும் நேர்ந்தன. அதுபற்றி அவர் எழு திய கடிதத்தில் கவிதை வெளியிட்டமைக்கு நன்றி தெரிவித்து, இருப்பினும் வெளியிடும் முன் தன்னிடம் கேட்டிருக்க வேண் டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். (கவிதையை ஏன் கொடுத் தீர்கள் என்று மா. அரங்கநாதனிடம் அவர் கேட்டதாகத் தெரி யவில்லை.) மேலும், முன்பொரு கவிதாசரண் இதழில் நான் எழுதியிருந்த 'அடி பெண்ணே' என்னும் கட்டுரை பற்றியும் குறிப்பிட்டிருந்தார். கட்டுரையின் முக்கிய கருத்தோடு உடன் படுவதாகவே தெரிவித்திருந்தார். (அக்கட்டுரையை மகா மோச மானது என்று ஒற்றைச் சொல்லில் மனுஷ்யபுத்திரன் சாடி யிருந்தார். எந்த வகையில் என்று அவரும் விளக்கவில்லை; நானும் கேட்கவில்லை. அதற்குள் அவர் 'காலச்சுவடு'வுக்குள் அடக்கமாகி விட்டார்.) கவிஞரின் கடிதத்திற்குப் பதில் எழு தினேன். ''பால் மணம் மாறாத பாலகன்கூடத் தன் தாயை யும் தமக்கையையும் 'வாடி, போடி' என்றழைக்கும் சூழலில் பிறந்த உங்களுக்குப் பெண்ணுரிமை தேவை பற்றி அதிகம் தெரிந்திருக்க வேண்டாமா?'' என்றொரு வாக்கியம். ''கவிதை எனக்குப் பிடித்திருந்தது. வெளியிட்டேன். முன் அனுமதி பெறுவதை ஒரு நியதியாக வலியுறுத்துவீர்கள் என்று தெரிந் திருப்பின் நேரடியாகப் பெற முயல்வேனே தவிர பிறர் கொடுத் ததை தொட்டே இருக்கமாட்டேன்' என்றும் எழுதிய நினைவு. அக்கடிதத்திற்கான எதிர்வினைதான் இது. இனி கடிதம்:

## லதா ராமகிருஷ்ணன் கடிதம்:

வணக்கம். தங்கள் கடிதம் கிடைத்தது. ஐயர் வீட்டில் 'வாடி', 'போடி' என்று கூப்பிடுவது பெண்ணை அடிமையாக நடத்துவது

படிப்பகம்

www.padippakam.com



என்கிறீர்கள். ஆனால், நீங்கள் பெண்ணினத்தையே 'அடி பெண்ணே' என்று விளித்து ஒருதலைப்பட்சமாக புத்தி புகட்டுகிறீர்கள். இப்படி விளித்தலில் உங்கள் அன்பும், அக்கறையும், அனுசரணையும் வெளிப்படுகிறதென்றால் பிராமணர்கள் இல்லத்தில் வாடி, போடி என்று விளிப்பது மட்டும் எப்படி பெண்ணடிமைத்தனம் பேணலாகி விடும்? பிராமணர்கள் வீட்டில் ஆணாதிக்க அணுகுமுறைகள் இல்லையென்று சொல்ல வரவில்லை. அதற்காய் வாடி, போடி என்று கூப்பிடுவதை பெண்ணடிமைத்தனம் பேணலாய் பேசுவது cver simplification of facts. அப்படியென்றால் பெண்ணை வாங்கம்மா, போங்கம்மா என்று கூப்பிடும் வீடுகளிலெல்லாம் பெண்ணுக்கு சுதந்திரமும், சமத்துவமும் கிடைக்கிறதா? 'பிராமண குடும்பத்தில் பிறந்த பெண் நன்றாகவே விளங்கிக் கொள்ள வேண்டாமா?' என்று கேட்டிருக்கிறீர்கள். பிராமணர் அல்லாதவருக்கு நிறைய நேரங்களில் தங்களுடைய ஆதிக்கவுணர்வுகளுக்கெல்லாம் ஆயிரங்கால பார்ப்பனியத்தை காரணங்காட்டி வெகு சௌகரியமாக ஒதுங்கிவிட முடிகிறது. ஆனால், உண்மையில் மனிதனை மனிதன் சுரண்டுவது, அடிமை கொள்வது எல்லோருக்கும் ஏதோ ஒரு வழியில் ஏற்புடையதாக இருக்கிறது. கம்யூனிஸ நாடுகளில் கூட ALL ARE EQUAL; SOME ARE MORE EQUAL என்ற நோக்கில் நிகழ்ச்சிகள் நடந்த கதைகள் நமக்குத் தெரியும். பொருள் பிரதான, ஆணாதிக்க சூழலில் சிக்கிக் கிடக்கும் இன்றைய சமுதாய அமைப்பை மாற்றுவது பரந்துபட்ட அளவிலான பார்ப்பனீய எதிர்ப்பாக இருக்க வேண்டும். வர்ணாசிரமத்தை பார்ப்பனீயமும் வேதங்களும்தான் பரப்பின எனில், வெறும் கடவுள் பயத்தாலும் பார்ப்பன ஆதிக்கத்தால் மட்டும்தானா அவை காலங்காலமாகக் கோலோச்சி வருகின்றன? ஆதிக்க சாதிகள் பலவற்றிற்கு எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்களை தங்கள் சுயலாபத்திற்காயும், மேலாண்மைக்காகவும் சுரண்டுவது, அடிமை கொள்வது, அதே சமயம் தங்களை அந்தக் குற்றத்திலிருந்து வெகு சுலபமாகத் தப்ப வைக்க சாதிக் கொடுமைக்கெல்லாம் பார்ப்பனீய வர்ணாசிரமத்தைப் பழி கூறுவது சௌகரியமாக இருந்து வந்திருக்கிறது; இருந்து வருகிறது. தலித்களின் விடுதலையென்பது பார்ப்பனர்களிடமிருந்தும் பார்ப்பனரல்லாத பிற ஆதிக்க சக்திகளிடமிருந்தும் பெறப்பட வேண்டியது. இதுதான் உண்மை. இதை விட்டு இன்றைய சகல ஏற்றத்தாழ்வுகள், சுரண்டல்களுக்கும் 'பார்ப்பன குலம்'தான் காரணம் என்பது போல் பேசுவதும், எழுதுவதுங்கூட நிஜமான விடுதலைப் போராட்டத்திலிருந்து மக்களை திசைதிருப்பும் முயற்சிதான். பார்ப்பனீய ஆதிக்கம் என்பது பல சமயங்களில் பார்ப்பன ஆதிக்கம் என்று பேசப்பட்டு, எழுதப்பட்டு வருகிறது. அறியாமையால் அல்லது வேண்டுமென்றே 'பார்ப்பனீயம்' என்ற

படிப்பகம்

www.padippakam.com



வார்த்தைகூட பிற ஆதிக்க சக்திகளை விட்டு விட்டு பார்ப்பன குலத்தையே பிரதானமாகச் சுட்டுவதாக அமைந்துள்ளது. சாதி பேதங்கள், உயர்வுதாழ்வுகளுக்குப் பார்ப்பனகுலம் ஆதி காரண மாக இருக்கலாம். ஆனால் இன்றுவரை இந்த பேதங்களும், உயர்வு தாழ்வுகளும் நிலைத்திருப்பதற்கு பார்ப்பன குலமும், வேதங்க ளும் மட்டுமா காரணம்? இப்படியெல்லாம் ஆய்வுகள் பாரபட்ச மற்ற பார்வையுடன் மேற்கொள்ளப்படுவது, அதற்கான வாய்ப்பு இங்கு வெகு அரிதாகவே இருக்கிறது. ஏதோ குருக்கள் தொழில் பார்ப்பவனுக்கு சமூக அந்தஸ்தும், பொருளாதார வசதியும் ஏக மாக இருப்பது போல் ‘பார்ப்பனரல்லாத பிறருக்கு’ கோயிலில் பூசை செய்யும் உரிமை கொடு என்று கேட்பதுகூட, தாழ்த்தப் பட்டவனை நிஜமான போராட்டத்திலிருந்து திசைதிருப்பும் முயற் சிதான். பொருள் வசதியும், சமூக அந்தஸ்தும், கல்வித் தகுதி யும் கூடிய பிராமணனோ தாழ்த்தப்பட்ட குலத்தவனோ கோயில் குருக்கள் தொழிலுக்கு வர சம்மதிப்பானா? சில நாட்களுக்கு முன் ‘இட ஒதுக்கீடு’ குறித்து தினமணியில் வெளியான நடுப்பக் கக் கட்டுரையொன்றில் ‘கருணாநிதி வீட்டில் பெண்ணெடுக்க எந்த அய்யங்கார் குடும்பமேனும் முன் வருமா?’ என்பதாக வினா எழுப்பியிருந்தார். பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு கூடாது என்பது அவர் வாதம். இதையே வேறு விதமாகவும் ஏன் மாற்றிக் கேட்கலாகாது? நான் கேட்கிறேன்— ஒரு ஏழை அய்யங் கார் வீட்டில் பெண்ணெடுக்க கருணாநிதி குடும்பம் முன்வருமா? தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் தன் மகன் முதலியார் சாதிப் பெண்ணை மணமுடித்தான் என்பதற்காய் அவர்களை வீட் டில் சேர்க்கவில்லை. இப்படி இங்கே ஆதிக்கவுணர்வு பலவிதங்க ளில், நிலைகளில் வெளிப்படுகிறது. இன்னொரு எழுத்தாளர் எழு தியிருந்தார்: ‘இன்னும் இருநூறு முன்னூறு ஆண்டுகளுக்கு பிரா மணக் குழந்தைகளைப் பள்ளிக்குள் சேர்க்கவே கூடாது.’ இது பிராமண துவேஷமில்லையா? அந்த துவேஷம் அறிவை மறைத்த தில் தனி மனித உரிமைகள் பற்றி, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எந்த பிராமணர்களோ செய்த பாவத்திற்கு இப்பொழுதுள்ள ஏழை பிராமணக் குழந்தைகள் என்ன செய்யும்? என்பது பற்றி யோசிக்கக்கூட அவர் மனம் ஒப்பவில்லை. இப்படித்தான் பார்ப் பனீய எதிர்ப்பு என்ற பெரிய விஷயத்தை பிராமண துவேஷமாக பிற ஆதிக்க சக்திகள் சுய ஆதாயத்திற்காய் குறுக்கிவிட்டன. இந் தப் போக்கு இன்று இலக்கியத்துறையிலும் மிகப் பரவலாகக் காணப் படுகிறது. யார் எதைச் சொன்னாலும் சொன்னது என்ன என் பதை விட சொன்னவர் பிராமணரா, பிராமணரல்லாதவரா என்று பார்த்து அந்த அடிப்படையில் சொல்லப்பட்ட விஷயத்தின் மீது திறனாய்வு செய்யப்படுவதே அதிகமாக நடைபெறுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



'தாழ்த்தப்பட்டவர்களிலும் தாழ்த்தப்பட்டவள்பெண். எனவே அவளுக்கு கல்வி, வேலை வாய்ப்புக்களிலெல்லாம் இட ஒதுக்கீடு கட்டாயம் வேண்டும்,' என்று சமீபத்தில் தில்லியில் நடைபெற்ற 'அகில இந்திய முற்போக்குப் பெண்கள்' மாநாட்டில் பல பெண்கள் கருத்து தெரிவித்தார்கள். அதுதான் உண்மையும்கூட. ஆனால் நீங்களோ வாடி போடி என்று கூப்பிடுவதைக் காரணம் காட்டி பிராமணர் வீட்டில்தான் ஊரில் நிகழ்வதைவிட அதிகமாக பெண்ணடிமைத்தனம் விளைகிறது என்றிருக்கிறீர்கள். வாங்கம்மா போங்கம்மா என்று கூப்பிடும் வீடுகளில், சாதிகளில் பெண்கள் சமமாக நடத்தப்படுகிறார்களா? சுதந்திரமாக இருக்கிறார்களா? ஊரில் நிகழ்வதைவிட பிராமணர் வீட்டில்தான் பெண்ணடிமைத்தனம் விளைகிறது என்ற உங்கள் ஒப்பீட்டு முடிவுக்கு ஆதாரங்கள் என்னென்ன? புள்ளி விவரங்கள் என்னென்ன? உங்கள் கூற்றை உண்மையென்றே வைத்துக் கொண்டால், சாதிகளின் அடிப்படையால் அமைந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையால் பிராமணப் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறினால் ஏற்றுக் கொள்வீர்களா? 'நாங்கள் பிறந்த மண்ணில் அந்நியர்களாக நடத்தப்படும், உணரும் அவலநிலை கொடுமையானது. தாழ்த்தப்பட்டவர்களைவிட எங்கள் நிலை கேவலமானது' என்று முன் குறிப்பிட்ட பெண்கள் மாநாட்டில் மனம் குமுறிப் பேசினார் ஒரு முஸ்லிம் பெண்மணி அப்படித்தான் இன்றைய பிராமணர்கள் அவர்கள் முன்னோர்கள் செய்த தவறுக்காய், ஆதிக்கவுணர்வோ, அதிகாரமோ இல்லாத போதும் அந்நியர்களாய் நடத்தப்பட்டு வருகிறார்கள். இப்படி பிராமணர்களை ஒட்டுமொத்தமாய் அதிகார வர்க்கத்தவர்களாய் சுட்டுவதும், பழிப்பதும் சிலருடைய சுய ஆதாயத்திற்கு மிகுந்த பாதுகாப்பளிக்கிறது. பிராமணர்களிடையே அதிகாரவுணர்வு இல்லையென்று நான் வாதிடவில்லை. ஆனால் அதிகாரவுணர்வு எங்கு இருந்தாலும் அதைச் சாட வேண்டியதைவிட்டு எல்லா அதிகாரவுணர்வுகளுக்கும், அத்துமீறலுக்கும் பார்ப்பன குலத்தவரே காரணம் என்பதாய் பார்ப்பதும், பேசுவதும் பிரச்சினையை திசை திருப்பிவிடும் செயலே

எந்த ஒரு எழுத்துக்கும் எழுதுவோன் பிரதி, வாசிப்போன் பிரதி என்று இரண்டு பிரதிகள் உண்டு. 'அறிவுஜீவி' என்று என்னைக் குறிப்பிட்டு எழுதிய வாசகத்தில் எனக்கு இன்றும் ஒரு உள்ளடக்கிய நையாண்டி தெரியத்தான் செய்கிறது. நையாண்டியாக எழுதினீர்களா இல்லையா என்பதற்கு உங்கள் மனம்தான் சாட்சி. எந்தக் காரணத்திற்காக ஒரு எழுத்தாளனின் படைப்பை பிரசுரித்தாலும் அதுபற்றி அவனிடம் தெரிவிப்பதும், அவன் முன் அனுமதியை பெறுவதும் அவனுக்குச் செய்யும் குறைந்தபட்ச மரியாதை. அதை

படிப்பகம்

www.padippakam.com



'நியதி' என்று பேசி 'அப்படிக் கோருவது ஒரு நியதியாக என்னைக் கட்டுப்படுத்துமானால் அதை நான் தொட்டே இருக்கமாட்டேன்,' என்று நீங்கள் பேசுவது பத்திரிகை நடத்துபவர் என்ற நிலையில் உங்களை நீங்கள் ஒரு அதிகார பீடத்தில் நிறுத்திக் கொண்டிருப்பதைத்தான் காட்டுகிறது. எல்லோரும் எல்லோரிடத்திலும் அன்பு காட்டுவதெல்லாம் முடியாத காரியம். சகமனிதநேயம் என்ற பெயரில் அப்படியெல்லாம் நமக்குள் நிர்பந்தங்களை வளர்த்துக்கொண்டு திணறுகிறோம். அன்பு என்ற பெயரில், சகமனித நேயம் என்ற பெயரில் பிறனை ஆதிக்கம் செய்யப் பார்க்கிறோம். உங்களால் அன்பு காட்டப்படவும் சிறப்பிக்கப்படவுமாக நான் இல்லையென்றால், என்னிடம் எதுவுமேயில்லை, என்ற உங்கள் பார்வையும் உள்ளடக்கிய அதிகாரவுணர்வுதான். சகமனித நேயம், சம்பிரதாய தூக்கல் என்றெல்லாம் abstract ஆக, subjective ஆக வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள். பத்திரிகைகள் ஒரு சிலவற்றைத் தவிர பெருவாரியானவை எழுத்தாளர்களை கிள்ளுக்கீரைகளாகத்தான் நடத்தி வருகின்றன என்பது என் பத்துப் பதினைந்து வருட எழுத்துலக அனுபவத்தில் கண்ட உண்மை. இதிலிருந்து நீங்கள் மாறுபட்டவர் என்பதை நான் தெரிந்துகொள்வது எவ்விதம்? உங்களுடைய சில சம்பிரதாய செயல்பாடுகள் வழிதான். இடமின்மையால் கடிதத்தின் தலைப்பில் பின்குறிப்பு என்று போட்டு நான் எழுதியிருப்பதே (என்ன எழுதினேன் என்று இப்போது நினைவில்லை) உங்களுக்கு உறுத்துகிறது. ஆனால் நீங்களாக என் கவிதையை வெளியிட்டு விட்டது எனக்கு உறுத்தக்கூடாது. அப்படி உறுத்தினால் என்னை நடைமுறை நானாகவும், உள்ளுறை நானாகவும் கூறு பிரித்துப் போடுவீர்கள். நான் 'புத்திசாலிப் பெண்மணி இல்லை' என்று நீங்கள் சொன்னாலும் சரி— 'கவிதைகளில் காண்பது போலி நீ; கடிதத்தில் கண்டது தான் நிஜமான நீ' என்று பழித்தாலும் சரி— நான் நானாகத்தான் வெளிப்பட முடியும். அப்படி உங்கள் அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாமல், அங்கீகாரத்தை எதிர்பார்க்காமல் நான் நானாக வெளிப்படுவதையே விரும்புகிறேன்.

காந்திஜியின் கேள்வியில் எனக்கு இதுதான் புரிகிறது. சனாதன தர்மத்துக்கு அவரும் ஒரு victim. அவர் பிராமணராயிருந்து ராஜாஜி வேறு சாதியாக இருந்து அப்படி ஒரு கேள்வியை காந்திஜி கேட்டிருந்தால் அவரை 'சனாதனி' என்று பழிப்பதில் அர்த்தமிருக்கிறது. 'வேதத்தில் எங்கேயும் இது பாவம் என்று சொல்லப்படவில்லை,' என்று நம்மூர் பிராமணர் ஒருவர் கூறியதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்களே— அது உண்மையா, பொய்யா என்ற ரீதியிலான ஆய்வு ஏதேனும் இதுவரை மேற்கொள்ளப்பட்

படிப்பகம்

www.padippakam.com



டிருக்கிறதா? நான் வேதங்கள் படித்ததில்லை. எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனின் நூல் ஒன்றிலிருந்துதான் சுலோகங்கள், வேதசாஸ்திரங்கள் பெண்ணை எந்த அளவுக்கு இரண்டாந்தரப் பிரஜையாக போதிக்கின்றன என்பது புரிய வந்தது. அவ்வக்கா லத்தின் பார்வைகளைத் தாண்டிப் போக ஒரு சிலரால்தான் முடியும். வள்ளுவர்கூட பெண்ணைப் பற்றிய நிறைய பிற்போக்குக் கருத்துகளை கூறியிருக்கிறார். வர்ணாஸ்சிரமத்தால்தான், பார்ப்பனியத்தால்தான் பெண்ணடிமைத்தனம் பிறந்து வளர்ந்தது என்ற பார்வை சரியல்ல. எல்லா மதங்களுமே பெண்ணைப் பற்றிய பிற்போக்குக் கருத்துக்களைத்தான் முன்வைக்கின்றன. முன் குறிப்பிட்ட 'அகில இந்திய முற்போக்குப் பெண்கள் கருத்தரங்கில்' பேசிய முஸ்லிம் பெண்மணி ஒருவர் 'இஸ்லாம் மதத்தில் பெண்களுக்கு நிறைய சுதந்திரமும் சமத்துவமும் வழங்கப்பட்டிருக்கிறது. அர்த்தங்களைத் தந்தவர்கள் சரியாகத் தரவில்லை. அறியாமையாலோ, ஆணாதிக்கப் பராமரிப்பிற்காகவோ சிலவற்றைமட்டும் மதக் கோட்பாடுகளாக முன்வைத்து விட்டார்கள்' என்பதாகக் குறிப்பிட்டார். இந்தப் பார்வை சரியா, இது வேதங்களுக்கும் பொருந்துமோ தெரியவில்லை. ஆனால் இன்றைய சூழலில் எம்மதமும் பெண்ணை பாரபட்சமாகவே பார்ப்பதாகவே இயங்கி வருகின்றன: கடவுள் வழிபாடுகள், சடங்கு சாத்திர சம்பிரதாயங்கள்– எல்லாமும். இதில் தமிழ்க்கடவுள் வழிபாடு பெண்ணை உயர்த்திப் போற்றியது என்பது போன்ற வாதங்களெல்லாம் வைக்கப்படுவது உகந்ததல்ல.. மேல் மருவத்தூரில் பெண்களுக்கு பூஜை செய்யும் அதிகாரம் அளிக்கப் படுகிறது என்றால், அதை பெண் சமத்துவம் பேணல் என்று சொல்லிவிட முடியுமா? இன்றைய பொருள்பிரதான, ஆணாதிக்க, தந்தைவழிச் சமுதாய அமைப்பைத் தக்க முறையில் மாற்றியமைக்க பிராமணர் எதிர்ப்பாகச் சுருங்கிப் போகும் பார்ப்பனிய எதிர்ப்பு மட்டும் போதாது. ஆனால் இங்கே பல செயல் வீரர்களுக்கு அது மட்டுமே போதுமானதாகிவிடும் அவலம் தொடர்கிறது. அதுவும் தேவைப்பட்டால் ராமனையும் கண்ணனையும் பார்ப்பனக் கடவுளர்களாகச் சாடுவதும், பிரிதொரு சமயத்தில் ராமன் ஷத்திரியன், கண்ணன் யாதவன்– இருவரும் பிராமணர் களல்லர் என்று உரிமை கொண்டாடுவதுமான சுயலாபப் போக்கே இங்கே அதிகமாகச் செயல்பட்டு வருகிறது.

நிறைய எழுதலாம். என்னளவில் எல்லா விஷயங்களையும் கடிவாளப் பார்வையாக ஆகிவிடாமல் திறந்த மனதோடு சிந்தித்த வண்ணம்தான் இருக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
**லதா ராமகிருஷ்ணன்**

படிப்பகம்

www.padippakam.com



● 'கவிதாசரண்'- மாற்றீடு பற்றிய இதழுக்குப் பின் வெளிவந்ததா என்பது தெரியவில்லை. வெளிவந்திருப்பின் ஏன் எனக்கு அனுப்பவில்லை? வேறேதும் பிரச்சினையா? தங்களது உடல்நிலை குறித்து ஓர்மையிருந்த போதும் அப்படியேதும் இருக்கக் கூடாது என்பதே என் போன்ற நண்பர்களின் அவா. உங்களது இயக்கம் தொடர வேண்டும் எந்த இடைவெளியுமின்றி! 'கவிதாசரண்' போன்ற இதழ்களின் இத்தகைய தாமதத்தை மேட்டிமை இலக்கியவாதிகளும் நவீன பார்ப்பனீயவாதிகளும் வெகுவாகவே தங்களுக்குச் சாதகமாகவே பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பது உங்களுக்கும் தெரிந்திருக்கும். அதற்காகவேனும் நாம் செயல்பட்டுக்கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது– நீங்களும் உங்களைப் போன்றவர்களும்– உங்களுக்குப் பின் நாங்களும்! இதழை விரைவில் எதிர்பார்க்கிறேன். நமது உறுமிகளின் இழுவைச் சத்தம் காது கிழிக்க வேண்டும் அவர்களுக்கு!

அன்புச்செல்வன் திருமங்கலம்–625 706

✦ இதே கருத்தைத் தெரிவித்துள்ள மற்றும் சில நண்பர்களுக்கும் நன்றி. உடல்நலக் குறைவையடுத்து இதழ் அச்சாக்கம் பற்றிப் புதிது புதிதாய் யோசனைகள் பரிசீலிக்கப்பட்டன. முடிவில் இப்போதிருக்கும் ஏற்பாடே தொடர்ந்தும், தொய்வின்றியும் சுதந்திரமாய்ச் செயல்படத் தோதாகும் எனும் தீர்மானத்திற்கு வந்தாயிற்று. ஆகவே, இதழியக்கம் தன் அடுத்த சுற்றைப் புதுப்பாய்ச்சலோடு இங்கே முன்னெடுக்கிறது. கவிதாசரண் தன் செயல்பாட்டை உறுதியாகவும் தெளிவாகவும் செறிவாகவும் தற்காத்துக்கொள்கிறது. —ஆ-ர்.

● 'கவிதாசரணை' மிகுந்த மகிழ்ச்சியுடன் ஒரே மூச்சில் முழுவதுமாகப் படித்து முடித்தேன். திகைப்பு, மகிழ்ச்சி, பெருமிதம், அறிவுத் தெளிவு எனப் பல உணர்வுகள்.

'பெண்ணாய் ஒரு புரிதல்' பகுதியைத் திகைப்புடன் இரண்டாவது தடவையாக வாசிக்க ஆரம்பித்திருக்கிறேன்... அதில் கண் கலங்க வைக்கும் செய்தி எதுவும் இல்லையென்றாலும், ஏனோ காரணம் தெரியாமல் கண் கலங்குகிறது...

தமிழில் இதுவரை வேறு யாரும் உங்களைப்போல புதிய புதிய வியப்பூட்டும் பதச் சேர்க்கைகளில், நெஞ்சில் அடிப்பதுபோல் எழுதுவதை நான் பார்த்ததில்லை.

படிப்பகம்

www.padippakam.com



கடைசி அட்டை விளம்பரம் கண்டு உடனே நண்பர் சாரு வின் 00 நாவல் வாங்கிப் படித்து முடித்தேன்... என்னவென்று சொல்ல... நீங்கள் படித்தீர்களா?

முகமூடிகளைக் கிழித்தெறியும் தமிழின் முதல் முழுமுதல் நாவல் என்று எனக்குத் தோன்றுகிறது... என்றாலும் யாருக் காவது படிக்கக் கொடுப்பதற்குப் பயமாக இருக்கிறது. குறிப்பாக நான் வாசித்ததை எல்லாம் வாங்கிப் படிக்கும் ஒரு பெண்ணுக்கு.

00 பற்றிய சரியான விமர்சனம் வரவேண்டும். செய்வீர்களா விரிவாக?

**புவியரசு** **சென்னை-17**

● கவிதாசரண் அக்21- டிச31 இதழ் கண்டேன். ஜெயமோகன் பரிந்துரை மற்றும் சாருவின் கட்டுரை இரண்டும் சகிக்க முடியாத பொய்கள். ஜெயமோகனிடமே நேரில் விசாரித்த போது "தலித்" இதழ் அச்சாக்கம் பற்றி தான் எதுவும் கூறவில்லை என்றார். உலக மகாகாவியமான Zero Degree ஆபாசமாக இருப்பதால் அச் சகம் கிடைக்கவில்லை என சாருநிவேதிதா புலம்பிய போது 'சரோஜாதேவி புத்தகங்கள் அச்சிடும் அச்சுக்கூடங்களை அணுக லாமே' என்றார். சுந்தர ராமசாமியின் ஜே. ஜே. சில குறிப்புக ளைவிட சரோஜாதேவி புத்தகங்கள் மேல் என்று சொன்ன சாரு வுக்கு இது ஏன் எரிச்சலை ஏற்படுத்துகிறது? தலித் இதழ் பற்றி கூறாத ஒன்றை இப்படி திரித்து வெளியிட்டிருப்பதன் உபயம் சாரு நிவேதிதாதான் என புரிகிறது.

அடுத்து சாருநிவேதிதாவின் கட்டுரையும் அவர் நாவலைவிட ஆபாசமாக உள்ளது. இந்த மடையன்தான் எழுதுறான், அந்த மடையன் (கவிதாசரண்) அதை ஏன் வெளியிடுகிறான் என்று நண்பர்களிடம் கேட்டேன். அவர்கள் சொன்னார்கள் "அவர் ஒரு அப்பாவி. இலக்கியம் பற்றி அவருக்கு ஒண்ணும் தெரியாது. ஜெய மோகன் மேல் எல்லாருக்கும் காழ்ப்பு. அதுக்கு கவிதாசரணைப் பலியாடாக்கி பயன்படுத்துகிறார்கள்."

இக்கட்டுரையை பற்றி கூறியதும் திரு பிரபஞ்சன் சாருநிவே திதாவின் 7ம் தேதி நிகழ்ச்சிக்கு செல்வதை ரத்து செய்துவிட்ட தாக கூறினார். நானும் என் நண்பர்களுடன் இனி கவிதாசரண் இதழை வாங்குவதில்லை- படிப்பதில்லை என்றும் முடிவெடுத்திருக் கிறோம். சாருநிவேதிதாவை நாங்கள் அழிக்கத் தேவையில்லை.

படிப்பகம்

www.padippakam.com



அவ்ரே தற்கொலை செய்து கொள்வார். அந்த அளவுக்கு பைத்தியம் முத்திப் போச்சு.

**செந்தூரம் ஜெகதீஷ் சென்னை–112**

## ஆசிரியர் குறிப்பு:

(நாமக்கல்லில் இருந்து, கோவை வாணன் என்பவரும் சரோஜாதேவி அச்சகம் சாருவுக்குத்தான் பரிந்துரை செய்யப்பட்டது என்று ஒன்றுபோலச் சொல்லியுள்ளார். அவருடைய பெயர் எங்கள் முகவரிப் பட்டியலில் இல்லை. ஆனால் அவர், 'கவிதாசரண் கிடைத்தது. நன்றி' என்றெழுதி, செய்தி சொல்லி, 'சாருநிவேதிதா சொன்னதை வெளியிடாமல் ஜெயமோகன் கூறியதை மட்டும் வெளியிட்டு ஜெயமோகனை தலித்துகளுக்கு விரோதி என்று நிறுவ ஒரு மோசடியைச் செய்துள்ளீர்கள். தங்களின் மேல் இருந்த மரியாதை போய்விட்டது. தங்களின்மேல் இருந்த நம்பகத் தன்மையும் போய்விட்டது... நான் ஜெயமோகன் ஆள் இல்லை' என்று முடித்திருக்கிறார்.)—

செந்தூரம் ஜெகதீஷ், ஜெயமோகனின் முகவராகித் தரும் வாக்குமூலமாக இதைக் கருதலாம். 'தலித் இதழ் பற்றியல்ல, சாருவின் எழுத்து பற்றித்தான் சொன்னது' என்பது ஜெயமோகனைப் பெருமைப்படுத்துவதாக இவர்கள் கருதிக் கொண்டாலும், இதை ஏற்பது, தவிர்ப்பது என்பதெல்லாம் ஒரு பிரச்சினையே அல்ல என்னும்படிக்கு ஜெகதீஷின் நயத்தக்க நாகரிகம் நம்மைப் புல்லரிக்க வைக்கிறது. கோட்பாட்டு ரீதியிலான மனிதர் என்னும் மதிப்பீட்டில் சாருநிவேதிதாவின் நம்பகத்தன்மை பற்றிப் பலருக்கும் பல அபிப்பிராயங்கள் இருக்கலாம். நமக்கும்கூட. ஆனால் அவரை ஒரு படைப்பாளியாகக் கருதாதவர்கள் இலக்கிய வெளி கடந்த அநாமதேயங்களாய் இருக்கக் கூடும். அவரை மடையன் என்று சொல்வது சொன்னவரைக் காட்டும் கண்ணாடியாகும் சாத்தியப்பாட்டை ஜெகதீஷ் மறந்திருக்க வேண்டாம். நம்மைப் பொறுத்தவரை ஜெயமோகனும் சரி, சாருநிவேதிதாவும் சரி, அவரவர் தளத்தில் வெகு நல்ல படைப்பாளிகள். அதற்கு மேல்தான் அவர்கள் பற்றிய விமர்சனமோ, அரசியலோ.

கவிதாசரணை மடையன் என்பது ஒருவகையில் ஆறுதலான விஷயம்தான். இந்தக் காலத்துப் பிள்ளைகள் தங்கள்

படிப்பகம்

www.padippakam.com



ஆசைகளுக்கும் தேவைகளுக்கும் உதவாதவர்களை பெற்றவர்கள் என்றுகூடப் பாராமல் நாக்கூசும்படியாகத்தான் பேசுகிறார்கள்; ஜெகதீஷ் பரவாயில்லை. மடையன் என்று மட்டும் தான் சொல்கிறார். ஆறுதல் கொள்ளாமல் என்ன செய்ய. பிரமையில் எழுதிய சித்திரமேயாயினும் குருட்டாம் போக்கில் இருட்டில் ஆடும் திருட்டுத்தனங்களுக்கும் இதுபோன்றதொரு விலை இருக்கத்தான் செய்யும்.

கவிதாசரணுக்கு இலக்கியம் தெரியாது என்கிறார். இந்த அனுதாபத்தைக் கவிதாசரணுக்குக் காட்டும் உயர்ந்த பட்ச மரியாதையாக எடுத்துக்கொள்ளலாம். இலக்கியம் தெரியாதது அப்படியொன்றும் தப்பான விஷயமில்லை என்றுதான் தோன்றுகிறது. காளி வந்து நாவில் எழுதியதால் காளிதாசன் இலக்கியவாதியானது போல்— மலடனுக்கு வாழ்க்கைப்பட்டவளின் மாதவிடாய்த் தூமையை உறிஞ்சிக் குடித்த மலடனுக்கு ஏகாந்த நிலையும் அதீட்ஷா ஞானமும் வாய்க்கலாமெனினும் அவனும் அவனது ஞானமும் உவர் மண்ணில் ஊன்றப்பட்ட முளைப்பற்ற விதைபோல்தான் என்று வடமொழி வேதத்தில் சுலோகமே சொன்னாலும் நாம் அதை நம்புவதில்லை என்பதால் செந்தூரம் ஜெகதீஷும் அவரது நண்பர்களும் இலக்கியவாதிகளாகவே இருக்கட்டும். அது அவர்கள் கொடுப்பினை.

சாருநிவேதிதா, சுந்தரராமசாமியின் ஜேஜே சில குறிப்புகளைவிட சரோஜாதேவி புத்தகங்கள் மேல் என்று சொன்னதாகச் சொல்கிறார். அதுபற்றிய ஒரு சரியான மறுபார்வைக்காக, அது வெளியான ‘சிதைவு’ என்னும் காலாண்டிதழிலிருந்து தொடர்புடைய பகுதியை இங்கு தருகிறோம். புரிதலைச் சரி பார்த்துக்கொள்ள உதவும்.

## சிதைவு இதழில் பிரேம் கட்டுரையின் ஒரு பகுதி

Pornography அல்லது தடை செய்யப்பட்ட மற்ற எழுத்துக்களின் சாதகமான அம்சம் என்னவென்றால் இவை அடக்கி வைக்கப்பட்ட சொல்லாடலை வெளிப்படுத்துகின்றன என்பதுதான். இன்றைய மனிதனின் இயல்பான வக்கிரம் — அமுக்கப்பட்ட விஷயங்கள், fantasy உருவாக்கம், மனச்சோர்வு — இவையெல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



அதிகமாகச் செயல்படும் ஒரு மொழியின் உள் கட்டமைப்புதான் இந்த போர்னோ மொழி. இப்போதைய அமைப்பு உருவாக்கியிருக்கும் மன அமைப்பினுடைய அடுத்த பக்கத்தில் என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதைத்தான் போர்னோ பேசுகிறது. அப்படி இல்லை என்று சொல்லி இதைத் தடுப்பதற்கான காரணம் — அமைப்பு அப்படிச் செய்கிறதென்றால் அதற்குக் காரணம் — இம்மாதிரி விளைவுகள் இருக்கக் கூடாது அல்லது இது போன்ற மனிதனை உருவாக்கக் கூடாது என்ற நோக்கமல்ல. அதைத்தான் அது உருவாக்க வேண்டும். ஆனால் இது தான் உருவாவதாக அது வெளிப்படுத்திக் கொண்டுவிடுகிறது என்பதால்தான் அது தடுக்கப்படுகிறது. தனக்குள்ளேயே இருக்கிறது என்பதை வெளிப்படுத்தும் போது அதனுடைய இன்னொரு பகுதியை — அதனுடைய சாத்தியப்பாட்டையோ அதன் விளைவுகளையோ அது பேசுகிறது என்பதால்தான் அது தடுக்கப்படுகிறது. இந்த அடக்கி வைக்கப்பட்ட சொல்லாடல் அல்லது அடக்கி வைக்கப்பட்ட பிரதி என்று சொல்லும் போது — மற்றொன்று — ஏன் சர்ரியலிஸ்டுகள் கனவுகளைப் பேசினார்கள் — ஏன் தொடர்ச்சியற்ற சொல்லாடலை உருவாக்கினார்கள் — மற்றொரு வகையில் அரசியல் சொல்லாடல்கள் எல்லாமே ஒரு repressed discourse ஆகத்தான் இருக்கிறது. மனிதர்களுக்கு ஏற்படுகிற எல்லா விளைவுகளையும் பற்றி சிந்திக்கிற ஒருவர் ஒரு அரசியல் சொல்லாடலை எப்படிப் பார்க்க வேண்டுமோ அதைப் போலவே தான் இந்த pornography யையும் பார்க்க வேண்டும். இது அறவே தேவையில்லை என்று சொல்வது இம்மாதிரி விளைவுகளே கிடையாது என்று சொல்லி சமூகத்தின் புனிதத் தன்மையைக் காப்பாற்றும் முயற்சிதானே தவிர இம்மாதிரியான விளைவுகளே இல்லாமல் செய்வதற்கான யத்தனிப்பு கிடையாது. இந்த ரீதியில் பார்த்தால் மனித உடம்பைப் பற்றி அதிகம் பேசுவதாலேயே — மனிதர்களை abstract ஆக மாற்றி ரொம்பவும் metaphysical beingஆக மாற்றுவதற்கு எதிராகச்செயல்படுவதாலேயே — இவர்களின் எழுத்துக்களைவிட porncgraphy ஒரு படி மேலேயே இருக்கிறது என்று சொல்கிறோம். உதாரணமாக romance என்று சொல்வது மிகக் கேவலமான உணர்வை வளர்த்துக் கொண்டிருக்கிற எழுத்துக்கள் மற்றும் எல்லாவற்றையும் விட இந்தப் பகுதிகள் நேரடியாக அதன் mythஐ உடைத்து விடுகிறது. ஒரு ஆண் ஒரு பெண்ணை எதற்காகத் தேடி அலைகிறான் என்பதை நேரடியாக அது சொல்கிறது என்கிறபோது demystification — demythification — என்ற வேலையை அது செய்கிறது. இந்த demystification நடக்காமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தால் தான் அவையெல்லாம் தடை செய்யப்பட்டி

படிப்பகம்

www.padippakam.com



ருக்கின்றன. காதல் என்றால் என்ன — ஒரு ஆண் எதற்காக ஒரு பெண்ணை தேடி அலைகிறான் — ஒரு பெண் எதற்காக ஆணுக்கு அடிமையாக இருக்கிறாள் என்ற கேள்விகளையும் ஒரு வகையான மொழியில் அது சொல்லிக் கொண்டே இருக்கிறது. இன்றைக் கிருக்கும் romantic text — romantic cinema — மாத நாவல் கள்—மற்றும் இதுபோன்ற எல்லாவற்றின் உள்ளேயும் பதுங்கிக் கிடக்கிற விஷயங்களை சொல்கிறது என்பதால் போர்னோவை ஒரு அடிப்படையான ஆய்வுப் பொருளாக — உண்மையைப் பேசுகிற பகுதியாக — நாம் பார்க்க வேண்டும். writing the flesh — அது சரியா தவறா — அல்லது — எல்லா pornography யுமே writing the flesh தானா — என்று நாம் சொல்ல முடியாது — ஆனால் அது பதுக்கப்பட்ட கனவுகளின் உடைந்த பகுதி என்பதில் சந்தேகமே இல்லை. எனவே இவர்கள் சொல்லும் எழுத்துக்களை விட அது ஆபாசம் என்று சொல்வது......

சாரு: அப்படியானால் சரோஜாதேவியும் சுந்தரராமசாமியும் சமம் கிடையாது. சுந்தரராமசாமியை விட சரோஜாதேவி ஒருபடி மேல்..

பிரேம்; ஆமாம் — அதே மாதிரி வேதங்களும் உபநிஷத்துக்களும் உண்மையைச் சொல்கிறது என்று இவர்கள் சொன்னால் போர்னோ சொல்வதும் ஒருவகை உண்மைதான். வேதத்திற்கும் போர்னோ வுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் கிடையாது. எல்லாமே மனிதனைப் பற்றிய உண்மைகளைத்தான் சொல்கிறது. சரியான கருத்தியலும் சரியான பார்வையும் கொண்டவர்கள் போர்னோவை இப்படித்தான் வாசிப்பார்கள். மனிதர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவோ ஆய்வு செய்யவோ வாசிப்பார்கள்.

சாரு: அப்படியானால் சிறு பத்திரிகைகளில் சரோஜாதேவியைப் போட வேண்டியதுதானே — அதை விட்டுவிட்டு மசாலா பண்ணு கிறார்கள் என்று...

பிரேம்: Pornography அல்லது eroticism என்பது நமது நோக்கம் கிடையாது. What is the defaulter in eroticism? உண்மையான eroticism என்றால் என்ன? ஆனா இது ercticism தானா? What is lacking in Pornography?

சாரு: What is unscientific in Pornography?

பிரேம்: Poinography உருவாவதற்கு என்ன காரணம் என்பதை ஆய்வு செய்யும் போதுதான் அதை வெட்டியோ ஒட்டியோ நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அதனுடைய உள்அமைப்பை வெளிக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டுவர வேண்டியிருக்கிறது. Pornographyயோ அல்லது scriptureஒ எதுவாக இருந்தாலும் அது மொழியால்தான் உருவாக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இது எப்படி உருவாகிறது — என்ன விளைவுகளை ஏற்படுத்துகிறது — என்பதை மொழியால் மட்டும் தான் ஆய்வு செய்ய முடியும் — பகுத்துப் பார்க்க முடியும். அதற் காகத்தான் இதை எழுத வேண்டியிருக்கிறது. அதைப் புரிந்து கொள்ளாமல் சரோஜாதேவியை சிறு பத்திரிகைகளில் வெளியிட லாமே என்றால் சிறு பத்திரிகைகள் என்று சொல்லிக்கொள்பவர் கள் அதை வெளியிட்டுக் கொள்ளட்டும். அது நம் வேலை கிடை யாது. நமக்கு வேண்டியது இது உருவாவதற்கான காரணம். இது ஏன் மனிதர்களுக்குள் இருக்கிறது — வக்கிரம் ஏன் உருவா கிறது — ஏன் ஒவ்வொரு மனிதரும் தனக்குள் பதுங்கிக் கிடக்கி றார்கள் — நிச்சயமின்மை — பாதுகாப்பு இன்மை — பயம் எல் லாம் எப்படி உருவாகிறது — இதை ஆய்வு செய்வதுதான் நம் வேலையே தவிர போர்னோவை உருவாக்குவது அல்ல. இன்னொரு கட்டம் வரும்போது நாம் நிஜமான போர்னோவையும் நிஜமான eroticismஐயும் உருவாக்கலாம்—

★

சாரு: நான் உணர்வை முற்றிலும் இழந்துவிட்டவன் பைத்தியக் காரன் என்கிறார்கள் தமிழக ஞானிகள். இது இந்த ஞானிகளின் மொழியில் செயல்படும் வன்முறையைக் காட்டுகிறது. ஞானிகளின் மொழியை ஞானிகள் பேசுவதைப் போல் பைத்தியக்காரர்களின் மொழியை பைத்தியக்காரர்கள் பேசுகிறார்கள். ஏன் — அவர்கள் சிந்திப்பதில்லையா — அவர்கள் வேறுவிதமான சொல்லாடலைக் கொண்டிருக்கிறார்கள். பைத்தியம் என்பது...

பிரேம் பைத்தியம் என்று ஏதாவது இருக்கிறதா என்பதே நமது கேள்வி. அதாவது அமைப்பு உருவாக்கியிருக்கும் சொல்லாடலுக் குள் அடங்க முடியாத எந்த உண்மையையும் நோய்க் கூறாகவும் ஒழுங்கற்றதாகவும் முறையற்றதாகவும் பார்ப்பதுதான் இந்த வகை யான பார்வைகளின் அடிப்படை. இந்த அமைப்பு முழுக்க எல்லா மனிதர்களுக்குமான அமைப்பாக இருக்குமென்றால் அதி லிருந்து விடுபட்டுப் போக வேண்டிய தேவை இருக்காது. ஆனால் இன்றைக்கு இருக்கிற அமைப்புக்குள் ஏறக்குறைய எல்லா மனிதர் களையுமே ஒருவிதமான மனநோய் நிலைக்கு கொண்டு போவது தான் அமைப்பின் வேலையாக இருக்கிறது. பைத்தியம் என்பது அமைப்பின் எல்லாப் பாதிப்புகளையும் எடுத்துக்கொண்ட எல்லா மனிதர்களுக்குமே வரக்கூடியதுதான். அதாவது கலைந்த ஒரு

படிப்பகம்

www.padippakam.com



சொல்லாடலை உருவாக்கிக்கொண்டு தொடர்பில்லாத சில மொழிகளை உருவாக்குவதென்பது இன்றைக்கு நேர்ந்திருக்கிறது. அப்படியானால் நிஜமான பாதிப்புகளை அடைந்தவர்கள் பைத்தியக்காரர்களாகத்தான் இருக்கமுடியும். மொழியின் எல்லா பாதிப்புகளையும் மூளையிலிருந்து மொழிக்கு அப்பாற்பட்ட — மொழியின் கட்டுமானங்களுக்கு உட்படாத — சொல்லாடல்கள் வெளிக்கொண்டு வருகிறது. இது இப்போது இருக்கும் அமைப்பினால் தான் உருவாக்கப்பட்டதே தவிர அவர்களாகவே உருவாக்கிக்கொண்டதல்ல. மேலும் — பைத்தியம் என்பதை பைத்தியமில்லாத — அதாவது ஆரோக்கியமான மனநிலை என்பதை நிர்ணயிப்பவர்களுக்கு என்ன அளவுகோல் இருக்கிறது என்பதுதான் அடிப்படையான கேள்வி. அதாவது — இவர்கள் சொல்லும் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டவர்கள் ஆரோக்கியமானவர்கள் — அதிலிருந்து விலகிப் போகிற அத்தனை பேரும் பைத்தியக்காரர்கள் — என்னும் கருத்துதான் இவர்களிடம் இருந்து கொண்டிருக்கிறது. இந்த அமைப்பு வன்முறையை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் இதிலிருந்து விலகிப் போகிற ஒருத்தர்தான் உண்மையில் இந்த வன்முறைக்கு எதிராகச் செயல்படுகிறவராக இருக்கிறார். ஆக — இந்தச் சமூக அமைப்பே மொத்தமாக ஆரோக்கியமாக இருக்கிறதென்று ஒப்புக்கொள்கிறவர்கள்தான் இந்த மாதிரியான ஒரு பார்வையை வைக்க முடியும். ஆனால் இன்றையநிலை அப்படிப்பட்டதுதானா? அடிப்படையாக மனிதரை மனிதர் பிளவுப்படுத்துகிற - கட்டுப்படுத்துகிற — சக மனித சுதந்திரத்தை அங்கீகரிக்காத — சமூக அமைப்புதானே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது? மேலும் — பைத்தியக்காரர்கள் — குற்றவாளிகள் — எல்லாம் சேர்ந்து மனித சரித்திரத்தை அழிவை நோக்கி நகர்த்தியதாக எந்த இடத்திலும் சரித்திரம் கிடையாது. இவர்கள் ஒன்றுபடவோ ஒருங்கிணையவோ முடியாதவர்கள். ஒருங்கிணைய முடியாத ஒரு செயல்பாடுதான் ஏகாதிபத்தியமாக மாறாத சாத்தியம் இருக்கிறது. முதல் உலகப் போரிலோ இரண்டாவது உலகப் போரிலோ அல்லது மூன்றாம் உலகப் போருக்கான தயாரிப்பிலோ ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்புகள்தான் ஈடுபட முடிந்தது அல்லது முடியும். ஆனால் இவர்கள் தமக்குள்ளாகவே பிளவுபட்டிருப்பதால் — நிச்சயமாக — ஏற்பாடு செய்யப்பட்ட — திட்டமிடப்பட்ட — ஒரு அழிவை இவர்களால் ஏற்படுத்த முடியாது — ஏற்படுத்தியதும் கிடையாது— இதுவரை இவர்களால் அழிவுக்கருவிகளை உருவாக்க முடிந்ததில்லை — முடியப்போவதும் இல்லை — இவர்கள் உண்மையில் என்ன ஆகிறார்கள் என்றால் — இந்த அமைப்பினுடைய எல்லா வன்முறையையும் தங்களுக்குள் ஏற்றுக்

www.padippakam.com



கொண்டு — தங்களைத் தாங்களே சிதைத்துக் கொண்டவர்களாகி றார்களே தவிர இவர்கள் பிறரைச் சிதைத்தது கிடையாது. Centraliseஆன நிலையே ஆரோக்கியமான நிலை என்றும் centralise ஆகாதவர்களை — ஒழுங்குமுறைகளுக்கு உட்படாதவர்களை — யுத்த தயாரிப்பில் ஈடுபடாதவர்களைப் பைத்தியக்காரர்கள் என்றும் சொன்னால் பைத்தியம் — மனநோய் — முட்டாள்தனம் — பலகீனம் — கோழைத்தனம் — அலித்தனம் என்று இன்னும் என்னவெல்லாம் இதில் அடங்குமோ அதெல்லாம்தான் — இன்னும் இவர்கள் எவற்றையெல்லாம் உதவாதவை என்று சொல்கிறார்களோ அதெல்லாம்தான் — இன்றைக்கு தேவைப்படுவதாக இருக்கிறதென்று நாம் சொல்லுவோம். ஏனென்றால் ஒருங்கிணைக்கப்பட்ட — ஆரோக்கியமான - சமூகம் என்று சொல்வது அடிப்படையில் அழிவை நோக்கிய தயாரிப்பாகத்தான் இருந்து வருகிறது. ஆக — இன்றைய தேவை — பைத்தியம் — ஒருவிதமான diverted discourse — ஒன்றுபடமுடியாத — மேலாதிக்கத்துக்கும் — ஏகாதிபத்தியத்துக்கும் ராணுவ அமைப்புக்கும் — மத அமைப்புகளுக்கும் அடங்கிப் போகாத ஒரு குலைவுதான் இன்று பேரழிவை ஒத்திப்போடுவதற்கான ஒரு செயல்பாடாக இருக்கும்.

ஒழுங்கு என்பதை இவர்கள் எந்த அடிப்படையில் வரையறை செய்கிறார்கள்? பிரபஞ்ச அளவில் ஒழுங்கற்ற ஒன்று என்பது சாத்தியம்தானா? இது மிகவும் அடிப்படையான கேள்வி. எல்லாப் பொருளும் மிகவும் ஒழுங்குக்கு உட்பட்டு அதே சமயத்தில் ஒழுங்கற்ற நிலையில்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அடிப்படையில் — மொத்தமாக — ஒழுங்கு — ஒழுங்கின்மை என்பதே மிகவும் relative ஆன ஒன்று.

இதில் மனித ஒழுங்குகள் என்கிறபோது — அந்த ஒழுங்குகள் எதற்காக உருவாகியதோ அதற்கான தேவையை — அல்லது அதற்கான செயல்பாட்டை — அது செய்யவில்லையெனில் அந்த ஒழுங்குக்கான தேவையும் அழிந்து போகும். எந்த நோக்கத்திற்காக அது உருவாக்கப்பட்டதோ அதை அது செய்து முடிக்கவில்லையென்றால் — அந்த ஒழுங்குக்கான தேவை குலைந்துவிடுகிறது. நாம் உருவாக்கியிருக்கும் ஒழுங்கு - ஒழுங்கின்மை என்பது வெறுமையான — மொழி சார்ந்த பிரச்சினைதான். ●

**நன்றி: ‘சிதைவு’ நவம்பர் 91**

படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# ஒரு ரூபாய்க்கு ஒரு கதை — கோபிகிருஷ்ணன்

எங்கள் அலுவலகம் அடையாரில் இருந்தது. மோபெட்டில் முக்கால் மணி நேரப் பயணம். போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டால் ஒரு மணி நேரம். நெரிசலின் கனத்தைப் பொறுத்து ஒன்றரை மணி நேரம்; இப்படி......

அந்த அலுவலகத்தில் சேர்ந்து இரண்டு மாதங்கள் கழிந்திருந்தன. ஓர் ஒரு மாதத்திலேயே சக ஊழியர்கள் அனைவரும் நன்றாகப் பழகிவிட்டார்கள். உணவு இடைவேளையில் எல்லோரும் சேர்ந்தே சாப்பிட்டோம். எங்கள் செக்ஷனில் ஏழு பெண்கள், மூன்று ஆண்கள். கடி ஜோக்ஸ், அரட்டை ஆகியவற்றுக்குப் பஞ்சமே இல்லை. என்னை எல்லோரும் 'சின்ன சார்' என்று அழைப்பார்கள். மூன்று ஆண்களில் என்னை விட மூத்தவர் ஒருவர் இருந்தார். அவர் 'பெரிய சார்.' அவர் பிறரோடு கலக்கமாட்டார். இன்னொருவர் இளைஞர். அவரைப் பெயர் சொல்லியே அழைப்போம்.

பிறருடைய வாழ்க்கையைப் பற்றி நானும் என் வாழ்க்கையைப் பற்றிப் பிறரும் அறிந்து கொண்டிருந்தோம்.

உடன் பணி புரியும் மார்கரெட்டின் நிலை மிக மோசமாக இருந்தது. உழைக்கும் மகளிர் விடுதி ஒன்றில் அவள் தங்கியிருந்தாள். விடுதி நுங்கம்பாக்கத்தில் இருந்தது.

இரண்டு கால்களும் ஊனம் மார்கரெட்டுக்கு. இளம்பிள்ளை வாதம். செயற்கை அவயவங்கள் அணிந்திருப்பாள். கூடவே இரண்டு தாங்கு கட்டைகளின் உதவி கொண்டே அவளால் நகர முடியும்.

முதலில் நான் அவளுடைய உற்றார்களைப் பற்றிக் கேட்டபோது அவள், ''நீங்கள் எல்லோரும்தான் என் உறவினர்கள்,'' என்றாள் சோகம் கலந்த ஒரு புன்சிரிப்புடன். பிறரிடமிருந்து கேட்டறிந்தேன், அவளுக்குப் பெற்றோர்கள் இல்லையென்றும், அனாதை

படிப்பகம்

www.padippakam.com



விடுதியில் இருந்தவள் என்றும். என் கண்கள் கலங்கிவிட்டன.

மார்கரெட்டைப் பற்றி நிறைய யோசித்தேன். அவளுக்கு ஏதாவது வகையில் உதவ வேண்டும் என்று உள்ளம் பரபரத்தது. அவளுக்குப் பேருந்தில் வருவது எவ்வளவு சிரமமாக இருக்கும் என்பது எனக்குப் புரிந்தது. தவிர, விடுதியிலிருந்து பேருந்து நிறுத்தம் வரை வர நிறைய தூரம் நடக்க வேண்டும். மார்கரெட் நகர்ந்து நகர்ந்து வருவதை எண்ணிப் பார்க்க எனக்கு மகா இம்சையாக இருந்தது. அப்பா! எவ்வளவு நேரம் பிடிக்கும்!

மார்கரெட்டின் இசைவுடன் அவளை விடுதியிலிருந்து அலுவலகம் அழைத்து வருவதையும் அலுவலகம் முடிந்து விடுதிக்கு அழைத்துச் சென்று விடுவதையும் ஒரு பொறுப்பாக ஏற்றுக் கொண்டேன். மோபெட்டின் பின் இருக்கையில் மார்கரெட் அமர்ந்திருக்கும் போது மிகவும் எச்சரிக்கையுடன் வண்டியை ஓட்டுவேன்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. அனைவருடைய வாழ்க்கையும் நலமாகவே கழிந்து கொண்டிருந்தது.

மார்கரெட் பற்றிச் சில வார்த்தைகள்: அவளுக்கு வயது இருபத்து நான்கு. என் மகளை விட ஆறு வயது அதிகம். எப்பொழுதும் சட்டையும் ஸ்கர்ட்டும் அணிந்திருப்பாள். அவளுடைய உடல் பிரச்சினைக்கு வேறு எந்தவித உடையும் பொருந்தாது.

திடீரென்று ஒரு சிக்கல் ஆரம்பித்தது. நான் கொஞ்சம் கவனக்குறைவாக இருந்துவிட்டேன். மார்கரெட்டுடன் மோபெட்டில் வரும்போது பெட்ரோல் போட வேண்டி வந்துவிட்டது. பங்கில் வண்டியை நிறுத்தினேன். இரண்டு ஆயில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ. 31–50. பர்ஸில் சரியாக ஐம்பது ரூபாயும் ஓர் ஐம்பது பைசா நாணயமும் இருந்தன. பங்கில் சில்லறை கொடுக்க மாட்டார்கள். ஒரு ரூபாய் நிச்சயம் தேவை. மார்கரெட்டிடமிருந்து ஒரு ரூபாய் வாங்கிக் கொண்டு பெட்ரோல் நிரப்பிக்கொண்டேன். இது ஒரு சாதாரண விஷயம். நினைவில் பதிய வேண்டிய அவசியம் இல்லை. மனத்தை உறுத்த வேண்டிய அவசியமும் இல்லை.

அடுத்த நாள் மார்கரெட்டிடம் மகா பிரமாதமாக ஒரு ரூபாயைத் திருப்பிக் கொடுத்தேன். மார்கரெட் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்பொழுதிருந்து ஒரு ரூபாய் பூதாகாரமான பிரச்சினையாகப் போய்விட்டது. அடுத்த இரண்டு மாதங்களில் இன்னும் இரண்டு முறை திருப்பிக் கொடுத்தும் மார்கரெட் ஏற்றுக்கொள்ளவில்லை.

மனதில் ஒருவிதச் சுமை ஏற்பட்டது. அப்புறம் ஒரு பெரும்

படிப்பகம்

www.padippakam.com



பிரமை என்னை ஆட்கொண்டது. மோபெட்டில் என் உடன் வரும்போது மார்கரெட் தன் நெற்றியில் ஒரு ரூபாய் வில்லை ஒன்றைப் பொட்டாக வைத்துக்கொண்டிருப்பது போன்ற கற்பனை தோன்றிற்று. பக்வானால் படைக்கப்பட்ட கழுத்தை முழுமையாகப் பின் பக்கமெல்லாம் திருப்ப இயலாது!

பிறகு மார்கரெட்டைப் பார்க்கும்போதும் அவளிடம் பேசும் போதும் சதா ஒரு ரூபாய் நினைப்பு வந்துகொண்டேயிருந்தது. ஐம்பத்து மூன்று வயதில் இப்படி ஒரு வினோதமான சிக்கலில் மாட்டிக்கொண்டது ஒரு எரிச்சலுணர்வை ஏற்படுத்திற்று.

கடைசியில் ஒரு நாள் மார்கரெட்டிடம் என் சிக்கல் முழுவதையும் சொன்னேன். எப்படியும் அதை வாங்கிக்கொள்ளப்போவதில்லை என்றும், ஒரு தீர்வாகத் திருச்சபை உண்டியலில் வேண்டுமானால் நான் காசைப் போட்டுவிடலாம் என்றும் ஆலோசனை வழங்கினாள்.

இதற்கென்றே ஒரு ஞாயிறு மார்கரெட்டுடன் அவள் உறுப்பினராக இருக்கும் திருச்சபைக்குச் சென்றேன். பிரார்த்தனைகளின் ஊடே வெள்ளை அங்கி அணிந்திருந்த ஒருவர் ஒரு நீண்ட கழியை ஒவ்வொரு வரிசையிலும் நீட்டிக் கொண்டிருந்தார். எங்கள் வரிசையில் வந்தபோது கழியின் முனையில் ஒரு குழிவான துணிப் பை போல் இருந்ததைப் பார்த்தேன். பிறர் அதில் காசு போட அதுதான் உண்டியல் என்று புரிந்துகொண்டு ஒரு ரூபாய் நாணயம் ஒன்றை அதில் போட்டேன். ''மார்கரெட், உன் ஒரு ரூபாய்'' என்றேன். அவள் புன்னகைத்தாள். திருச்சபையைவிட்டு வெளியே வந்தோம். மார்கரெட் வாய்விட்டுச் சிரித்தாள். ''நீங்களும் உங்கள் பிரச்சினையும்'' என்றாள்.

ஒரு மாலை நானும் மார்கரெட்டும் அலுவலகம் விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தோம். இருவருக்குமே பசித்தது. ஓர் ஓட்டலில் டிஃபன், காப்பி சாப்பிட்டோம். பில் ரூபாய் நாற்பத்து ஒன்று. என்னிடம் சரியாக ஓர் ஐம்பது ரூபாய் மட்டுமே இருந்தது. கல்லாவில் இருந்தவர் ''ஒரு ரூயாய் இருக்குமா?'' என்று கேட்டார். மார்கரெட் ''என்னிடம் சில்லறை இருக்கிறது. நான் வேண்டுமானால் ஒரு ரூபாய் தருகிறேன்'' என்றாள். ''ஐயோ மீண்டுமா?'' என்று நான் கிட்டத்தட்ட அலறிவிட்டேன். கிழிந்த நோட்டுகளாகப் பார்த்து எனக்கு மீதி காசு சிடுசிடுப்புடன் ஓட்டல்காரரிடமிருந்து கிடைத்தது.

அந்த ஒரு ரூபாய் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. திருச்சபை சம்பவம் எந்தப் பலனையும் பெற்றுத் தரவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். ஒரு ஞாயிறு மார்கரெட்டை வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுத்தால் என்ன? செலவில் மார்கரெட்டுக்குத் தர வேண்டிய ஒரு ரூபாயும் சேருமே என்று நினைத்தேன். நாட்கள் செல்லச் செல்ல அது ஒரு நல்ல உத்தி என்றே தோன்றிற்று.

என் பிரச்சினைக்கு விடிவு காலம் வரும் அந்த ஞாயிறு வந்தது. பதினோரு மணி வாக்கில் மார்கரெட்டின் விடுதிக்குப் போய் அவளை வீட்டுக்கு அழைத்து வந்தேன். விருந்து திருப்திகரமாக அமைந்தது. மார்கரெட் சுலபத்தில் என் வீட்டாருடன் கலந்து விட்டாள். என் மகளுடன் பகிர்ந்து கொள்ள மார்கரெட்டுக்கு நிறைய விஷயங்கள் இருந்தன. மாலை நான்கு மணி போல மார்கரெட்டை விடுதியில் விட்டு விட்டு வீடு திரும்பினேன்.

பேச்சுவாக்கில், ''செலவு எவ்வளவு ஒரு ரூபாய் பிடித்தது?'' என்று மனைவியிடம் கேட்டேன். அவள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். அனிச்சையாக வந்த வார்த்தைகள். கட்டுப்பாடு அறவே இல்லாமல் போயிருந்தது.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. மோபெட்டும் மார்கரெட்டும் நானுமாக அலுவலக வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. என் ப்ராஜெக்ட்டின் காலம் நிறைவுற்றது. மற்றவர்கள் நிரந்தரப் பணியாளர்கள்.

பிரிய வேண்டிய நாளில் நாங்கள் அனைவரும் மிகவும் சங்கடப்பட்டுப் போனோம். ஒரு மாதிரியாக இருந்தது. அந்த உணர்வை எப்படி விவரிக்க!

அந்தக் கடைசி தினத்தன்று வழக்கம்போல் மார்கரெட்டை விடுதிவரை அழைத்துச் சென்றேன். விடைபெறும்போது, ''நாளையிலிருந்து எப்படி நீ?...... நான் வேண்டுமானால் வரட்டுமா?'' என்றேன். வார்த்தைகள் தடுமாறின.

மார்கரெட் அவசரத்துடன் மறுத்தாள். ''வேண்டாம் வேண்டாம். நான் சீக்கிரமே கிளம்பி பஸ்ஸிலேயே போய்க்கொள்கிறேன். நீங்கள் என்ன பெரிய பணக்காரரா, தினமும் எனக்காகவே பெட்ரோல் செலவு செய்ய? என்னை மறக்காமல் இருந்தால் சரி,'' என்றாள்.

''பாரதத்தில் ஒரு ரூபாய்கள் புழக்கத்தில் இருக்கும் வரை உன்னை என்னால் எப்படி மறக்க முடியும்?'' என்றேன் மனதில் சுமையுடன்.

படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை

# தாழ்த்தப்பட்டவர்களும் கல்மாலையறுப்புத் தன்மானப் போராட்டமும்

**எ. எம். சாலன்**

பண்டைய கேரளத்தில் நில மீட்சிப் போராட்டம், கூலி உயர்வுக்கான போராட்டம், வரிக்கொடுமைக்கு எதிரான போராட்டம், மேல் சாதியினர் நடத்திய விதவைக் கொடுமைக்கு எதிரான போராட்டம், பெண்களை அடுக்களையிலிருந்து அரங்கத்திற்குக் கொண்டு வருவதற்கான போராட்டம் என- இப்படி பல போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன.

இவற்றுக்கெல்லாம் மேலான பல போராட்டங்களும் கேரளத்தில் நடைபெற்றுள்ளன.

1. தென்னை மரமேறி பிழைப்பு நடத்திவந்த ஈழவசாதியினர் அன்றைய சாதீய மேலாண்மைக்கு எதிராக நடத்திய போராட்டம்.
2. தென் திருவிதாங்கூரைச் சேர்ந்த நாடார் குல மக்கள் கட்டம் கட்டமாக நடத்திய தோட்சீலைப் போராட்டம்.
3. தலித்துகள் தன்மானத்துடன் வாழ்வதற்காக வேண்டி நடத்திய கல் மாலையறுப்பு- தன்மானப் போராட்டம்.

மேற்கண்ட மூன்று போராட்டங்களும் கேரள தேசத்தில் மிகப் பிரம்மாண்டமான சமூக மாறுதல்களுக்கு வித்திட்டிருக்கின்றன.

நாம் இங்கே கட்டுரைக்காக எடுத்துக் கொண்ட விஷயம் தலித்துகளால் முன்னின்று நடத்தப்பட்ட கல் மாலையறுப்பு-தன்மானப் போராட்டம் மட்டுமே!

பொதுவாக கேரள தேசத்தில் (குறிப்பாக கொச்சி, திருவிதாங்கூர் சமஸ்தானங்களில்) 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் சாதீய மேலாண்மைக்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட சாதியினர் மிகப் பெரிய கலகங்களில் ஈடுப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது.

மேல் சாதியினருடைய தெருக்களுக்குள் நுழையும்போது தாழ்த்தப்பட்டவர்கள் காலில் செருப்பு அணிந்து செல்லக் கூடாது. அவர்களுடன் சரிநிகர் சமானமாக உட்கார்ந்து டீ ஸ்டாலுக்குள் பானம் அருந்தக்கூடாது. (சந்தை, பள்ளிக்கூடம், கோவில், மேல் சாதி

www.padippakam.com



யினர் நடந்து செல்லும் தெருக்கள் ஆகிய இடங்களில்.)

இவைகள் மட்டும்தான் முன்னர் நாம் கண்ட – கேட்ட மிகப் பெரிய தீண்டாமைக் கொடுமைக்குரிய சித்திரங்கள்.

இதுபோக, தாழ்த்தப்பட்டவர்களும் பிற்படுத்தப்பட்ட சனங்களும் (இவர்களும் அன்று மேல் சாதியினரால் தாழ்த்தப்பட்டவர்களாகத்தான் கருதப்பட்டிருந்தார்கள்) அன்று (ஆண்களும்–பெண்களும்) தங்கள் உடலை மறைத்து, மானத்துடன் வாழ்வதற்குக் கூட முடியாமல் (மேல் சாதியினரால் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததால்) திணறிக்கொண்டிருந்திருக்கிறார்கள். இதற்குரிய சான்று பண்டைய கொச்சி–திருவிதாங்கூர் சமஸ்தானத்திலுள்ள வரலாற்று ஏடுகளுக்குள் புதைந்துக் கிடப்பதைக் காண முடிகிறது.

ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வாழ்ந்து கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட சாதியினர் மனிதர்களைப்போலத் தெருவில் நடமாடவோ ஆடை (பொன்னாலும்-வெள்ளியாலும் ஆன) ஆபரணங்கள் அணியவோ நல்ல மொழியில் பேசவோ, அப்பிரிவினருக்கு வெளியே 'நான் - நீ' என்ற பதத்தை உபயோகிக்கவோ கூடாது என்றிருந்தது. ஏன், கீழ்சாதிப் பெண்களுக்கு தங்கள் மார்பை மறைக்கக்கூட உரிமை கிடையாது எனில் தடுப்பாரில்லாத சாதிப்பேய் எவ்வளவு தூரம் தலையை விரித்துப் போட்டு ஆடியிருக்கும் எனப் பார்த்துக் கொள்ளுங்கள்!

மாத்திரமல்ல.

கீழ்ச்சாதியைச் சேர்ந்த பெண்களை அடையாளம் தெரிந்து கொள்வதற்காக வேண்டி மேல் சாதியினர் அவர்களை, கழுத்தில் கல்மாலைகளைத் தரிக்கவும், கைகளில் கண்ணாடி வளையல்களையும், காதுகளில் இரும்பு வளையங்களைத் தொங்கவிடவும் நிர்பந்தித்திருந்தார்கள். இவ்விஷயத்தில் மேல்சாதியினர் மிகவும் கண்டிப்பாகவும் நடந்து கொள்வார்கள்.

இதில் முக்கியமான விஷயங்கள் என்னவென்றால், இவைகள்தான் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதைக் காட்டுவதற்குரிய 'அடிமைச் சின்னங்கள்.'

இதற்கு எதிராகத்தான் தென்திருவிதாங்கூரைச் சேர்ந்த வெங்கானூர்காரரும் தலித் பண்பாட்டுப் போராளியுமான அய்யங்காளி மூர்க்கத்தனமாகத் தன் சாதி – சமத்துவப் போராட்டத்தைத் துவங்குகிறார். சாதிக் கொடுமைக்கு எதிராகத் தலித்துகள் கிளர்ந்தெழுந்த முதல் இடமும்கூட இதுவாகத்தான் இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



மேற்கண்ட போராட்டத்தில் கிடைத்த வெற்றியில் அவை, மெல்ல மெல்ல பக்கத்து இடமான கொல்லம் வரையில் தவழ்ந்து செல்லவே, அங்கேயுள்ள தாழ்த்தப்பட்டவர்களும் இதுபோல கிளர்ந் தெழ ஆரம்பிக்கிறார்கள். இப்படி கொல்லத்தில் (பெரிநாடு என்ற இடத்தில்) கிளர்ந்தெழுந்த கிளர்ச்சிக்கு கோபாலதாசன் என்ற தலித் போராளி பொறுப்பை ஏற்கிறார். இதையொட்டி ஆங் காங்கே பொதுக்கூட்டங்களும் பிரசாரங்களும் நடைபெற்றன.

தலித் முன்னேற்றங்களுக்காக வேண்டி போராடும் போராட் டங்களில் – தன் உயிரைக்கூட பொருட்படுத்தாதவராம் இவர்.

பொருளாதார ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் ஒடுக்கப் பட்டு, எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து வந்த தாழ்த்தப்பட் டவர்கள் தங்களுக்கென ஒரு விடிவுகாலம் வராதா என ஏங்கிக் கொண்டிருந்த இந்த வேளையில் 24–10–1915 ஆம் தேதியன்று பெரிநாட்டில் ஒரு பொதுக்கூட்டம் போடத் தீர்மானிக்கிறார்கள்.

சென்னித்தலை என்ற இடத்தில் (தற்போதைய ஆலப்புழை யின் பக்கமுள்ள ஓர் இடம்) இதே மாதிரி தாழ்த்தப்பட்டவர்க ளுக்குத் தன்மான உணர்வை ஊட்டிக்கொண்டிருப்பவரும் அவர் கள் நடத்திய பல போராட்டங்களை முன்னின்று நடத்திக்கொண் டிருப்பவருமான விசாகன்தேவன் என்பவர் அம்மேடையில் வந்து ஒரு பாடலைப் பாட (இப்பாடல் அன்று தாழ்த்தப்பட்டவர் நடத் தும் எல்லாப் பொதுக்கூட்டங்களிலும் பாடும் பாடலாகும்) கூடி நின்ற தாழ்த்தப்பட்ட சனங்கள் அனைவரும் அப்பாடலுக்கு மரி யாதை செலுத்தும் பொருட்டு எழுந்து நின்றனர்.

இது இப்படியிருக்க, இன்னொரு புறம் தாழ்த்தப்பட்டவர் களுக்கு தன்மான உணர்வை ஊட்டிவிட்டுக் கொண்டிருந்த கோபா லதாசனைக் கொலை செய்வதற்குரிய சதியாலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கல்மாலையறுப்பு, தன்மானப் போராட்டத்திற்குரியதுதான் இப்போரட்டம் என்பதை முன்கூட்டி யறிந்த மேல்சாதியினர் அங்கே பல்வேறு ஆயுதங்களோடு திரண்டு வந்து அமர்ந்திருந்தனர். காரணம் தாழ்த்தப்பட்டவர்கள் தன் மானம் உட்பட பெற வேண்டியவைகளைப் பெற்று உயர்ந்துவிட் டால் சாதிக்கு சாதி கட்டப்பட்டுள்ள வேலி, எங்கே இற்று நொறுங்கி விழுந்துவிடுமோ என்ற பயம்!

பொதுக்கூட்டம் துவங்குவதற்கு சற்று முன் விசாகன்தேவன் வந்து அந்தப் பாடலைப் பாடத் துவங்குகிறார். அவர் அப்பா டலைப் பாடுவதற்கு துவங்கியவுடனேயே, இரும்புக் கம்பியைத் தூக்கிக்கொண்டு ஒருவன் ஓடிவர, அந்த அடி தன் தலையில்தான் விழப்போகிறது என்பதை அறிந்த விசாகன்தேவன் மேடையிலி

படிப்பகம்

www.padippakam.com



ருந்து கீழே துள்ளிச் சாடுகிறான். என்ற போதிலும் அந்த அடி அவன் தலையிலே விழ, கால் தளர்ந்த அவன் உணர்வற்று நிமிசத்தில் வீழ்கிறான். சற்று நேரம் கழித்து எழுந்தபோது, தன்னை அடித்தவனைத் தரையில் கிடத்திப்போட்டு இஞ்சிஞ்சாய் நொறுக்கிக்கொண்டிருப்பது தெரிந்தது. கூடி நின்றவர்களில் அதிகம் பேரும் கல்மாலைகளை அணிந்த பெண்களாகவே இருந்தார்கள். சில பெண்களின் கைகளில் அரிவாள்களும் காணப்பட்டன!

சிலர் (மேல்சாதியினர்) உயிரைக் கையில் ஏந்திக் கொண்டு ஓடினார்கள் சிலர் துவந்த யுத்தம் (ஆயுதமின்றி செய்யும் யுத்தம்) நடத்திக் கொண்டிருந்தார்கள். எல்லா இடங்களிலும் கூப்பாடு போடுவது கேட்டது. கருத்த நிறமுள்ள (தலித்) பெண்கள் ஒரு நூல்கூடத் தங்கள் உடம்பில் இல்லாமல் ரத்தக்கறை படிந்த அரிவாள்களைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு ஓடுவது தெரிந்தது. காலில் பலமாக அடிப்பட்ட விசாகன்தேவன் மெதுவாக இழைந்து இழைந்து சென்று ஒரு மாமரத்தின் மேல் ஏறியமர்ந்துகொண்டு அவர் கண்டதுதான் மேலே விவரிக்கப்பட்ட காட்சிகள்!

சுற்றிவாழும் நாயர் சாதியினர் பெண்களுடனும், குழந்தைகளுடனும் பதறியடித்து ஓடிக்கொண்டிருந்தார்கள். பொதுக் கூட்டத்தை நடத்தவிடாமல் குழப்பம் விளைவித்த நல்லேரிகூரி மாலுவினுடைய வீடு அக்கினிக்கு இரையாகிக் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் ஒரே புகைமண்டலம்! காக்கோலின் உண்ணித்தான் என்ற பிரதம பிரமுகர் தன் வீட்டை விட்டு எங்கோ ஓடி மறைந்திருந்தார். (இவர் இந்தக் குழப்பத்திற்குக் காரணமானவர்களில் ஒருவர்.) இவருடைய வீடு ஓடுகளால் வேயப்பட்டது. எளிதில் தீ வைத்துக் கொளுத்த இயலாது. எனவே அடுத்த கடையிலிருந்து கிட்டத்தட்ட பதினாறு டின் மண்ணெண்ணெயை எடுத்துக்கொண்டு வந்து வீட்டின் மேல் ஊற்றி தீக்குச்சியை உரசிப் போட்டார்கள்.

அதற்குப் பின்புதான் அதனுள் பிரசவம் கழிந்த ஒரு நாயர் குலப் பெண் அகப்பட்டுக்கொண்டாள் எனத் தெரிய வந்தது. வெறி கொண்டு அலைந்த தாழ்த்தப்பட்டவர்களால் அது ஒரு பிரச்சினையாகவே எடுத்துக் கொள்ளப் படவில்லை. காரணம் மேல்சாதியைச் சேர்ந்த அந்தப் பிஞ்சுக் குழந்தை வளர்ந்து ஆளானாலும் இப்படித்தானே நம்மை அல்லது நம் இனத் தலைமுறையினரை சாதியின் பெயரால் கொடுமைப்படுத்தும் என்ற எண்ணமே!

இப்பொழுது உண்ணித்தானுடைய வீடு பயங்கரமாக எரிந்து கொண்டிருந்தது. தீ வைத்தவர்களில் இளகிய மனம் படைத்த இளைஞன் ஒருவன் மற்ற இளைஞர்களெல்லாம் அந்த இடத்தை விட்டு நகர்ந்ததும், ரகசியமாக அவ்வீட்டிற்குள் நுழைகிறான். மேற்கூரை சரிந்து கீழே விழ ஆரம்பித்திருந்தது. உள்ளேயிருந்த

படிப்பகம்

www.padippakam.com



அந்தப் பிள்ளைத்தாய்ச்சியையும் அவளுடைய பிஞ்சுக்குழந்தையையும் சுமந்துகொண்டு அவன் வெளியே வருகிறான். இரட்சிக்கப்பட்ட தாய்க்கும், பிள்ளைக்கும் லேசான தீக்காயங்கள்தான் பட்டிருந்தன. (கல்மாலையறுப்பு – தன்மானப் போராட்டத்தின் போது உண்டான விளைவின் பேரில் இது ஒரு கொலைக்கேசாக ரிஜிஸ்டர் செய்யப்பட்ட போது இப்பெண் கொடுத்த வாக்குமூலத்தின் காரணமாக பின்னர் இவ்விளைஞன் விடுதலை செய்யப்பட்டான்.)

மேற்கண்ட செயல்களால் கோபம் கொண்ட மேல்சாதியினர் பதிலுக்குப் பதில் தாழ்த்தப்பட்டவர்களுடைய வீடுகளுக்குள் ஏறி கொள்ளையடித்தனர். கண்ணில் பட்டவர்களெல்லாம் அடித்து நொறுக்கப்பட்டார்கள். இதன் பேரில் தாழ்த்தப்பட்டவர்களுடைய குடில்களெல்லாம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. நியாயாதிபன்மார் வந்து பார்வையிட்டுச் சென்ற பிறகு இறுதியில் கேஸ் எடுக்கப்பட்டதோ தாழ்த்தப்பட்ட சனங்களின் மீது மாத்திரமாக இருந்தது. போதாததற்கு போலீஸ் லத்தியடி வேறு! இதைக் கண்டு பயந்த தாழ்த்தப்பட்டவர்களில் சிலர் ஊரைவிட்டே ஓடிவிட்டனர். எஞ்சியவர்கள் என்ன செய்வதென தெரியாததால் கிறிஸ்தவ மதத்திடம் போய் சரணடைந்தார்கள். காரணம் அவ்வேளையில் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியது கிருஸ்தவ மிஷனரி ஊழியரான எட்மண்டாக இருந்தார். இவர்தான் வீடிழந்த தாழ்த்தப்பட்டவர்களை அவரது மிஷனின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கிக்கொண்டிருந்த பள்ளிக்கூடங்களுக்குள் அழைத்துக் கொண்டு போய் தங்கவைத்து உடுத்துவதற்காக துணி வாங்கிக் கொடுத்தார். உண்ண உணவில்லாதவர்களுக்கு உணவு கிடைக்க ஏற்பாடு செய்தார். கலகத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற உதவியதும் இவர்தான்.

இந்தச் சேதி தென்திருவிதாங்கூர்க்காரரான அன்றைய மாபெரும் தலித் போராளியான அய்யங்காளியின் செவிக்குப் போய்ச் சேரவே, அன்றைய திவானின் அனுமதி பெற்று மீண்டும் அதே போல பெரிநாட்டு தேசத்தில் பொதுக்கூட்டத்தைக் கூட்ட அய்யங்காளி ஏற்பாடு செய்கிறார். ஆண்களும் பெண்களுமாக கிட்டத்தட்ட நாலாயிரம் தாழ்த்தப்பட்ட சனங்கள் கலந்து கொண்டதாக அன்றைய பத்திரிகையான 'மலையாளம்' குறிப்பிடுகிறது

அவர் அப்பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டதாவது: "தென் திருவிதாங்கூரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட பெண்கள், அணிந்திருந்த கல்மாலைகளை கழட்டி எறிந்துவிட்டார்கள். சாது பரிபாலன சங்கத்தின் முயற்சியின் பலனாக மேல் சாதியினரின் வற்புறுத்தலின் பேரில் அணிந்து கொண்டு திரிந்த அடிமையின் சின்னங்களை மார்பிலிருந்து தூக்கி எறிந்துவிட்டு இப்போது பிளவுஸும் ரவிக்கையும் அணிய ஆரம்பித்து விட்டார்கள். (முன்பு பெண்க

படிப்பகம்

www.padippakam.com



ளாக இருந்தாலும்கூட இங்கு தாழ்த்தப்பட்டவர்கள் மார்புகளை துணிகளால் மறைக்கக் கூடாது. இது அன்றைய சட்டம்) இனி கல்மாலைகளை அறுத்தெறிந்துவிட்டு நீங்களும் (பெரிநாட்டைச் சேர்ந்தவர்கள்) இதுமாதிரி மனிதர்களைப் போல ஆடையணிந்து நடக்க வேண்டும். இந்த அடிமையின் சின்னங்கள் கழட்டி எறியப்படுவதால்தான் மேல்சாதியினர் கோபம் கொண்டு இப்படி நம் மீது பாய்கிறார்கள். இங்கே குழுமியிருக்கக்கூடிய எல்லா சனங்களும் இதே இடத்தில் வைத்து உங்கள் கழுத்தில் கிடக்கக்கூடிய கல் மாலைகளை இப்போதே அறுத்தெறிய வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டு ''உங்கள் எல்லாருக்கும் சம்மதம்தானே?'' என்று கேட்டார். எல்லாரும் அதைக் கரகோஷத்துடன் ஆமோதித்தனர்.

பின்னர் இரண்டு கருத்த பெண்களை மேடைக்கு அழைத்து அவர் முன்னால் நிறுத்தி வைத்துக்கொண்டு, ''இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட எல்லாரும் இப்போது உங்கள் கழுத்தில் கிடக்கும் கல்மாலைகளை அறுத்தெரிய சம்மதம் தெரிவித்துள்ளீர்கள். அவ்வைகளை நீங்களே உங்கள் கரங்களால் அறுத்தெறிந்துவிடுங்கள்!'' என அய்யங்காளி சொல்லி வாய் மூடுமுன்பே கூடியிருந்த பெண்கள் தங்கள் கல்மாலைகளை அறுத்து வீசத் துவங்கினார்கள்.

நிமிடங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் கல்மாலைகள் தரையில் மலைபோல் குவிந்துவிட்டன! (இந்த் சம்பவங்களை விசாகன் தேவன் நேரிட்டு கண்டதாக டி. எச். பி. செந்தாரசேரி அவர்கள் தான் எழுதிய 'அய்யன்காளியின் வாழ்க்கை வரலாறு' புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். பக்கம் 103.) இச்சம்பவம் மேல்சாதிக்காரர்களிடையே கடுங்கோபத்தைக் கிளறிவிட்டிருந்தது.

உதாரணத்திற்கு, போராட்டம் நடந்த பெரிநாட்டில் ஒரு தெருவில் கழுத்தில் இழிந்த சின்னமான கல்மாலையின்றி ஒரு தாழ்த்தப்பட்ட பெண் நடந்து செல்லவே, வழியருகில் உட்கார்ந்திருந்த மேல்சாதிக்காரர் ஒருவர், ''உன் கழுத்திலுள்ள கல்மாலைகள் எங்கே?'' என்று அதிசயத்தோடு கேட்கிறார்.

அதற்கு அப்பெண் ''அய்யங்காளி சொன்ன அன்றே அதைப் பொதுக்கூட்டத்தில் வைத்து அறுத்தெறிந்துவிட்டேன்'' என்கிறாள்.

''அப்படியா'' என அதிசயப்பட்ட அம்மேல்சாதிக்காரர் ''அப்படீன்னா இதோ நான் உன் காதுகளில் ஒன்றை அறுத்துவிடுகிறேன்'' என, அப்பெண்ணின் செவிகளில் ஒன்றை அறுத்து எறிந்துவிடுகிறார். (டி. எச். பி. செந்தாரசேரியின் அதே புத்தகம். பக்.108.)

தலைவிரித்தாடிய சாதிக்கொடுமைக்குரிய இச்சான்று (புதைந்து கிடந்த) கேரள வரலாற்றுக்குள்ளிருந்து சமீபத்தில் வெளிக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ●

படிப்பகம்

www.padippakam.com



23ஆம் பக்கத் தொடர்ச்சி –

பயன்பாட்டுக்குப் பின்னால் மனிதனால் கணிக்கக்கூடிய அம்சமாய் இருப்பது வணிகம்தான் என்பது மனிதனுக்கு எப்போதும் சுறுசுறுப்பை அளிக்கக்கூடிய விஷயந்தான்.

மூன்றாம் காரணம்: இந்திய நாடு மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டபோதே, ஒரு மாநிலம் அதன் மொழியால் தான் ஆளப்பட வேண்டும் என்னும் நியாயம் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. எனவே மாநில ஆட்சி மொழியை உறுதி செய்யும் பொருட்டு ஆட்சித்துறை, கல்வித்துறை, நீதித்துறை ஆகியவை மாநில மொழியால் வழிநடத்தப்பட வேண்டும். அதனடியாக மக்களின் வாழ்வியக்கமும் அது சார்ந்த கலை இலக்கியப் பண்பாட்டு வெளிப்பாடுகளும் அதனதன் தனித்துவத்தோடு செறிவுறுத்தப்பட வேண்டும். ஒரு மனிதன் தன் அனைத்து உயிர்த்துவங்களின் வீரிய வெளிப்பாடுகளோடும் முழுமையுறும்போதுதான், அவன் இன்னொரு முழுமையுடன் சரிநிகர் சமானங்களாக இயைந்து வாழுதல் சாத்தியம்.

மாநில மக்களிடையே மொழிநிலை சமத்துவத்தையும், வேற்றுமைகளற்ற வாழ்நிலை - நுகர்நிலை சமத்துவங்களையும் உறுதி செய்யத்தான் மாநில அரசுகளின் நிதிநிலை அறிக்கைகளும் நலவாழ்வுத் திட்டங்களும்.

வாழ்க்கை என்பது மொழியால் கட்டப்படுவதுதான் – அர்த்தமாக அடையாளமாக, சித்தமாக, சொல்லற்ற மௌனமாகக்கூட. சிக்கல்கள், தீர்வுகள் என்பன மொழியின் பின்னல்கள், அவிழ்ப்புகள்தாம். மொழியால் வனையப்படும் மனித மனத்தினுள் வாழ்வின் சாரமாய்த் தேங்கும் சூடும் சுரணையும்தான் சினமாகவும் தொனியாகவும் அளக்கப்படுகின்றன. மொழியே மனிதன் என்னும் முக்கியத்துவம் உணர்ந்து நாட்டை மொழிவழி அலகுகளாகத் தொகுத்ததொன்றே அரசியல் ரீதியான தீர்வுகளை இலகுவாக்கக்கூடிய சரியான திசைவழியாகப் படுகிறது. ஏகத்துவம் பேசும் அதிகாரக் குவிமையங்களுக்கு இதில் ஒவ்வாமை இருக்கலாம். ஆனால் பன்மைத்துவப் போக்கில் 'சரிநிகர் சமானம்' காண இதுவே துணை செய்யும் வழியாய் இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த நாடு மாநிலங்களின் ஒன்றியமாதலால், மாநில அரசுகளிடையேயும் மைய அரசோடும் ஒருங்கிணைந்து செயல்பட ஒரு ஊடகம் இருந்தாக வேண்டும். அந்த ஊடகம், சம்பந்தப்பட்ட மாநிலத்தின் மொழியாகவே இருந்துவிட்டால் உவப்பாயிருக்கும்தான். அப்படி இல்லாமல் போனால்? இதற்கொரு இழப்புகளற்ற, உறவுச் சமன்பாடுகளை நிலைப்படுத்துகிற, நிரந்தரத் தீர்வு இருந்தே ஆக வேண்டும். அப்பொழுதுதான் நாடு முழுவதற்குமான ஒருமுக வளர்ச்சியும் உள்ளார்ந்த உறவும் சாத்தியப்படும்.

மாநில அரசின் ஆட்சிமொழி, மைய அரசின் ஆட்சிமொழி ஆகிய இரு புள்ளிகளிலும் தமிழக அரசின் நிலைப்பாடு என்ன? நடைமுறை நிலவரம் என்ன?

1956இல் மொழிவழி மாநிலங்கள் உருவான கையோடு அடுத்தகட்ட நடவடிக்கையாக தமிழ்நாட்டின் அன்றைய காங்கிரசு அரசு தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் கொண்டு வந்தது. அதை நடைமுறைப்படுத்த ஏதுவாக ஆட்சிச்சொல் அகராதி உருவாக்கம் நடந்தது. தமிழில் கலைக் களஞ்சியம் தொகுக்கப்பட்டது. அவையாவும் தொடக்கநிலையில் சொல்லிக்கொள்ளும்படியான முன் முயற்சிகளாகவே இருந்தன. அவை மேலும் பரந்துபட்ட அளவில் சீராக வளர்க்கப்பட்டிருந்தால் ஓரளவு சரியாகவே வந்திருக்கலாம். இப்பொழுது நினைத்துப் பார்த்தால், காங்கிரசுக்காரத் தமிழர்கள் மெய்யான இந்திய உணர்வில் 'நாங்கள் தமிழர்கள்' என்று கூச்சல் போட்டு, ஆர்ப்பாட்டம் பண்ணிக்கொள்வதில் கூச்சப்பட்டிருந்தாலும் மொழிவழி மாநிலத் தீர்வை அர்த்தமுள்ளதாக்க அரசு எந்திர ரீதியாகத் தமிழுக்கு உகந்ததைச் செய்யத்தான் முயன்றிருக்கிறார்கள் என்று படுகிறது.

சரி, இன்றைய நிலை என்ன?

11-7-999ஆம் நாள் கலைஞர் பேசுகிறார்: "சில காரியங்களைப் படிப்படியாகத்தான் செய்யவேண்டும். தமிழ் ஆட்சிமொழியாக வேண்டுமென்பதில் நான் மாறுபட்ட கருத்து கொண்டவன் அல்ல." (தினமணி, 12-7-1999)

அதாவது, தமிழ் ஆட்சிமொழியாகும் பணி 43 ஆண்டுகளுக்குப் பின்னும், 'தமிழ், தமிழ்' என்று பினாத்தியெடுத்த

படிப்பகம்

www.padippakam.com



கழகங்களின் 30 ஆண்டுகளுக்கும் மேலான ஆட்சிக்குப் பின்னும் முற்றுப்பெறவில்லை. தமிழ் ஆட்சிமொழியாவதில் கலைஞர் தன் கருத்தை ஓர் உடன்பாட்டு வாக்கியமாகச் சொல்லும் மனநிலையில்கூட இல்லை. ஆக, 'தமிழ்நாட்டில் தமிழ்தான் ஆட்சிமொழி' என்று ஒப்புக்குச் சொல்லிக் கொள்வது கூட ஒரு வக்கற்ற பேர்வழியின் வாய்ச் சளாகம்தான்.

இந்த அவலத்தில் கலைஞர் அதே மூச்சில் சொல்கிறார்: "இந்தியா பலமாக இருக்க வேண்டும். மாநில மொழிகளும் மத்தியில் ஆட்சிமொழியாக வேண்டும். இத்தனை மொழிகளையும் ஆட்சிமொழியாக்க முடியுமோ என்று கேட்பர். எல்லா வளங்களையும் பெற்றுள்ள தமிழை இந்திக்கு அடுத்தபடியாக முதலில் ஆட்சிமொழியாக்க வேண்டும்."

தமிழ் மக்கள் எந்த அளவு கேணையர்களாக இருந்தால் இந்த அளவு அடாவடியாகக் கலைஞர் தன் அறிவு நாணயத்தை அவர்கள் மேல் சோதித்துப் பார்ப்பார்! இதில் யாருடைய தன்மதிப்பு கேவலப்பட்டுப் போகிறது என்பது கவலைக்குரிய விஷயம். நம்மீது காறித்துப்புகிறவன்கூட நம்மை மனிதர்களாக மதிப்பதால்தான் அப்படிச் செய்கிறான். மாடுகளின் மீது யாரும் துப்புவதில்லை. கலைஞர் தன் மக்களை மாடுகளாகக்கூட அல்ல, பீத்தின்னும் நாய்களாகக் கருதி, அந்தக் காலத்தில் இந்திப் பெயர்ப் பலகை அழிக்கப் பயன்படுத்தப்பட்ட தார்ச்சட்டியைக் கருணையோடு நம் தலையில் கவிழ்க்கிறார்.

அரசியல்வாதிகள் சாக்கடை மீன்கள். கலைஞர் அதில் 'வூடு கட்டி' நீந்திவரக் கற்றவர் என்பதற்குமேல் இதில் ஒன்றுமில்லாமல் இருக்கலாம். ஆனால், நமக்குத்தான் கலைஞரின் ஒற்றைப் பரிமாணமுள்ள உள்ளுறை இயக்கத்தைக் கண்டு மலைப்பதைத் தவிர்க்க முடியவில்லை.

மத்திய அரசின் ஆட்சிமொழி இந்திதான் என்பது நாடு விடுதலை பெறுமுன்பே தீர்மானிக்கப்பட்ட விஷயம். ஆனால் தமிழ்நாட்டில் அதே காலகட்டத்திலிருந்தே இந்தி எதிர்ப்பு இருந்து வருகிறது இதன் காரணமாகவோ, அல்லது எதிர்ப்பை வலுவாக்க ஏதுவாயிருந்த வட இந்தியத் தலைமையின் பாராமுகம் காரணமாகவோ, விடுதலைப் போரில் தமிழரின் எழுச்

படிப்பகம்

www.padippakam.com



சிமிக்க பங்களிப்பு போதிய கவனத்தோடும் அக்கறையோடும் ஒட்டுமொத்த இந்திய மனத்தில் பதிக்கப்படவில்லை. நேதாஜி யின் இந்திய தேசியப் படையின் மாபெரும் வலிமையாக நின்று தமிழர்கள் ஆற்றிய விடுதலைப் பணி முற்றாக இருட்டடிப்புச் செய்யப்பட்டுவிட்டது. ராஜாஜி போன்ற கூர்த்த மதியாளர் கள்கூட காந்தியார் போன்ற தலைவர்களுடன் கொண்டிருந்த நெருக்கம் காரணமாகவே தவிர்க்க முடியாதவர்களாயினர். தமிழும் தமிழர்களும் தவிர்க்கப்பட்டதற்கும் தவிர்க்கப்படுவதற் கும் காரணமாக உந்திச்சுழியிலிருந்து பீறிடும் ஒலிகளுக்குப் பழகிய 'இந்தி'ய நாவுக்கு ஒலி நயங்கொண்ட எளிய தமிழ் சொற்களை உச்சரிப்பதிலுள்ள சொல்லற்ற தவிப்பைக்கூடக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

நிலவியல் தொடர்ச்சி காரணமாகவும் இதிகாசப் பரவல் காரணமாகவும் இந்தியா ஒரே நாடாகப் பார்க்கப்படக்கூடுமே தவிர, மொழி, இன, பண்பாடு சார்ந்த வரலாற்றுச் சுவடுக ளால் இந்தியாவின் பல நிலப்பகுதிகள் தனி நாடுகளாயிருப்ப தற்கான தன்மை பெற்றவையே. அதில் தமிழ்நாடு முக்கியப் பகுதியாகும். அதன் முக்கியதுவத்திற்கு மொழியே மூலம்.

நேரு காலத்தை ஒட்டி இந்திய அரசியலில் தனித்த எளி மையோடும் தவிர்க்க முடியாத தலைமைப் பண்போடும் காம ராசர் எப்படி விளங்கினாரோ அதே போன்றதொரு இன்றிய மையாமை தமிழுக்கும் உண்டு. உலகத் தொன்மொழிகளுள் ஒன்றான தமிழ், இந்திய மொழிகளில் பத்தோடு பதினொன் றாகவோ, அல்லது சமஸ்கிருத வேர் சார்ந்தது என்று சொல் லிக்கொள்ளும் போலி சமாதானத்தோடோ தன்னை மலினப் படுத்திக்கொள்ளாது என்பதை இந்திய அரசியல் தன் முகப்பு வாக்கியமாக எழுதி வைத்திருக்க வேண்டும். அதை மறக் கும்போது தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு எளிதாகப் பற்றிக் கொள்ளும் பொறியாக விளங்கி வந்தது. 1937இல் சமஸ்கிரு தம் படிக்கத் தோதாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு இங்கு இந்தியைப் புகுத்த முனைந்த ராஜாஜிகூட பின்னாளில் இந்தி எதிர்ப்பாளரானது வெறும் அரசியற் காரணங்களுக்காக மட்டுமின்றி தமிழின் தொன்மையையும் தனித்தோடும் வேர்த் தன்மையையும் ஒதுக்கிவிட முடியாமல்தான் என்று நம்புவது அவருக்குச் செய்யும் மரியாதையாக இருக்கும். அதே நேரத்

படிப்பகம்

www.padippakam.com



தில் 'எங்கள் தமிழ்தான் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த மொழி; காலத்தைப் புறங் கண்ட கன்னி கழியாத மொழி' என்றெல்லாம் விருதாவாகப் பிதற்றிக்கொண்டு திரியும் தீவட்டித் தடியர்களால் தமிழுக்கு எவ்வித ஊதியமும் இல்லை, உயர்வும் இல்லை என்னும் நடைமுறை மெய்மையை நாம் நழுவவிட்டுவிடக் கூடாது. விட்டதன் பலன்தான் இன்று விடாமல் துரத்துகிறது.

விடுதலை பெற்ற இந்தியாவில் இந்தி மத்திய ஆட்சிமொழியானது. அதை நிராகரிக்கிற உத்வேகம் தமிழ்நாட்டில் இருந்தது. ஆகவே, 'இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலமும் தொடர்பு மொழியாக இருக்கும்' என்னும் 'நேருவின் வாக்குறுதி' பெறப்பட்டது. 'திராவிடநாடு திராவிடருக்குகே' என்னும் முழக்கம் வாயிலாகத் தமிழ்நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை கழகத்தினரால் வளர்த்தெடுக்கப்பட்டது. பிரிவினை வாதத்தில் கழகத் தலைவர்களுக்குத் தெளிவும் நம்பிக்கையும் இருந்ததோ என்னவோ, இளைய தமிழ்ச் சமுதாயம் அதை ஒரு அணையாப் பொறியாய் நெஞ்சில் ஏந்திக்கொண்டது. ஒரு கட்டத்தில் பிரிவினை கோரிக்கையைக் கைவிட வேண்டும், அல்லது சிறைப்பட வேண்டும் என்னும் கட்டாயம் வந்தபோது கழகம் கை கழுவிவிடவே செய்தது. 'இப்போதைக்குப் பரணில் போட்டுள்ளோம். தேவை வரும்போது எடுத்தாள்வோம்' என்று மக்களுக்குப் பூஞ்சையானதொரு சமாதானம் சொல்லப்பட்டது.

பிரிவினை கோரிக்கை காரணமாகவும், இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஏதாவதொரு வகையில் தொடர்ந்துகொண்டே வந்து, 1965 இல் அப்போது மத்திய அமைச்சராயிருந்த சி. சுப்பிரமணியம் தன் பதவியைத் துறந்து வெளியேறும்படியாகத் தமிழ்நாடு முழுதும் கட்டுக்கடங்காப் பெரும் கிளர்ச்சியாக வெடித்தெழுந்தது. கிளர்ச்சியை வியக்க வைக்கும் திறமையோடு மாணவர்களே திட்டமிட்டு, முன்னின்று நடத்தினர். ஒரு உள்நாட்டுப் போர் என்று வகைப்படுத்தும் அளவுக்குப் பீறிட்டுப் பொங்கிய அந்தக் கிளர்ச்சியில் கழகத் தலைமை முற்றாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டது. எனினும், அத்தோடு காங்கிரசுக் கட்சி ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, கிளர்ச்சியின் புறவகைப் பலன்களைக் கழகமே அறு

படிப்பகம்

www.padippakam.com



வடை செய்தது. அன்றைக்கு ஆளத் தொடங்கியவர்கள் இன்றைக்கும் ஆண்டுகொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களால் முடிந்ததெல்லாம் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை அதன் பிறகு இல்லாமல் செய்ததும், அதே சமயம் இந்தி ஆதிக்கத்தை கண்டுகொள்ளாமல் விட்டதும்தான்.

கழகம் ஆட்சிக்கு வந்ததும், அதுவரை 'தேர்வுக்கு மதிப் பெண்கள் சேர்த்துக் கொள்வதில்லை' என்னும் புரிதலோடு இந்தியையும் சேர்த்து நடைமுறைப்படுத்தப்பட்ட மும்மொழித் திட்டம் ஒழிக்கப்பட்டு, தமிழ், ஆங்கிலம் என்னும் இருமொழித் திட்டம் கைக்கொள்ளப்பட்டது. இப்படியாக அரசு உதவி பெறும் தமிழ்நாட்டுப் பள்ளிகளிலிருந்து இந்தி ஒழிக்கப்பட்டு விட்டது. அத்தோடு அரசும் கண்ணை மூடிக்கொண்டது.

இந்திதான் ஒழிக்கப்பட்டது. ஆனால் இந்தி ஆதிக்கம் எதற்காகவும் யாருக்காகவும் தயக்கம் காட்டாமல் இன்றுவரை கப்பும் கவருமாக நன்றாகவே கிளைத்துச் செழித்து வருகிறது. கடந்த 14 ஆண்டுகளாகத் தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கியதும் (பெட்டி வாங்கிய காலம் அது) பெரும்பகுதி நேரம் என் வீட்டுக்குள்ளேயே நான் அந்நியனாக முடக்கப்படுகிறேன். சர்வ சுதந்திரமாக இந்தி என் வீடு முழுக்க விளையாடி வருகிறது. என் இருப்பைப் பற்றி அது கவலை கொள்ளவே இல்லை. இது எவ்வளவு பெரிய அவலம்! ஆற்றவொண்ணா சோகம்! நானும் என் பங்குக்கு என் திராவிட அடையாளத்தைப் பிடிவாதமாகக் காத்துக்கொள்ளும்பொருட்டு இந்தி படிப்பதில்லை என்று அடமாயிருக்கிறேன். (திராவிடன் என்பது தமிழன் என்பதின் சர்வதேச ஒலியாக்கம்தான் என் பதற்குமேல் அதில் கூடுதல் பரப்பு இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை.)

இப்படியாக, என் 'வீடு பேற்றை' இழந்து வெளுத்துப் போவதிலிருந்து என்னைக் காப்பாற்ற இந்த அரசு என்ன செய்தது? (சன் டி.வி. பார்த்து சரிகட்டிக் கொண்டிருக்கலாம் தான். காசும் காலமும் கட்டுப்படியாகவில்லை. என் செய்ய?)

நேருவின் வாக்குறுதி நமக்கென்ன செய்தது? இந்திய அரசுச் செயல்பாட்டு நீரோட்டத்தில் தமிழகத்தை ஒரு தீவாக நிறுத்தி வைத்தது. படிப்படியாக, தமிழ்நாடு பற்றிய ஒரு

படிப்பகம்

www.padippakam.com



அந்நியத் தன்மையையும் மறதியையும் மற்றவர்களுக்கு வழங்கியது. இந்திய அளவில் கட்டமைக்கப்பட்ட கலை இலக்கிய பண்பாட்டு அமைப்புகளின் அங்கீகரிப்புகளில் தமிழனின் பங்கை சல்லடை போட்டுத் தேடும்படியாக்கியது.

அண்மையில் சாகித்ய அகாதெமி விருது தனக்கு வழங்கியிருந்தால் அது தண்டனை வழங்கியது போலாகும் என்று கலைஞர் சொல்லியிருக்கிறார். அவரே சொல்லிவிட்டதால் தமிழகத்து எழுத்தாளர்களும் வழிமொழிவதுதான் இதற்குத் தீர்வா? அரசுக்கு இதில் ஒரு பங்கும் இல்லையா?

இந்தியை ஒழித்துவிட்டு இந்தியாவில் இருக்கத் தீர்மானித்துவிட்டோம் என்றால், நம் இருப்பை எப்படியெல்லாம் நிலைப்படுத்துவது, தலைப்படுத்துவது, புகழ்ப்படுத்துவது என திட்டமிட்டுச் செயலாற்றி வெற்றி பெற்றிருக்க வேண்டாமா? அவ்வெற்றி தமிழ் தந்த வெற்றியாய் இருந்திருக்க வேண்டாமா?

நேருவின் வாக்குறுதி ஒரு கோப்பில் கோர்க்கப்பட்ட தாள், அவ்வளவுதான். அது தானாக வளரும்; நக்கும்; பெருகும், கோப்புக்குள்ளேயே. ஒரு உதாரணம் சொல்லத் தோன்றுகிறது. அண்மையில் காவிரிப் பிரச்சினையை வாஜ்பேயி தலையிட்டுத் தீர்த்து வைத்தமைக்காகத் தமிழக அரசு இன்னும் நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறது. சென்ற மே மாதத்தில் குடகுப் பகுதியில் கனத்த மழை பெய்தது. கர்நாடக விவசாயிகளோடு சேர்ந்து தஞ்சை விவசாயிகளும் மகிந்துபோனார்கள். பெருமழை எனில் மேட்டூருக்கு நீர் வருமல்லவா? ஆனால் வரவில்லை. கர்நாடக நீர்த்தேக்கங்கள் யாவும் நிரம்பி அலையடிக்கின்றன. இன்னும் வழியவில்லை. கர்நாடகம் உரிய நீரை வழங்கிவிட்டதாக துரைமுருகன் சொல்கிறார். 'நாங்கள் ஒன்றும் நீர்விடவில்லை' என்று கர்நாடக அமைச்சர் சொல்கிறார். தஞ்சை பாசனத்துக்கு ஜூன் 12இல் நீர் திறந்துவிடவில்லை. ஜூலையில் யில்தான் திறந்து, அதுவும் உடனடியாக நீர்ப்பற்றாக்குறையால் முறைப்பாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தொடர்ந்த கனமழையால் ஆகஸ்ட் 11ஆம் நாள்தான் மேட்டூருக்கு ஒரே நாளில் 3அடி நீர் வந்தது. வழிந்து வந்த நீர். அதைப் பிடித்து வைக்கிற வழிமுறையைக் கர்நாடகம் இன்னும் கற்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



கோப்பில் நீர்விடப்படும்; பெறப்படும். திறந்துவிடப்பட்ட நீர் வந்து சேரவில்லையே என்றால், நிலம் உறிஞ்சியிருக்கலாம்; வெய்யிலில் காய்ந்திருக்கலாம்; கால்நடைகள் தாகத்துக்குக் குடித்திருக்கலாம். விளக்கங்கள்தானா இல்லை?

ஒரு மாநிலத்தின் மொழி நலனோ, புனல் நலனோ, இப்படிக் கோப்புத் தாள்களாகப் பெற்று மகிழ்வதுதான் தமிழக அரசின் முற்றமுடிந்த பணியா?

அண்ணா காலத்தில் பயிற்றுமொழி பற்றி ஒரு விதி கொண்டுவரப்பட்டது. அதில் தாய்மொழியே முதன்மொழி என்பது முக்கிய விதி. ஒரு மாநிலம் மொழி வழியாகப் பிரிக்கப்பட்டபின் அந்த மாநில மொழிதான் முதல் மொழியாக இருக்க வேண்டும். மொழிவழியாகப் பிரித்ததின் அர்த்தம் அதுதான். இல்லையேல் வகைவகையான மொழிச் சிறுபான்மையினரையும் சேர்த்து பற்பல தாய் மொழிகளும் பயிற்று மொழிகளாகிவிடும். விதியைக் கொண்டுவந்தவர்களுக்கு இது தெரியாதா என்றால் தெரியாமலா, 'இதைப் பத்தாண்டுகளில் மறுபரிசீலனை செய்யலாம்' என்றொரு துணை விதியையும் சேர்த்தார்கள். சரி, பரிசீலித்தார்களா என்றால் அதுவும் இல்லை. இப்படியொரு கோளாறான விதி கொணர்வதற்கு இருமொழித் திட்டமே காரணமாயிருக்க வேண்டும். 'தமிழ் நாட்டில் தமிழ்தான் பயிற்று மொழி. இரண்டாம் மொழியாக மாணவரின் தாய்மொழி அல்லது ஆங்கிலம் கட்டாயப் பாடமொழி. மூன்றாவதாக இந்தி அல்லது இந்திய மொழிகளுள் ஒன்று விருப்பப்பாட மொழி' என்னும் விதத்தில் (பின்னிரண்டு மொழிகளும் உசிதமானபடி) மும்மொழித் திட்டம் கைக்கொள்ளப்பட்டிருந்தால் இன்று தமிழ் முதன்மைப்பட்டிருக்கும். இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு இருப்பதிலும் ஓர் அர்த்தம் குவிந்திருக்கும். தமிழை மத்தியில் ஆட்சிமொழியாக்க வேண்டும் என்னும் கோரிக்கையிலும் ஒரு நியாயம் இருந்திருக்கும்.

அப்படியல்லாமல், குழந்தைக்குத் தாய்மொழிதான் பயிற்று மொழி என்பது அரசின் கொள்கை எனில் (நீதிபதி மோகன் குழுவும் இதையே பரிந்துரைக்கிறது), சிறுபான்மையினருக்கு அரசியல் சட்டம் வழங்கும் உரிமை என்னும் போர்வையில் தாய்மொழிக்கு மாற்றாக ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக்

படிப்பகம்

www.padippakam.com



கிக்கொள்ளும் புரட்டுத்தனத்தை அரசு தடை செய்ய வேண்டும். 'தமிழில் படித்தால் வேலை கிடைக்காது; உலகத்தோடு உறவாட முடியாது' என்றெல்லாம் பேசி வயிற்றுக்கு மேலாக வளர மறுக்கும் சர்வதேசக் குடிமகன்கள் சிறுபான்மையினர் தங்கள் தாய்மொழியில் படித்தால் மட்டும் வேலை கிடைத்துவிடுமா என்பதன் உண்மை உணர வேண்டும். அல்லது, தாய்மொழிக் கல்வியானது வேலைக்கான ஊடகம் மட்டுமல்த, அது உயிர்த்துவத்தின் தொடர்பரவல் என்பதில் சிறுபான்மையினரே உறுதி காட்ட முடியும் எனில், பெரும்பான்மைத் தமிழருக்கு மட்டும் அந்தச் சுரணை வேண்டாமா என்பதையும் விளக்க வேண்டும். இதுபற்றி மக்களைத் தெளிவுறுத்த அரசு முயன்றிருக்க வேண்டும்.

தமிழக அரசு என்ன செய்தது?

இந்தியா போன்ற மாநிலங்களின் ஒன்றியத்தில் ஒவ்வொரு முயற்சியிலும் சிக்கல்கள் தோன்றத்தான் செய்யும். தோன்றினால்தானே தீர்வும் பிறக்கும்! தமிழை முதன்மைப்படுத்துவதில் தமிழக அரசு என்னென்ன முயற்சிகள் எடுத்தது? என்னென்ன முட்டுக்கட்டைகளைச் சந்தித்தது? எத்தனை முறை நீதிமன்றப் படிகளை மிதித்தது? எவ்வெவ் வழிகளிலெல்லாம் மக்களின் ஒத்துழைப்பைக் கோரிப் பெற முயன்றது?

ஒன்றுமில்லை. ஒரு இழவும் இல்லை.

இதோ பட்டினிப் போராட்டத்தைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட குழு தன் அறிக்கையை அளித்துவிட்டது. அறிக்கை முழுமையாக நிறைவளிக்கவில்லை எனினும், அதன்மேல் ஒரு நல்ல முடிவெடுத்து, இந்தக் கல்வியாண்டே நடைமுறைப் படுத்தக் கோரிய போராளிகளின் முகத்திலடித்தாற் போல, "பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் கவனிக்கலாம்" என்று தூக்கிக் கிடப்பில் போட்டாயிற்று. ஆக, இந்தக் கல்வியாண்டைக் கடத்தியாயிற்று.

மொழியால் பதவி பெற்றவர்களிடம் மொழிக் கோரிக்கை எவ்வளவு அற்பமாய்ச் சீரழிகிறது!

உயர்நீதி மன்றத்துக்குக் கீழுள்ள நீதிமன்றங்களில் தீர்ப்பு உட்பட எல்லா நடவடிக்கைகளும் மாநில மொழியிலேயே

படிப்பகம்

www.padippakam.com



நடத்தப்படலாம். உயர்நீதிமன்றத் தீர்ப்பு இந்தி அல்லது ஆங்கிலத்தில்தான் எழுதப்பட வேண்டும் என்பது இன்றுள்ள விதிமுறை. இதை மாற்றி, உயர்நீதிமன்றம் அந்தந்த மாநிலத்துக்குரிய நீதித்துறையின் உச்சமன்றம் என்பதால் அதன் தீர்ப்பையும் மாநிலமொழியிலேயே வழங்க வேண்டும் என்று மேற்கு வங்க அரசு தன் சட்டசபையில் முன் முயற்சி எடுத்தது ஆனால் தமிழக அரசு அதுபற்றி யோசிக்கவேயில்லை.

சிறப்பு நீதிமன்றங்கள் கையாளும் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்களுக்குக் குற்றப்பத்திரிகையைத் தமிழில் தரவேண்டும் என்று அண்மையில் கோரினார்கள். வழக்குகளை இழுத்தடிப்பதற்குக் கையாளும் தந்திரம் என்றுதான் ஊர் முழுக்கப் பேசப்பட்டதே தவிர, கேட்கும்படியான நிலையில்தான் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது (கேட்டவர்களும் புறக்கணித்த விஷயம்தான்) என்பது உணரப்படவில்லை. தூங்கும் அரசுக்கு நிழலானவர்களும் நியாயத்தை எடுத்துச் சொல்லும் நிலைமைதான் இது.

கலைஞர் இதுவரை தமிழுக்கு செய்ததும், செய்யப் போவதும் என்ன?

மொழி, நாடு பற்றிய அரசியல் போக்குகளில் 1938 முதலே கலைஞர் ஓர் வாழும் சாட்சியாகவும், பங்காளராகவும், கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக சுக்கானைத் தன் கைக்குள் வைத்துள்ள நடுநாயகமாகவும் இருந்துகொண்டிருக்கிறார் என்பது அவருக்குக் கிடைத்துள்ள மாபெரும் வரலாற்றுப் பேறு. அப்பேற்றை மானுடக் கடமையாக்கிச் செயல்பட்டிருக்கிறாரா என்பது நம் கேள்வி.

மேலும், ஒருவரால் ஒரு காரியம் ஆகும் என்று நம்பி, அவரே அந்தப் பொறுப்பில் இருந்தும் காரியம் ஆகாதபோது, அவரால்தான் ஆகாமல் போகிறது என்று அங்கலாய்ப்பது ஒன்றும் அறிவுக்குப் புறம்பான விஷயமாகிவிடாது.

இக்கேள்விகளுக்கெல்லாம் கலைஞர் தம் 'தமிழ்' மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்பதொன்றே விடையாகிறது.

"திராவிடத்தால் வீழ்ந்தோம்" என்னும் நூல் எழுதி பெரியார் போற்றிகளால் தமிழ் திக்கெட்டும் பேசப்பட்ட குணா

படிப்பகம்

www.padippakam.com

தமிழ் மொழியால் முடியும் எனச்
சாற்றுவது போதாது;
தமிழர்களால் முடியும் எனச்
சாதித்துக் காட்டுங்கள்
சங்கநாள் இலக்கியத்துச்
சாதனைகள் போதாது!
சமகாலச் சிந்தனைகள்
தமிழினிலே படையுங்கள்.

வாக்காளத் தமிழ்க்குடியே
வருங்காலம் தெரிகிறதா?
நாற்காலிக்காரர்களால்
நலிந்திட்ட தமிழ் மீட்கப்
போர்க்காலம் காணாமல்
பொற்காலம் நமக்கில்லை
'பார்க்கலாம்' எனப்பேசிப்
பதுங்காதே வெளியே வா!

உலைமூடி யாயிருக்கும்
தலைவர்களே, விண்ணப்பம்!
உலை கொதித்து மேல் பொங்கி
வெளியில் வரத் துடிக்கிறது.
உலைக் கொதிப்பை மூடாதீர்;
உளக் கொதிப்பு வெளிவரட்டும்.
உலை மூடிகாள்! சற்று
ஒதுங்கி இரும்; நன்றி பல.

தென்கடலில் ஈழப்போர்;
செந்நீரில் ஈழப் பூ!
தன் மடலை விரிக்கின்ற
செம்மலரை வரவேற்க
மண்ணுரிமை மீட்டோரின்
ஈகத்தைத் தொழுதேத்த
தன்னுரிமைப் போர் காணும்
தமிழர்களே எழுந்திருங்கள்.

**தணிகைச்செல்வன்**

படிப்பகம்

www.padippakam.com

## நாசரின் 'இருப்பு'

இருப்பை உணர்த்த மட்டும்
கூண்டுக்குள் அடைவதுண்டு
வானம் அளக்க முளைத்தும்
சிலகாலம் கிளிச் சிறகு

பிணத்துடன் உடன்கட்டை ஏற
நிர்பந்தம் கொள்வதுண்டு
கொடியின் சிரிப்பாய்ப் பிறந்தும்
சிலவேலை மலர்கள்

மகிழ்வைப் பகிரப்
பயணிப்பதுண்டு
துயர் கழுவ ஊறியும்
சிலநேரம் கண்ணீர்

விழுதுகள் பிடிப்பில்
விரிவதுண்டு
வேரை நம்பி வளர்ந்தும்
சிலவேறு மரங்கள்

செருப்பு மாலை பூண்டு
சிறுப்பதுண்டு
மரியாதை பீடமேறியும்
சிலபொழுது சிலைகள்

மனிதம் கிழித்துப்
புசிப்பதுண்டு
மகத்துவம் பேசித் தீர்த்தும்
பலவேளை மதக்கழுகுகள்

Printed by Mrs. Kavithasaran at Allwell Press, 31, T.K.S. Nagar, Chennai-600019. Published at 580, T.H. Road, Chennai-600021 & Edited by: Kavithaasaran.

படிப்பகம்